‘பாரத பூஷண’

டாக்டர். எஸ். சுப்பிரமணி ஐயர்

அவர்கள்

ஜீவிய சரிதையும் எழுதிய கடிதமும்

கூறிய உபந்யாசங்களும்.

ஒரு தேசபக்தர் எழுதியது

விலை அணா 12

சென்னை

‘சுதேசமித்திரன்’ பவர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1918

முகவுரை.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் மெய்ம் மொழியைப் பொய் மொழியாகக் கிடாமல் பனிவரை முதல் குமரி முனை வரையிலும், அதற்கப்பாலுமுள்ள கடல் கடந்த கண்டங்களிலும், புகழ்ந்தான் சரிதையைத் தமிழ்நடவை யிடத்தே வாழும் கற்றாரும் மற்றாரும் தமதம இன்னுயிர் உணர்ச்சி மன்னுயிரிடத்தே புகுதலான் பொருட்டு அறிதல் நலம். நாட்டினர்களுக்கு நலம் பல விளைப்பதென்னும் நாட்டமே கொண்டு துறந்தான் நீதிமணி ஐயனை, ஒழுக்கத்தா லுயருமாந்தர் நவின்றிட உணர்ந்தார் நன்மை கொள்ளுதல் திண்ணமெனக் கொண்டே இப் பெரியார் சரிதை பதிப்பிக்கப் பெற்றது. இதைத் தமிழுலகு ஏற்றுக்கொள்ளுமாக!

சுப்பிரமணிய முனீந்திரர்.



பிரஜா சக்தியின் மூல தர்மத்தை யறிந்து ஜன
ஆதிக்கத்திற்கு உடல், பொருள், ஆவி மூன்
றையும் பாரத மாதாவின் திருவோலக்
கத்தில் அர்ப்பணஞ் செய்த
புருஷோத்தமர்.

1. தமிழ்நாடு தவமுடைத்து.

பிரபஞ்ச சரித்திரத்தில் தோன்றும் இராஜ்யங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு காலத்திலும் மகான்கள் தோன்றி, குடிகளை நல்வழிப் படுத்துகின்றனரென்பது யாவரும் அறிந்த விஷயம். பரோபகாரமே திருவுருக்கொண்ட இம்மகான்களைத் தெய்வப்பிறப்பு என்பார் சிலர்; பகவானே இம்மண்ணுலகில் மானிடதர்மத்தை நிலைநிறுத்த அவதரித்தார் என்பார் மற்றுஞ்சிலர்; மனிதவர்க்கத்தில் இவர்களே, வீரஞ்செறிந்த புருஷோத்தமர்கள் என்பார் பின்னுஞ் சிலர். இங்ஙனம் சுயகாரியங்களைச் சிறிதும் நாடாது பொதுஜன காரியங்களையே சிரசாகவகித்து இரவும் பகலும் ஊழியஞ்செய்யும் இம்மகான்களைப் பல்வேறு மாதிரி கூறுவது எந்நாட்டிற்கும் இயல்பாம். நம் பரதகண்டத்திலும் பூர்வந்தொட்டே ஒவ்வொரு காலங்களிலும் கோடிக்கணக்கான ஜனங்களை நன்மைபடுத்தத் தோன்றும் பலபல மகான்களையும் அவதார புருஷர்களென்றழைப்பது வழக்கம். இம்மகான்கள் பெரும்பாலும் பார்வைக்குச் சாமானியர்கள்போல் காணப்படினும் குணத்திலும், மனத்திலும், தூய்மையிலும் சக்தியிலும் மிக்க உயர்ந்தவர்கள். அறனும் ஆற்றலுங் கொண்ட இவர்கள் தமர்போலனைவர்க்கும் தாழ்மைகூறி சேய்போலிருந்து வருவார். "நிறைமொழிமாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்" என்னும் ஆன்றோர் வாக்கியப்படி இவர்களின் கட்டுரை வாக்கியங்களே இவர்களுடைய வாழ்க்கையைப் பிரகாசிக்கச் செய்யும். இவர்கள் ஒருகாலத்தும் ஒருவருக்கும் கட்டுப்பட்டவர்களல்லர்.

மானம் வரினும் அவமானம் வரினும், சுகதுக்கங்கள் அடுத்தடுத்து நேரிடினும், இவர்கள் சுயாதீனத்தையே மேற்கொண்டு நடப்பர். பராதீன சம்பந்தமான யாதொரு காரியங்களிலும் இவர்கள் பிரவேசிக்க மாட்டார்கள். கனவிலுஞ் சரியே, நினைவிலுஞ் சரியே, இவர்கள் சுத்த சுதந்தரத்தன்மையைக்கொண்டவர்கள். தெய்வத்தன்மையை யொத்த இச்சுதந்தரத்தைச் சகலரும் ஒரேமாதிரியாக வேற்றுத்தாழ்ச்சியின்றி அநுபவிக்க வேண்டுமென்னும் அவாகொண்ட இவர்கள், சுதந்தரத்தை நிலைநிறுத்துதற்குரிய சர்வ முயற்சிகளையுஞ் சதா செய்வார்கள். இத்தகைய உத்தமர்கள் பூர்வத்தில் இருந்தார்களேயன்றி, தற்காலத்தில் இருப்பதரிது எனச் சிலர் கூறுகின்றனர். இது முற்றிலும் பிழையேயாம். நாட்டின் தர்மங்கள் குறைந்தகாலத்திலும், குடிகளின் கடமைகளும் உரிமைகளும் ஒடுங்குங் காலத்திலும், நாட்டையும் நாட்டிலுள்ளோரையும் முறையே நல்வழிப்படுத்தும் வழிகாட்டிகளாக இவர்கள் தோன்றுவார்கள். இவர்கள் முற்றுமுணர்ந்த முனிவர்களாக வில்லாவிடினும், பிரபஞ்சபோக்கை நன்கறிந்து, ஏனைய நாட்டார்கள் அநுபவிக்கும் சுதந்தர ஆதரிசங்களைத் தம்மைச் சுற்றியுள்ளவர்களும் அநுபவிக்கும்படிச் செய்துவைக்குந் தன்மையையுடையவர்கள். யோசிக்குமிடத்து, பகவத் சிருஷ்டியில் உண்டான ஸ்திரீ புருடர்கள் முற்று முணர்ந்த பூரணர்களாகவிருப்பது அரிதெனினு மரிது. ஆனால், இவர்கள் சாமானிய ஜனங்களைவிட ஞானத்தில் உயர்ந்தவர்களாய்ப் பகவானாலே ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்வதர்மங்களைச் செவ்வனே நடத்திப் பிறரையும் நடத்தும்படி வற்புறுத்துங் குணத்தைக்கொண்டவர்கள். நாடு சுதந்தரமற்று, அலங்கோலமாயிருக்குந் தருவாயில் இவர்கள் தங்கள் ஆண்மையினாலும், விவேகத்தினாலும், மனோவலிமையினாலும் முன்னின்று நாயகர்களாயிருப்

பார்கள். இத்தகைய தீரர்கள் எவ்வழியிற் சென்றாலும் நன்கு பிரகாசிப்பார்கள். ஒருகாலத்தில் சிறந்த மகான்கள் நாட்டில் இருந்தார்கள் என்பதிலேயே திருப்திகொண்டு கைக் கட்டி யிருத்தல் கூடாது. இத்தகைய கர்மமற்ற நிலைமை நாட்டை யழிப்பதுடன் ஜனங்களையும் அடிமைகளாக்கும். பண்டை வீரம் ஒருக்கால் நம்மை தேச பக்தர்களாகச்செய்வ தற்குரிய பெரிய நிதியா யிருக்கக்கூடும்; ஆனல், அவ்வீரம் தற்காலத்தில் எவ்வளவுதூரம் நம்மால் கையாளப்பட்டு வரு மென்பதை யறிந்து செய்யும் செயல்களே சாசுவித தேசாபி மானத்தைப் பலப்படுத்தும். பண்டை காலத்திய பெருமை யளவில் இந்தியாவைவிட அவ்வளவு சிறப்புகொண்ட நாடு வேறெதுவு மில்லை. நாட்டிற்காகவும், ஜனங்களுக்காகவும், சத்தியத்திற்காகவும் நம் நாட்டில் பண்டையில் அகப்பற்று, புறப்பற்று என்னும் இருபற்றுகளையுந் துறந்தவர்கள் பலர் இருந்தனர். ஆனல், மாறுப்படையெழுச்சியினல் இந்நாடு சிறந்த மகான்களைக்காணும் பாக்கியத்தைப் பெறாமலே சின்னாள்வரை யிருந்தது. நாட்டில் உண்டாகும் மாறுதல்கள் நாட்டின் அபிவிர்த்திக்கு அறிகுறியாம். மாறுதல்களின்றி சலனமற்ற இருக்கை நாட்டை யழிக்கும். பூர்வம், கிரீஸ், இதாலியா, எகிப்து முதலிய நாடுகள் சலனமற்ற இருக்கையை அவலம்பித்து வந்ததின் பயனக, இன்றைக்கு அவைகள் இருந்த இடந் தெரியாமலே யிருக்கின்றன. ஆனல், இந்தியா மட்டும் அடிக்கடி மாறுதலடைந்து வந்தது. இந்து இராஜாக்கள் காலத்தில் நடந்தவை யாவும் மகம்மதீய சுல்தான்கள் காலத்தில் மாறிக்கொண்டே வந்தன. இந்துதேச சரித்திரம் மாறிக்கொண்டே வருகின்றது. பூர்வத்தில், புத்தர், அசோகர், சேரசோழபாண்டியர்கள், அக்பர், சிவாஜி, ஔரங்கசிப் முதலியவர்களே இந்தியாவின் மாறுதல்களுக்குக் காரண:.

மத்தியகாலத்தில் நானாபர்னுவிஸ், தாந்தியாதோபி, இராணி இலட்சுமிபாயி முதலியவர்களும் இந்தியாவின் மாறுதல்களுக்குக் காரணம். அப்பால் வரவர இந்திய சரித்திரம் பழையபடி அசைவற்ற நிலைமையைக்கொண்டது. என்றாலும், இந்தியாவில் தற்பொழுது சேது இமயகிரிவரை ஊடுருவிப்பாயும் இராஜ்யதேசிய கிளர்ச்சிக்கு அஸ்திவாரமிட்டவர்கள் இராஜாராம் மோஹனராய், கேசவ சந்திரசேன் முதலிய பன்னிருவர்களே யாவர். முப்பது வருடங்களாக சாமானிய ஜனங்களின் மனதைக் கவராமலிருந்த இவ்விராஜ்ய தேசிய உணர்ச்சிகள் கடந்த இரண்டு வருடங்களாக இந்தியர்கள் ஒவ்வொருவர்களின் மனதையும் ஊசியைக் காந்த மிழுப்பதுபோல் ஆகர்ஷிக்கத்தொடங்கின. நாடெங்கும் சுதந்தர நவசக்தி பெருகத்தொடங்கிற்று. சுயராஜ்ய ஆதரிசம் தேசமெங்கும் பரவலாயிற்று. பிரபஞ்ச மாறுதல்களுக்குச் சற்றேனும் இடங்கொடுக்காமல் ஒரே பிடிவாதமாக அடிமைத்தனத்தையே பெரிதாகக் கருதியிருந்த பலர், சுதந்தர உணர்ச்சியினால் தலைமயங்கியிருக்கின்றனர். ஜனங்கள் ஸ்வதர்மம்—ஸ்வதந்தரம்—ஸ்வராஜ்யம் என்னும் இம்முச்சொற்களையே திரிமந்திரமாகக்கொண்டிருக்கின்றனர். கோட்டிமுதல் தொண்டமான் ஈறாக உள்ள சகலஜனங்களும் இராஜ்ய தேசிய விஷயங்களைப் பரிவுடன் கையாண்டு வருகின்றனர். பாரததேவி பந்தத்தினின்றும் நீங்கத் துடித்து விட்டாள். பாரதநாட்டினர் தொண்டுசெய்யும் அடிமைத்தனத்தைப் பழிக்கலானர். இராஜ்ய தேசிய கடல்களில் சுதந்தர அலைகளே சதா ஓயாமல் அடித்துக்கொண்டே யிருக்கின்றன. இத்தகைய கடல்களினிடையே பிரயாணஞ் செய்பவர்களுக்குச் சிறந்த மாலுமிகளாக காந்தி, திலகர், சுப்பிரமணி ஐயர் ஆக இம்மூவர் முச்சுடர்போல் விளங்குகின்றனர். இவர்கள் ஒவ்வொருவர்களும் தீர்க்கதரிசிகள்.

வருங்காலத்தை யுணர்ந்து செய்யும் மனோவலிமை கொண்டவர்கள். பிடிவாதத்தினாலேயே சகல காரியங்களைச்சாதிக்கும் வன்மையைக்கொண்டவர்—காந்தி. பிரயாசையினாலும், மெய் வருத்தத்தினாலும் சகல காரியங்களைச் சாதிக்கும் தீரத்தைக் கொண்டவர்—திலகர். நிறை மொழிகளினாலும் சமயோசித உபாயங்களினாலும் சகல காரியங்களைச்சாதிக்குந் தன்மையைக் கொண்டவர்—சுப்பிரமணி ஐயர். பத்து வருடங்களுக்கு முன்னர் வங்காளப்பிரிவினையால் உண்டான இராஜீய குழப்பத்தில் சென்னை இராஜதானியில் நடுநாயகமாய் விளங்கினவர் காலஞ்சென்ற ஸ்ரீமான். ஜி. சுப்பிரமணி ஐயர். 1917-ம் வருடத்தில் அன்னிபெஸண்டு டங்கீதாபஸ்தினால் உண்டான இராஜீய பெருங்குழப்பத்தில் நடுநாயகமாய் எங்கும் விளங்கினவர் டாக்டர். ஸர். எஸ். சுப்பிரமணி ஐயர். தளராத மனத்தினராய்ச் சலியாத வாக்கினராய்க் கடற்கரையின் கண்ணே அமைக்கப்பட்ட நிலைபத்தில் இவர் பீஷ்மரைப்போல் அடிக்கடி இராஜ தர்மத்தை உபதேசித்து வருகிறார். இவரே பெரியார். என்பீ "செயற்கரிய செய்வார் பெரியர்" என்பதே இதற்கு அத்தாட்சி. இப்பெரியார் பிறந்தது செந்தமிழ்நாடு. பாண்டிய குல மன்னர்கள் அறனும் ஆற்றலும் மிக்கவர்களாய்ப் பன்னெடுங் காலம் அரசுபுரிந்து வந்ததும் இம்மதுரைமாநகர். இது வையாறுபாய்ந்து பலவளங்கள் பெருகி, கழனியும் சோலையும், தென்னையும்,கமுகும்,வாழையும் பொருந்தி விளங்கும். தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கமென்னும் இம்முச்சங்கங்கள் தலைமைபெற்றிருந்தலால் இந்நகர் முத்தமிழ்ப் புலவர்களைப்பரிவுடன் வரவழைத்திருந்தது. இலக்கண இலக்கியநூல் வல்லோர் எண்டிசையினின்றும் பரிசுபெற வருவர். கல்வி கேள்விகளில் தனக்குவமை சொல்லொணாத இந்நகரிடையே நகரத்தார் பலர், அணிமணிகள் கொண்டு, சிறுஞ் சிறப்பும்

பெற்று வாழ்ந்த வாலாஜுர். அறமும் மறமும் மிக்க பெரு வள்ளலார் பலரும் இம்மாநகரில் வசித்து வந்தார். ஈடும் எடுப்புமில்லாத இம்மதுராமா நகரின்கண் நம் தென்னாட்டு அரும் பெருந்தகைஞர் கி. பி. 1842-ம் வருடம் அக்டோபர் மாதம் மூன்றாந் தேதியன்று பிறந்தார். "விவேகிகளுக்கு இருப்பிடம் தென்னாடு" என்பது பொய்யாகுமா? இத்தென்னாடு, பிரிட்டிஷ் அரசாட்சிக்கு முன்னர், சோழமண்டலம், சேரமண்டலம், பாண்டிய மண்டலம் என்னும் மும்மண்டலங்களாய் முடியுடை மன்னர் மூவர்க்குரியதா யிருந்தது. இத்தென்னாட்டில் கம்பன், வள்ளுவன், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், ஔவை முதலிய பல கவிவாணர்கள் பொலிவுற்று விளங்கி யிருந்தனர். சங்கரர், இராமானுஜர் முதலிய ஆசாரியர்களும், அறுபத்திமூன்று நாயன்மார்கள், பன்னிரு ஆழ்வார்கள் முதலிய பக்த கோடிகள் பலரும் வாழ்ந்து வந்தனர். காரைக்கால் அம்மையார், ஆண்டாள் முதலிய நாரீரத்தினங்களும் புகழ்பெற்றிருந்தனர். பின்னர், இடைகாலத்தில் ஸர். டி. மாதவராவ், ஸர். சேஷாத்திரி ஐயர், திவான் ரங்காசார்லு, ஆநந்த ரங்கப்பிள்ளை, ரகுநாதராவ் முதலிய எண்ணிறைந்த இராஜதந்திரிகள் பிறந்ததும் இத்தென்னாடே. சட்ட நிபுணரெனப் பெயர் பெற்ற ஸர். வி. பாஷ்யமய்யங்கார், கலியாணசுந்தரமய்யர், ஸர். டி. முத்துஸ்வாமி ஐயர் முதலியவர் பிறந்து வளர்ந்ததும் இத்தென்னாடே. ஆகவே, இத்தென்னாடு பெற்றெடுத்த அருந்தவப் புதல்வர்களில் சுப்பிரமணிய ஐயரும் ஒருவரல்லவோ? 'தம்மிற்றம் மக்களறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லா மினிது' என்பதை யுணர்ந்த சுப்பிரமணிய ஐயரின் தாய் தந்தையார், இவரை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து, 'தந்தை மகற்காற்று நன்றி யவையத்து முந்தி யிருப்பச் செயல்' எனச் சீராட்டிப் பாராட்டி வந்தார்.

2. கருமமே கண்ணாயினார்.

சுப்பிரமணி ஐயர் தகப்பனார் சுப்பய்யர் சாமானியமானவரல்ல. யாகாதிகள் நடத்தி நித்திய கர்மானுஷ்டானங்கள் அணுவளவும் பிசகாது அனுஷ்டித்து, சாஸ்திர சம்பிரதாயங்களில் பாண்டித்தியம் பெற்ற புராதன வைதிகர் குலத்திற் பிறந்தவர். சமஸ்கிருதத்தில் மிக்க தேர்ச்சி கொண்டவர். இராஜதந்திரிகளுக்குரிய சதுர்வித உபாயங்களையும் நன்கறிந்தவர். இவரிடம் சோம்பல் என்பது பிறக்கவேயில்லை. சதா கையும் காரியமுமாகவே யிருப்பர். ஓய்வின்றி எப்பொழுதும் சுற்றிக்கொண்டே யிருப்பதினால் இவரை 'சூறாவளி சுப்பய்யர்' எனக் காரணப்பெயரிட்டு அழைக்கலானார். இவர் 1794-ம் வருடத்தில் பிறந்து 1844-ம் வருடத்தில் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகமேறினார். சுப்பய்யருக்குக் கடைசியானவும் மூன்றாவது புத்திரனுமான சுப்பிரமணி ஐயர் இரண்டுவயது குழந்தையா யிருக்கையில் சுப்பய்யர் உயிர் துறந்தார். இவர் இராமநாதபுரம் ஜமீன்தாரிடம் வக்கீலா யிருந்தார். இப்பொழுது நியாயஸ்தலங்களில் வக்கீல்கள் வியாச்சியங்கள் தொடுப்பதும், எடுப்பதும், பரிபாலிப்பதுமான நடவடிக்கைகளை அக்காலத்திய வக்கீல்கள் செய்வதில்லை. பேருக்கு வக்கீலே தவிர காரியத்தில் ஒன்றுமில்லை. ஆனால் இவ்வக்கீல்கள் முக்கியமாக அக்காலத்தில் கிழக்கு இந்திய கம்பெனியாரின் ஏஜண்டுகளுக்கும், ஜமீன்தார்கள் நாயகன் மார்கள் பாளையக்காரர்கள் முதலிய பெரிய குடித்தனக்காரர்களுக்கும் அறிமுகங்காட்டி ஒருவரை யொருவர் அறிந்துகொள்ளுமாறு மத்தியஸ்தர்களாக

யிருந்து வந்தார்கள். சுப்பய்யர் இராமநாதபுரம் ஜமீன்தாரு
க்கு வேண்டிய சகல காரியங்களையும் செவ்வனே நடத்திவந்
ததை நாளைக்கும் அவர்கள் சொல்வதுண்டு. தகப்பனார் இறந்த
பிறகு சுப்பிரமணிய ஐயரை அவரது அருமைத்தாயார் வெகு
அன்புடன் ஆதரித்து வந்தார். 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்
குந் தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்' என்றபடி
மகன் கல்வி கேள்விகளில் சிறந்தவன் என்னுஞ் செய்தியைக்
கேட்டு, உள்ளம் பூரித்துத் தன் ஐம்பத்தைந்தாம் பிராயத்
தில் ஆவி இழந்தாள். குடும்பபாரம் மூத்தகுமாரரான இராம
ஸ்வாமி ஐயர்மீது விழுந்தது. இவர் சுப்பிரமணியத்தை ஒரு
வீதிப்பள்ளிக்கூடத்தில் முதல் முதல் படிக்கவைத்தார். சுப்
பிரமணியத்திற்கு ஆரம்பத்தில் ஆங்கிலேய எழுத்துக்களைக்
கற்றுக்கொடுத்தது ஒரு தையற்காரன். சுப்பிரமணியம் தன்
பத்தாம் பிராயத்தில் கிறிஸ்தவ பாதிரிமார்களால் ஏற்படுத்தப்
பட்ட மிஷன் பாடசாலையில் கல்விபயின்று, அப்பால் கிரு
ஷ்ணஸ்வாமி செட்டியார் ஸ்தாபித்த ஆங்கில பாடசாலையில்
படித்து வந்தார். ஆனால், சரியான படிப்பு மட்டும் 1856-ம்
வருடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஜில்லா பள்ளிக்கூடத்திற்கு
வந்துதான் ஏற்பட்டது. சென்னை இராஜதானி சர்வ கலா
சாலையினின்றும் வந்த மிஸ்டர் உல்லியம் உல்லியம்ஸ் என்ப
வரே தலைமை உபாத்தியாயரா யிருந்தார். இவருக்கு சுப்
பிரமணிய ஐயரிடம் அதிக அன்பு. இவர் மாணவர்களுக்கு விள
க்கவைக்கும் சக்தியைப் பெற்றிருந்தமையால் மாணவர்கள்
தலைமை உபாத்தியாயரிடம் அத்யந்த மரியாதை வைத்திருந்
தார்கள். ஆங்கிலேயபாஷா நடையை வெகு சாதுரியமாய்
இலக்கண அமைப்புகொண்டு கற்பிப்பதில் இவருக்கு யாரும்
இணையாகமாட்டார்களென பிற்காலத்தில் சுப்பிரமணிய ஐயர்
அடிக்கடி கூறுவதுண்டு. ஆங்கிலேய வசன நடைகளில் பிழை

யின்றி தனக்குண்டானதற்கு மிஸ்டர் உல்லிபம்லே முக்கிய காரணமெனப் பலகாலும் கூறிவருதலைப் பலர் கேட்டிருக்கின்றனர். படிப்பில் முதன்மை யுள்ளவரென்னும் மதிப்பைச் சிறு பிராயத்திலேயே இவர் பெற்றார். ஒவ்வொருவருடமும் வகுப்பில் முதன்மையாயிருந்து அநேக பரிசுகளைப்பெற்றார். இவர் படிப்பில் முதன்மையா யிருந்ததினாலே கவர்ன்மெண்டாரிடம் மாதம் 5 ரூபாய் பரிசுபெற்றிருந்தார். இக்காலத்திய பிரவேச பரீட்சைக்குச் சரியாக முதல்வகுப்புப் பரீட்சை யொன்று அக்காலத்தில் இருந்தது. இதில் சுப்பிரமணி ஐயர் கீர்த்தியுடன் தேறினமையால் ஜில்லா கஜெட்டில் இவரது பெயர் பதிவு செய்திருந்தது. மதுரை மாணவன் ஒருவன் பரீட்சையில் தேறியிருப்பதைக்கண்ட கலெக்டர், தன் கீழ் ஷரிஸ்ததார் உத்தியோகம் புரிபவரின் சகோதரனெனக் கேள்விப்பட்டுத் தன் ஆபீஸிலேயே மாதம் 20 ரூபாய் சம்பளங்கொண்ட உத்தியோக மொன்றைக் கொடுத்தார். சுப்பிரமணி ஐயர் தன் மனச்சாட்சிக்கு விரோதமா யிருப்பதை யறிந்தும் முதன்னுவிற்குப் பயந்து அவ்வுத்தியோகத்தை ஒருவாறு தன் 17-ம் பிராயத்தில் ஏற்றுக்கொண்டார். இவர் உத்தியோகத்திற்கு வந்தநாள் தொடங்கியே கலெக்டர் சுப்பிரமணி ஐயரின் மேல் தயவுகாட்டிவந்தார். இவர் கலெக்டர்ஆபீஸில் உத்தியோகம் புரிந்துகொண்டே சட்டப்பரீட்சைக்குப்படிக்க வாரம்பித்தார். நல்ல ஞாபகசக்தியும், ஆழ்ந்த யோசனையு மிருந்ததினால் ஜில்லா வக்கீல் பரீட்சைக்குச்சென்ற சுப்பிரமணியம் அப்பரீட்சையில் முதன்மையாகத் தேறினார். சென்னை உயர்தர நியாயஸ்தலத்தில் நியாயாதிபதியா யிருந்த இன்ஸ்நரை பரீட்சகரில் ஒருவரா யிருந்தார். ஸிவில் சட்டப்பரீட்சையில் யாவரும் ஆச்சரியப்படும்படி முதல்வகுப்பில் தேறினார். சுப்பிரமணியத்துடன் அக்காலத்தில் முதன்மையாகத் தேறின

வர்களில் தஞ்சாவூரில் கீர்த்தி பெற்ற வக்கீலா யிருந்த மிஸ்டர் என். சுப்பிரமணிய ஐயர் ஒருவர். பரீட்சையில் இவ்வளவு முதன்மையாகத் தேறியும் வக்கீலாக வருவதற்குரிய 'ஸனத்' சுப்பிரமணியத்திற்குக் கிடைக்க வில்லை. ஏனெனில், சுப்பிரமணிய ஐயர் ஜில்லா ஜட்ஜியாயிருந்த மிஸ்டர். ஆர். ஆர். காடன்துரையிடம் கேட்கவேண்டியதா யிருந்தது பற்றியே. காடன்துரை அதிக முன்கோபி. எதையாவதும் ஒன்றை நினைத்துக்கொண்டு நாளெல்லாம் 'கடுகடு' வென்றுஇருப்பது இவர் சுபாவம். சட்டத்தைக் கவனிக்காமல் தன் மனம் போனபடி தீர்ப்புச்செய்துகொண்டிருந்தமையால் இவரைக்கேட்க சுப்பிரமணியத்திற்குத் தர்மசங்கடமாயிருந்தது. காடன்துரை தாடி ஒருபுறமாக அசைந்தால் வந்தது அன்று துன்பம் எனப் பயப்படுவார்கள். அக்காலத்தில் அநேகமாக இந்திய ஸிவில் உத்தியோகத்தைச் சேர்ந்தவர்கள் இஷ்டப்படியே சகல நடவடிக்கைகளையும் நடத்தி வந்தார்கள். இவர்கள் வீதிகளில் சென்றால் பல்லாக்கு முகத்தை நோக்க லாகாது. இவர்களுக்குச் சரியாக வண்டியில் ஏறிச்செல்ல லாகாது. இவர்களைப் பார்த்தவுடனேயும் குனிந்து சலாம் செய்யவேண்டும். இவ்வளவு விபரீதமான காரியங்களை யார்தான் செய்யத் துணிவார்கள்? சுப்பிரமணிய ஐயர் தன்மனதைத் திடப்படுத்திக்கொண்டு ஜட்ஜியின் முன்பாக 'ஸனத்' வேண்டுவதற்கு விண்ணப்பமொன்றைக்கொடுக்கக் கையை நீட்டினர். கையை நீட்டினரோ யில்லையோ, அடுத்த நிமிஷம் கோர்ட்டுக்கு வெளியே சுப்பிரமணிய ஐயர் தள்ளப்பட்டார். ஏன்? மிஸ்டர் காடன்துரை யவர்களின் தாடி ஒருபுறமாகத் துடிக்க வாரம்பித்ததுதான். கோர்ட்டுக்குள் காலை வைக்கையில் சுப்பிரமணிய ஐயர் தலைகுனிந்து சலாம்செய்ய மறந்து விட்டார். காடன்துரை தாடி துடித்ததற்கு இதுவே காரணம். சுப்பிரமணிய ஐயர் அன்று தான

டைந்த அவமானத்தை எண்ணி எண்ணி மனங் கசியலானார். ஆனாலும் வக்கிலாக வரவேண்டுமென்னும் நோக்கத்தை விட்டு விட வில்லை.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற் கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்" என்னும்

வாக்கியத்திற் கிணங்க சுப்பிரமணியம் இரவும் பகலும் இடைவிடாமல் படித்துக்கொண்டே யிருந்தார். 1862-ம் வருடத்தில் கிரிமினல் சட்டம் அமுலுக்கு வந்த வுடன் இவர் அப் பரீட்சையிலுந் தேறி முன்வந்தார். இவருடைய புத்தி கூர்மையைப் பலகாலும் பார்த்திருந்த கலெக்டர், சுப்பிரமணி ஐயரைப் பப்ளிக் பிராஸிகியூடராக (Public Prosecutor.) நியமித்தார். காடன்துரை மட்டும் இன்னும் ஜட்ஜியாகவே யிருந்து வருகிறார். சுப்பிரமணி ஐயர் ஒரு முக்கியமான வியாச்சியத்தில் கவர்ன்மெண்ட் பக்கமாக வாதாடி வருங் காலத்தில் காடன்துரை சுப்பிரமணி ஐயரைப்பார்த்து 'குரங்கைப்போல் பல்லிளிக்காதே' என்று சுட்டிக் காட்டினார். சென்னை உயர்தர நியாயஸ்தலத்தில் பிரதம நியாயாதிபதியாய் வரப்போகும் இம்மகான் காடன்துரையிடம் பட்டபாடு இவ்வள வ்வளவல்ல. உத்தியோக வழியில் சிறந்த பதவியைக் கொள்ளும் பலர், ஆரம்பத்தில் அதிக சிரமப்படுவது இயற்கை போலும். வக்கில் உத்தியோகம் புரிவதற்குச் சாத்திய மில்லாமற் போகின்றதேயென ஏக்கங்கொண்டிருந்த சுப்பிரமணி ஐயர் தன் துரதிர்ஷ்டத்தை நினைந்து நினைந்து துக்கப்பட்டுக்கொண்டிருக்கையில், பஞ்சத்தி லடிபட்ட ஒருவனுக்குப் பாயசம் அகப்பட்டதுபோல் இவருக்குச் சென்னை ஐக்கோர்ட்டு நிபந்தனைகள் அகப்பட்டன. ஒருவன் பி. எல். பரீட்சையில் தேறி ஒரு

வருடகாலம் பாரிஸ்டரின் கீழ் அல்லது ஒரு வக்கீலின் கீழ் வேலை பார்த்து வந்தால், நேராக ஐக்கோர்ட்டுக்கே சென்று வக்கீலாகலாமென்னும் விதியொன்று யிருந்ததைக்கண்ட சுப்பிரமணிய ஐயர் பி. எல்., பரீட்சை தேறுவதற்கு அஸ்திவாரமான பிரவேசப்பரீட்சை, எப். ஏ., பரீட்சை யிவ்விரண்டையுந் தேறுவதற்கு ஊக்கங் கொண்டார். 'தெரிந்தவனத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க் கரும்பொருள் யாதொன்றுமில்' என்றபடி மனவெறுத்து, துயிலொழித்து ஒரே பிடிவாதமாகக் கல்வியில் மனதைச்செலுத்தி வரும் சுப்பிரமணிய ஐயருக்குப் பரீட்சை தேறுவதும் ஓர் அதிசயமா? இவர் 1865 ம் வருடத்தில் பிரவேச பரீட்சையையும், 1866-ம் வருடத்தில் எப். ஏ., பரீட்சையையும் 1868-ம் வருடத்தில் பி. எல், பரீட்சையையுந் தேறினர். இவர் நுண்ணிய அறிவைக்கேட்டிருந்தவரும், சுப்பிரமணிய ஐயரிடம் அதிக நேசம் பாராட்டியவருமான உதவி கலெக்டர் மிஸ்டர் க்ரோல் துரை சுப்பிரமணிய ஐயருக்கு உடனே 'ஸனத்' கொடுத்தார். சட்டப்பரீட்சையில் பட்டம் பெற்றவுடனே இவர், சென்னை உயர்தர நியாயஸ்தலத்திற்கு உத்தியோக அறிக்கை யாளரான (Official Reporter) மிஸ்டர். ஜே. ஸி. மில்ஸ் துரையின் கீழ் வக்கீல்வேலை பார்த்துவந்தார். சுப்பிரமணிய ஐயரின் மூத்த தமையனார், தம்பியார் தம்மைவிட்டு வெளியே வெகு தூரத்தில் வசிப்பதைச் சகியாதவராய், அவரை மதுரையிலேயே தாமசிப்பதற்கு மதுரை தாசில்தார் வேலையை வாங்கிக்கொடுத்தார். தமையனார் வார்த்தையைத் தள்ளாத தம்பியார், அவ்வேலையிலமர்ந்து கலெக்டருக்குக் கண்ணுங் கருத்துமாக சின்னாள் வரை யிருந்தார். கலெக்டர் ஜில்லாவைவிட்டகன்றால் உயர்தர உத்தியோகஸ்தர்களுக்குத்தக்க மூகாந்தர மேற்படாததைக்கண்ட சுப்பிரமணிய ஐயர் தாசில் வேலையை விட்டுவிட்டு

சென்னைக்கு வந்து, வக்கிலாகப் பதிவு செய்துகொண்டார். ஆனால், இவர் சென்னையிலேயே வக்கில் வேலையைப்பார்க்க மனமில்லாமல், மதுரையிலேயே வக்கிலாக யிருப்போம் என்னும் துணிவுடன் ஊருக்குத் திரும்பி வந்தார். அக்காலத்தில் நியாயஸ்தலங்களில் வக்கீல்களின் தொகை குறைவே. பி. எல். பரீட்சை கொடுத்து, பரந்த புத்தியும் தீவிர பிரயாசையுமுள்ள வாலிபனொருவன் இத்தகைய நியாயஸ்தலங்களில் முன்னுக்கு வருவதும் ஓர் கஷ்டமா? சுப்பிரமணி ஐயர் மதுரையில் வக்கிலாக வந்த நாள்முதல் கட்சிக் காரர்களைத் தயவுடன் ஏற்று, இன்மொழி கூறி, அவர்களின் வாக்கு மூலங்களை நிதானமாய்க் கேட்டு, நியாயஸ்தலங்களில் வெகு சாமர்த்தியத்துடன் வாதாடி வியாச்சியங்களை ஜெயித்து வந்ததினால் சகலரும் இவரையே நாடினார்கள். வியாச்சியங்களுக்குத் தற்காலம் வக்கீல்களுக்குத் திரவியம் கொடுப்பது போல் அவ்வளவு திரவியம் அக்காலத்தில் கொடுப்பதில்லை. கட்சிக் காரர்களின் மனங் கோணாமல், அவர் மனமுகந்து கொடுக்குந் தொகையைத் திருப்தியுடன் ஏற்று வியாச்சியங்களை நடத்தி வந்த சுப்பிரமணி ஐயர் மதுரையில் சொற்பகாலத்திற்குள் சகலருடைய அன்பையும் சம்பாதித்துக்கொண்டார். மதுரை நகரெங்கும் கீர்த்திபெற்ற சுப்பிரமணி ஐயர் வரவர பெரிய பெரிய வியாச்சியங்களில் வாதாட முன்வரலானார். இராமநாதபுரம் ஜமீனில் ஒரு பெரிய வியாச்சியமொன்று உண்டாயிற்று. இராமநாதபுரம் ஜமீனுக்குக் கடனாக பன்னிரெண்டு இலட்சம் ரூபாய் சென்னை கவர்ன்மெண்டார் கொடுத்திருப்பதினால், இவ்வியாச்சியத்தில் இவர்கள் மிக்க ஆதரவு காட்டி வந்தார்கள்.

பெயர்பெற்ற சென்னை பாரிஸ்டர் மிஸ்டர் ஜே. டி. மெயின், அட்வோகேட் ஜனரலா யிருந்துகொண்டே இவ்வியா

த்தியத்தில் ஜமீன்தார் தரப்பில் வக்கிலாக நியமிக்கப்பட்டார். இவருக்குச் சகாயமாக உள்ளூர் வக்கீல் ஒருவர் இருப்பதற்கு சுப்பிரமணி ஐயரையும் நியமித்தார்கள். பெரிய வக்கீலுக்கு ஒருவித பிரயாசையையும் வைக்காமல் தாமே சகல காரியங்களையுஞ் செய்து வந்ததைக்கண்ட பாரிஸ்டர் மெயின் துரை இவருடைய விவேகத்தையும், நியாய வாதங்களையும், சூட்சும அறிவையுங் கண்ணுற்று இவ்வியாச்சியத்தை நடத்த சுப்பிரமணி ஐயர் ஒருவரே போதுமெனக் கவர்ன்மென்டாருக்குத் தெரியப்படுத்தினார். இராமநாதபுரம் சமஸ்தானத்துக்குத் தகப்பனார் ஊழியஞ் செய்ததைவிட பன்மடங் கதிகமாகவே சுப்பிரமணி ஐயர் செய்து வந்தார். 1870-ம் வருடத்தில் சுப்பிரமணி ஐயர் மதுரை முனிசிபாலிடி மெம்பராக நியமிக்கப்பட்டார். உடனே ஜில்லாபோர்டிலும் மெம்பரானார். இவர் 10 வருடகாலம் முனிசிபல் கமிஷனராகவும், ஜில்லா போர்ட் மெம்பராகவுமிருந்து அரிய பெரிய காரியங்களைச் செய்துவந்தார்.

மதுரையில் 1880-ம் வருடத்தின் கடைசியில் மதுரையிலுள்ள கடைக்காரர்கள், தங்கள்மீது ஏற்பட்டிருக்கும் கனத்த வரிகளைச் சகியாதவர்களாய் 'வரி குறைத்தாலன்றிக் கடை திறக்கமாட்டோம்' என்று தம் தம்கடைகளைப் பூட்டிவிட்டார்கள். சுப்பிரமணி ஐயரே இக் கடைக்காரர்களைத் தூண்டி இங்ஙனம் ஒரே கட்டுப்பாடாயிருக்கச் செய்தாரென்று விபரீத எண்ணங்கொண்டிருந்த டிப்டி கலெக்டர் கோபவெறி கொண்டிருந்ததுடன் ஜில்லா கலெக்டராயிருந்த ஜே. எச். ஸ்டோக்ஸுக்குத்தெரியப்படுத்தி யிருப்பதையு மறிந்து, சுப்பிரமணி ஐயர் இனி அதிகார வர்க்கத்தின் வலைக்குள் சிக்கிக்கக்கூடாதென்று கொண்டு, முனிசிபல் மெம்பரையும் லோகல்போர்ட் மெம்பரையும் ஒரே நாளில் இராஜீநாமா கொடுத்துவிட்டார். ஆனால்,

1882-ம் வருடத்தில் க்ரோல் துரை மதுரைக்குக் கலெக்டராகத் திரும்பி வந்ததும் சுப்பிரமணி ஐயரின் மன ஆயாசத்தை யறிந்தவராய் அவரை வரவழைத்து, அவ்விரு ஸ்தானங்களையும் ஏற்றுக்கொள்ள வற்புறுத்தினர். க்ரோல் துரைக்கும் இவருக்கும் உண்டான நேசத்தினால், சுப்பிரமணி ஐயர் கலெக்டரின் வார்த்தையைத் தள்ள முடியாமல் அவ்விரு ஸ்தானங்களையும் ஏற்றுக்கொண்டார். இவர் மூன்று வருடங்களுக்குள்ளாகவே மதுரை முனிசிபாலிடிக்குச் சேர்மனாக வந்துவிட்டார். மதுரை நகருக்கு முனிசிபல் சேர்மனாக இவர் வந்தநாள் தொட்டு, மதுரைப்பட்டணம் முன்னினும் பன்மடங்கு அதிகமான சௌகரியங்களைப் பெற்றது. பொன்னின் குடத்திற்குப் பொட்டிட்டதுபோல் மதுரை நகர் அழகுபெற்றது. இவருடைய பிரயாசையினால் 18,000 ரூபாய் செலவழித்துச் சிங்காரத்தோட்டமொன்று நகர் நடுவில் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு சுப்பிரமணி ஐயர் 4,000 ரூபாய் தாமே சம்பாதித்த திரவியத்திலிருந்து கொடுத்தார். மீனாட்சியம்மன் கோயில் மதிள் புறத்தைச் சுற்றியுள்ள சிறிய தோட்டம் இவராலேயே உண்டாக்கப்பட்டது. ஜலசௌகரியத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை இவர் செய்து வந்ததினால் இதற்கு வேண்டிய உபகரணங்களைச் சென்னையில் வாங்கும்படி முனிசிபாலிடியார் இவருக்கே அப்பொறுப்பைக் கொடுத்தார்கள். இவருடைய முயற்சியினால் தேவஸ்தான கமிட்டியார் ஜல சௌகரியத்திற்காக 7,000 ரூபாய் கொடுத்தார்கள். தேவஸ்தான திரவியங்கள் நல்வழிகளில் செலவழிக்கப்பட்டு வருகின்றனவா வென்பதை இவர் அடிக்கடி கவனித்து வந்தார். தேவஸ்தானங்களின் திரவியம் நல்ல வழிகளிலே செலவழிக்கப்படவேண்டு மென்னும் எண்ணம் அந்நாள் தொடங்கியே இருந்ததினால், இவர் தர்ம ரக்ஷண சபை யொன்று ஸ்தாபித்து

அநேக காரியங்களைச் சாதித்து வந்தார். மீனாட்சியம்மன் கோயில் திரவியத்தில் 40,000 ரூபாய் சரிவர கணக்கின்றிருப்பதைக்கண்ட இவர், தேவஸ்தான கமிட்டியார்மேல் 1873-ம் வருடம் வியாச்சிய மொன்று கொண்டு வந்து, தேவஸ்தான கமிட்டியில் மெம்பராயிருந்த ஒருவர், இத்தொகையைக் கொடுக்கும்படி செய்து வைத்தார். தேவஸ்தான விஷயத்தில் பெரிதும் ஊக்கங்கொண்டு நன்மையை நாடி முயன்று வருவதால் இவரை மதுரை வாசிகள் தேவஸ்தானகமிட்டிக்கு மெம்பராகத் தெரிந்தெடுத்தார்கள். இவருடைய விடா முயற்சியினாலும், மேல்பார்வையினாலும் மீனாட்சியம்மன் கோயில் திரவியம் பிரதி வருடமும் 2,000 ரூபாய்க்குமேல் மிகுதியாயிற்று. அநேக புதிய புதிய ஏற்பாடுகள் கொண்டுவரப்பட்டன. இங்ஙனம் சுப்பிரமணி ஐயர் புகழுடம்பைப் பெற்று வாழும் நாளில் காலஞ்சென்ற எட்வர்ட் சக்கரவர்த்தி 1875-ம் வருடத்தில் இளவரசராய் இந்தியாவிற்கு விஜயமானார். இளவரசர் வரவின் மிக்கநேரார் மதுரைமாநகரைக் காணப் பேரவாகொண்டு அந்நகருக்கு விஜயஞ்செய்த காலத்தில், அந்நகரத்தார் கொடுக்கப்பெற்ற வந்தனோபசாரப் பத்திரிகையைப் படிக்கும் பாக்கியத்தை நம் சுப்பிரமணி ஐயரே பெற்றார். இளவரசர் மதுரையில் விஜயஞ்செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தயாரித்த வரவேற்பு கமிட்டியாரிடம் ஜனங்களின் திரவியம் 14,000 ரூபாய் இருந்ததை சுப்பிரமணி ஐயர், வைகை பாலங் கட்ட உபயோகப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தார்.

---

3. ஊழியத்தால் வரும் பாக்கியம்.

இங்ஙனம் ஒன்பது வருடம் கழிந்த பிறகு சென்னை கவர்னராயிருந்த ஸர். எம். ஈ. கிராண்ட் டப் மதுரைக்கு விஜயஞ்செய்த காலத்தில், சுப்பிரமணி ஐயர் முனிசிபாலிடியின் உதவி சேர்மன் ஸ்தானத்தில் அன்னவருக்கு வந்தனோபசார பத்திரிகை யொன்று கொடுத்தார். சுப்பிரமணி ஐயரின் புத்திநுட்பத்தைப் பல துறைகளினின்றும் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்த கவர்னர், இவரை நேருக்கு நேர் பார்த்த வளவில், தமது சட்ட சபையில் இவர்வருகை நன்மையைப் பயக்கும் எனக்கொண்டு பதினன்கு வருட காலமாக இடைவிடாமல் சட்டசபையில் மெம்பராயிருந்த மகாராஜா கஜபதிராவுக்குப் பதில் சுப்பிரமணி ஐயரை நியமித்தார். இவர் சட்ட சபை மெம்பராக நியமனம் பெறுவதற்கு முன்னரே, இவருடைய பொதுஜன ஊழியங்களைப்பற்றிக் கவனித்து வந்த கவர்ன்மெண்டார், டெல்லிமாநகரில் கவர்னர் ஜனரல் லார்ட் லிட்டனால் நடப்பித்த தர்பாரில் சுப்பிரமணிஐயருக்கு 1877-ம் வருடம் ஜனவரி மாதம் முதல் தேதி யாகிய புதுவருட தினத்தன்று யோக்கியதாபத்திர மொன்றைக்கொடுத்தார்கள். தென்னுட்டில் புருஷரத்தினமாய் விளங்கும் சுப்பிரமணி ஐயரை ஆழ்ந்த அன்பினால் சகலரும் "மதுரை மணி ஐயர்" எனக்கூப்பிடலானுர். இப்பெயர் இன்னும் வழங்கிவருகின்றது. 1882-ம் வருடத்தில் தன் அன்பிற்குப் பாத்திரமாய், சுகதுக்கங்களுக்குப் பாத்தியப்பட்டவளாய், வாழ்க்கைத்துணை நலத்தினளாய் விளங்கிவந்த மனைவியார் திடீரென்று நோய் கொண்டாள்.

இரண்டு வருட காலம் மனைவி பக்கத்தி லிருந்து சகல உபசார ங்களைச் செய்து வந்தும் பயன்படாமல் மனைவியார் மணி ஐய ரைத் தன்னந்தனியேவிட்டு உயிர் துறந்தாள். இவள் மாண்ட காலம் 1884. இதே வருடத்தில் தான் இவர் சட்டசபை மெம்பருமானார். கஷ்டம் வரும் பொழுது சுகமும் தொடர் ந்துவரு மென்பதற்கு இது ஓர் அத்தாட்சி. சிற்சில காலங்க ளில் கஷ்டங்கள் அடுத்தடுத்து வருவது முண்டு. இவருடைய சட்டசபை நியமனத்தை நாடெங்கும் கொண்டாடிற்று. பயி ரிடுபவர்கள் பலர் களித்தார்கள். ஆளுபவர்களுக்கும் ஆளப் படுவோர்களுக்கும் மத்தியஸ்தர்களா யிருந்து இருதிறத்தார்க ளின் நோக்கங்களைக் காலதேச வர்த்தமான மறிந்து கூறும் சக்தி சுப்பிரமணி ஐயரிடம் வெகுவாய் இருந்தது. இவரு டைய நியமனத்தையும் சக்தியையும் பற்றிக் காலஞ்சென்ற ஜி. சுப்பிரமணி ஐயரால் நடத்தப்பட்ட 'இந்து' பத்திரிகை யின் வருமாறு கூறுகிறது:—

"நெற்பயிர்வை நிலத்தில்விழக் கஷ்டப்படும் பயி ரிடுபவர்களின் நிலைமையையும் ஜனங்களின் அபிப் பிராயங்களையும் கனம். எஸ். சுப்பிரமணி ஐயர் அறிந்திருப்பதுபோல் இம்மாகாணத்தில் வேறொரு வர் அறிந்திருக்க மாட்டார்கள். பரம் பரையாய் உண்டான செல்வாக்கினாலும், சாமர்த்தியத்தினா லும், குணத்தினாலும் பொது நல உணர்ச்சியினா லும் இவருடைய பெயர் தென்னிந்தியா வெங் கும் தெரிய லாயிற்று. பொதுநல உணர்ச்சிக ளால் உண்டாகும் எழுச்சிகள் ஒவ்வொன்றிலும் சுப்பிரமணி ஐயர் ஒத்து உழைத்து வந்ததுடன் தக்க உதவியையும் புரிந்து வந்தார். பொதுஜன காரியங்களில் தன் நலத்தையும் பார்க்காமல் அநேக

காரியங்களில், தன் சக்திக்கு மேற்பட்ட காரியங்களைச் செய்துவந்தார். இவருடைய பொதுக்காரிய உணர்ச்சியினாலேயே சுப்பிரமணி ஐயர் அநேக உத்தியோக நியமனம் பெற்றார். நவராத்திரி கொலுவிருக்கையில் தலை யசைக்கும் பதுமைகள் போல் சட்ட சபையிலிருந்த மெம்பர்கள், இவர் வரவினால் உயிர் பெற்றவர்கள் போலாயினர். ஜனங்களின் அபிப்பிராயங்களைச் சிறிதும் அறியாதவரும், பொதுவாழ்க்கையிற் குரிய விதிகளைச் சரிவர தெரியாதவரும், நாட்டின் இராஜீய தேசிய விஷயங்களிற் போதுமான ஞானமில்லாதவருமான அநேகரைச் சட்ட சபையில் மெம்பராக நியமிப்பது இயற்கையா யிருக்க, சுப்பிரமணி ஐயரை நியமித்தது, சென்னை மாகாணம் செய்த பாக்கியமேயாகும். இரட்டைப் புரவி கட்டிய வாகனங்களிலேறி, பட்டுபீதாம்பரங்களால் அலங்கரித்து,ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களின் தயவிற்கு நச்சியிருக்கும் சில சட்ட சபை மெம்பர்களைப்போல், இவர் இராமல், ஜனங்களின் இலட்சியத்தையே கவனித்துத் தன் கடமையைச் செய்துவரும் ஸ்வபாவத்தைக் கொண்டவர். பொது ஜனங்களிடத்தில் உண்டான செல்வாக்கினாலும் இவரிடத்தே அவர்களுக்கு உண்டான மரியாதையினாலுமே சுப்பிரமணி ஐயர் சட்ட சபை மெம்பரானார்"

மனைவியார் இறந்தபிறகு தன் வாழ்க்கையை வேதாந்தத்தில் திருப்பினார். சதா தத்துவ நூல்களையும் வேதாந்த சாஸ்திரங்களையுமே இவர் ஆராய்ச்சி செய்து வந்தார். இதல்லாமல், ஆங்கில தீர்க்கதரிசிகளான ஹெர்பர்ட் ஸ்பென்ஸர், ஹக்

ஸ்லி முதலியவர்களின் கிரந்தங்களையும், ஷேக்ஸ்பியர் நாட கங்களையுங் அடிக்கடி படித்து வருவார். ஷேக்ஸ்பியர் நாடங் களில் முக்கியமாக 'மக்பத்' 'ஹாம்லத்' இவ்விரண்டை யுமே அதிகமாகப் படிப்பது வழக்கம். தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவ நாயனாரின் திருக்குறளும், பகவத்கீதை யும் இவருக்குத் துணைக்கருவிகள். இக்காலத்தில்தான் இவர் பிரம்மஞான சங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணின கர் னல் ஆல்காட் துரையிடம் அறிமுகமானார். கர்னல் ஆல்காட் துரையின் விவேகத்தையும் தத்துவ ஆராய்ச்சியையும், இந்து மத விஷயமாக அவர் கொண்ட அபிப்பிராயத்தையும், சர்வ மத சமரஸானுபவ குணத்தையும், இவர் பிரம்மஞான சங்க த்தின் இலட்சியங்களையும் நோக்கங்களையுங் கண்டு மன முவ ந்து பிரம்மஞான சங்கத்தில் அன்றே சேர்ந்தார். 1888-ம் வருடத்தில் மணி ஐயர் சென்னையிலுள்ள உயர்தர நியாயஸ்த லத்தில் சர்க்கார் வக்கிலாக நியமனம் பெற்றார். இவர் சர்க்கார் வக்கிலாக யிருக்கையில் விசித்திரமான பல கேசுகள் வந்தன. சர்க்கார் வக்கில் பதவி முதல் முதல் இந்தியர்களுக்குள் பெற்ற வர் இவரே. தஞ்சாவூரில் கட்டு கையெழுத்திடுவதில் மிக்க சாமர்த்தியங் காட்டிவந்த நாகேஸ்வரய்யர் மீது உண்டான குற்றத்தில் மணி ஐயர் சர்க்கார் தரப்பில் நார்டன் துரைக்கு எதிராக வாதமிட்டு வருவதைக்கண்ட ஜட்ஜி மிஸ்டர் ட்ராவினி யர் இவரைச் சாலவும் புகழ்ந்து பேசியிருக்கின்றார். திருப்பதி தேவஸ்தானத்தில் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட துவஜ ஸ்தம்பத்தின் அடியில் பெரிய கங்காளங்களிலிருந்த தங்க நாணயங்களை எடுத்துச் செப்பு நாணயங்களை நிரப்பி, பழைய படி துவஜஸ்தம்பத்தின் அடியில் வைத்த செய்தியைப் பலர் அறிந்து கவரன்மெண்டாரிடம் முறையிடவே, கவரன்மெண் டார் திருப்பதி மகந்து மீது குற்றஞ் சாட்டினார்கள். விக்டோ

ரியா மகாராணியார் 1858-ம் வருடத்தில் பிறப்பித்த மகாசாஸனத்தினால், கவரன்மெண்டார் மதவிஷயமான காரியங்களில் தலையிட மாட்டார்கள் என்னும் நம்பிக்கையினாலும், துவஜஸ்தம்பத்தின் அடியிலுள்ள நாணயங்களைப் பரிசோதிப்பதற்கு அத்துவஜஸ்தம்பத்தை எடுக்கவேண்டுமென்பதினாலும், இங்ஙனம் அத்துவஜஸ்தம்பத்தை எடுப்பதினால் இந்து சமூகத்தார்கள் பலர் தர்மசாஸ்திர விரோதமென்று கூக்குர லிடுவார்களென்னும் நம்பிக்கையின்றுமே மகந்து தைரியமாய் இருப்பதைக்கண்ட மணி ஐயர் 'ஆகாயம் இடிந்து தலைமீது விழினும் நியாயந் தவறுதல் சரியல்ல' வென்பதை ஜட்ஜிகளுக்குச் செவ்வனே எடுத்துக்காட்டித் திருப்பதி தேவஸ்தானத்திற்கு அதிபதியாயிருக்கும் மகந்தின் அபிப்பிராயச்செயலை வெளிக்குக் கொண்டு வந்தார். நியாயமெனக்கொண்ட விஷயங்களை எவ்வாற்றாலும் சாதிக்குஞ் சக்தியைக்கொண்டவர். இவர் மகா நெஞ்சு உரங் கொண்டவர். நியாய மார்க்கத்தில் கோழை மனங்கொண்டு தக்களிக்குந் தன்மை யிவரிடம் எள்ளளவுங் கிடையாது. சட்டசபை மெம்பராக நியமனம் பெறுவதற்கு முன்னரே இவர் 1877-ம் வருடத்தில் மதுரைமாநகரில் விஜயஞ்செய்த பஞ்சவிஷயமாக ஏற்பட்டிருக்கும் ஒரு கமிஷனில் நிர்ப்பயமாய் வாக்குமூலங் கொடுத்தார். நிலச்சுவான் தார்களால் பெரிதுங் கஷ்டப்படும் குடித்தனக்காரர்களை இரட்சிக்கப் புதிய சட்டமொன்று பிறப்பிப்பதுமிகவும் ஆவசியகமென்பதை மணி ஐயர் பஞ்சகமிஷனர்களுக்கு எடுத்துரைத்தார். நாடு அபிவிர்த்தியாகவேண்டுமானால் விவசாயமே முதல்முதல் விர்த்தியாக வேண்டுமென்றும், இதுகாறும் நாட்டிலுள்ள ஜமீன்தார்கள் தங்களால் இயன்றளவு நிலங்களைக் கவனிப்பதைவிட அதிகமாக கவனிக்கவேண்டுமென்றும் இவர் அடிக்கடி கூறுவதுண்டு. சுப்பிரமணி ஐயர் குடித்தனக்காரர்களின்

குடிவார பாத்தியதையைப் பற்றியும் மிலச்சுவான்தார்களின் மிராசு பாத்தியதையைப்பற்றியும் வெகுவெளிப் படையாகப் பன்முறை எடுத்துக் கூறியிருக்கிறார். வெகு காலமாக இவர் மதுரை ஜில்லா லோகல் போர்ட், முனிசிபாலிடிகளில் உழைத்து வந்திருநல் ஸ்தல சுய ஆட்சி விஷயமாகப் பாடுபட்டவர் இவரைப்போல் ஒருவரு மிரார். இந்தியாவில் கவர்னர் ஜனரலாயிருந்த லார்ட் ரிப்பன்துரை ஸ்தல சுய ஆட்சியின் ஏற்பாடுகள் சரிவர அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றனவாவென்பார்வை யிடுவதற்கு முன்னரே, சுப்பிரமணி ஐயர் ஸ்தல சுய ஆட்சி விஷயமாகவுள்ள சகல வழிகளையும் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தார். ஸ்தல சுய ஆட்சி விஷயமாக 1882-ம் வருடம் மேமாதம் 18-ந் தேதியன்று லார்ட் ரிப்பன் துரை அனுப்பிய உத்தியோக அறிக்கைப்படி ஒவ்வொரு மாகாணங்களிலும் கமிட்டி யொன்று நியமிக்கப் பட்டது. சென்னை மாகாணத்தில் ஏற்பட்ட இக்கமிட்டியில் கனம் ஸலிவன், மிஸ்டர் ஸாங்லி, மிஸ்டர் கிரிக், மிஸ்டர் ஸ்டோக்ஸ், சேஷய்ய சாஸ்திரிகள், செஸ்ட்ஸல்ராவ், பென்ஸன், வெங்கடரமணபந்துலு, பினிஸ் முதலிய அவர்களிருந்தார்கள். இவர்களுடன் சேர்ந்து உழைப்பதற்காக சுப்பிரமணி ஐயரையும் நியமித்தார்கள். இக்கமிட்டியார் ஜனங்களின் குறைகளுக்குத் தக்கபடி சரியான பரிகாரஞ் செய்யாமலிருப்பதைக் கண்ட இவர், அவர்கள் கொண்டுவந்த சகல தீர்மானங்களும் சரியல்லவென்று கண்டனஞ் செய்ததுடன் அவர்களுடைய வாக்குமூலத்திற்கு எதிராக இவர் மற்றொரு வாக்குமூலமும் எழுதி வைத்தார். கவரன்மெண்டார் அறிக்கைக்கும் கமிட்டியாரின் வாக்குமூலங்களுக்கும் சம்பந்தமின்றி யிருப்பதினாலும், கமிட்டியாரின் அபிப்பிராயத்தினால் ஸ்தல சுய ஆட்சி விஷயத்தில் பொதுஜனங்களுக்குப் பொறுப்பு குறைந்து, கலெக்டர்களுக்குச் செல்வாக்

கும் அதிகாரமும் அதிகப்படுவதினாலும், முனிசிபாலிடிகள், லோகல் போர்ட்டுகள் அதிகாரவர்க்கத்தார்களின் ஆளுகைக்குட்பட்டு வருவதினால் இவைகள் பெருக்கு மாத்திரம் நிற்குமே தவிர, இந்தியர்களுக்குத் தக்க பொறுப்பும் செல்வாக்கும் உண்டாகாதென்றும் இவர் நன்கு விளக்கிக்காட்டினார். இதுடன் நிற்காமல் இவர் சிற்சில புதிய ஏற்பாடுகளையுங் கொண்டு வந்தார். இவர் அடிக்கடி பிரதானபடிப்பை விசாலப் படுத்த வேண்டு மென்றும், கல்வியை விட முக்கியமான விஷயம் வேறொன்று மில்லை யென்றும், நாடு இன்றைக்கு வேண்டுவதெல்லாம் கல்வியே யென்றும், இக்கல்வி விர்த்தியினாலேயே சகல சீர்திருத்தங்களும் தாமே உண்டாகு மென்றும் வாயோயாமல் கமிட்டிக்குச் சொல்லிக்கொண் டிருந்தார். என்ன சொல்லியும் என்? பொதுஜன அபிப்பிராயங்களைக்கேட்டு நடப்பவர் யார்? பொதுஜன அபிப்பிராயங்களைக்கொண்டு நடப்பதென்றால் ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்களின் மெரட்டும் உருட்டும் நிற்காதென்பதே. பொதுஜன அபிப்பிராயங்களிற் கலந்து உழைக்கும் அதிகாரவர்க்கத்தார் மனிதரிற் சிறந்தவர்களென அழைக்கப்படுவார். ஆனால் இந்தியாவில் அதிகாரவர்க்கத்தார் பொதுஜன அபிப்பிராயங்களைக்கொண்டு எப்பொழுதும் எவ்வாற்றாலும் நடப்பதில்லை. இங்ஙனம் நடவாததினாலேதான் இந்திய இராஜ்ய தேசிய விஷயங்களில் இந்தியர்களையும், ஜனாதிகார கோட்பாடுகளை அவலம்பித்து வருவதாகக் கூறும் இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயர்களையும் முறையே கவனிக்கும்படி தூண்டுதற்குப் பாரத ஜாதீய சபையொன்று 1885-ம் வருஷத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பாரத ஜாதீய சங்க மென்றும் காங்கிரஸ் மகா சபையை ஸ்தாபித்தவர்களில் உமேஷ் சந்திரபானர்ஜி, தாதாபாயி நௌரோஜி, காசிநாத திலாங், ரங்கய்ய நாயுடு, ஜீ. சுப்

பிரமணி ஐயர், கனம். எஸ். சுப்பிரமணி ஐயர் முதலியவர்களே முக்கியமானவர்கள். கடந்த முப்பது வருட காலமாக நாட்டின் நாலு பக்கங்களில் வருடந்தோறும் வெகு ஆடம்பரத்துடன் நடைபெற்று வந்த இக் காங்கிரஸ் மகா சபையை அஸ்திவாரமிட்டவர்களில் மணி ஐயர் முதன்மையானவர். 1885-ம் வருடத்தில் பம்பாய் நகரில் முதல் முதல் காங்கிரஸ் மகாசபை நடைபெற்றது. இக் காங்கிரஸ் மகா சபைக்கு அவ்வருடம் கல்கத்தா பாரிஸ்டர் உமேஷ் சந்திரபானர்ஜி அக்கிராசனம் வகித்தார். இம் முதலாவது காங்கிரஸ் மகா சபையில் கொண்டுவந்த பல தீர்மானங்களில் ஒன்றான மாகாண சட்டசபையிலும் வைஸிராய் சட்டசபையிலும் இந்தியர்களின் செல்வாக்கு அதிகப்பட வேண்டுமென்றதுடன் இந்தியர்களின் தொகை அதிகப்பட்டிருக்க வேண்டுமென்னும் தீர்மானத்தைக் காசிநாத திலாங் பிரேரேபிக்க, கனம். எஸ். சுப்பிரமணி ஐயர் அதைத் தாங்கிப் பேசினார். அடுத்த வருடத்தில் அதாவது 1886-ம் வருடத்தில் இரண்டாவது காங்கிரஸ் கல்கத்தா நகரில் நடைபெற்றது. காலஞ்சென்ற அரும் பெருங் கிழவனாரான தாதாபாய் நௌரோஜி இவ்விரண்டாவது காங்கிரஸுக்கு அக்கிராசனாதிபதியாயினர். கல்கத்தாவில் கூடிய இக்காங்கிரஸ் மகா சபையில் "இந்தியா தினே தினே தரித்திர நிலைமையை யடைந்து இந்தியர்கள் பெரிதும் வருந்தி கஷ்டப்படுகிறார்களாதலால், கவர்ன்மெண்டார் குடிகளின் கஷ்டங்களை நிவர்த்திபண்ணப் போதுமான சௌகரியங்களை ஏற்படுத்தவேண்டும்" என்னும் தீர்மானத்தை நமது அர்த்தசாஸ்திர நிபுணரான டின்ஷா எடுல்ஜீ வாசா பிரேரேபிக்க, சுப்பிரமணி ஐயர், அநேக காரணங்களைக் காட்டி வெகு ஆத்திரத்துடன் ஆதரித்துப் பேசினார். காங்கிரஸ் மகா சபையினால் இந்தியாவிற்கு அநேக நன்மைகள் பிற்காலத்தில் உண்டாகு

மென்பதை இவர் பூரணமாகவே நம்பியிருந்தார். ஏற்கெனவே பொது நல உணர்ச்சி தலைமங்கியிருந்த இவருக்கு காங்கிரஸ் மகாசபையிலுஞ் சேர்ந்தவுடன், அக்கினிமலையிற் கர்ப்பூர பாணம் பிரயோகித்ததுபோல அவ்வுணர்ச்சி மேன்மேலும் விர்த்தியாயிற்று. காங்கிரஸ் மகா சபையை ஸ்தாபித்தவர்களில் சுப்பிரமணி ஐயர் ஒருவரே, இன்று ஜன சம்மதமான காரியங்களைச் செவ்வனே நடத்தி வருகிறார். காங்கிரஸ் ஆரம்பகாலத்தில் வாலிபச் செருக்கினால் எவ்வளவு திடமாய் உழைத்தாரோ, அதைவிட எண்மடங்கதிகமாகவே இப்பொழுதும் இத் தள்ளாத வயதில் உரத்துடனும், வீரத்துடனும் உழைத்துவருகிறார். காங்கிரஸ் மகாசபை உதயமான காலத்தில் சுப்பிரமணி ஐயர் தன் மனதிலிருக்கும் எல்லாத்தைத் தாராளமாய் யாவருக்கும் பயப்படாமல் உள்ளபடி உரைத்தது போலவே, இப்பொழுதும் அதிகார வர்க்கத்தார்களின் தவறுதல்களையும், அன்னவர்களின் நியாய வரம்பு கடந்து செய்யும் காரியங்களையும் வெகுகண்டிப்பாய் எடுத்துக் கூறுகிறார். இவர் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த சட்டசபையில் இருமுறை மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். ஸர். எம். ஈ. கிராண்ட் டப் கவர்னராயிருந்த காலத்திலுள்ள சட்டசபையானது அவ்வளவு திருப்திகரமானதாக இருந்ததில்லை. சட்டசபையில் புதிதாகக்கொண்டுவரப்படும் மசோதாக்களைப்பற்றி தர்க்கிக்கும் குணத்தை அக்காலத்தில் இம்மெம்பர்கள் பெற்றதில்லை. ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களாயினும், கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பெற்ற இந்திய மெம்பர்களாயினுஞ் சரியே, பொதுவாக இவர்கள் சட்டசபையில் நடக்குங்காரியங்களைக் கவனித்துவர வேண்டியதேயொழிய வாதமொன்றுஞ்செய்யப்படுவதில்லை. சாதாரணமாக சட்டசபை நடவடிக்கைகள் அக்காலத்தில் இர

ண்டு அல்லது மூன்று மணி காலத்திற்குள் முடிந்துவிடும். சட்டசபைக்கூட்டம் இப்பொழுது மாதிரி அடிக்கடி கூட்டப்படுவதில்லை. சட்டசபை மெம்பர்கள் பேசுவதே கிடையாது. அப்படி பேசினாலும் அது மிகவும் குறைவாகவே இரண்டு மூன்று சொற்களிலேயே முடிந்துவிடும். இந்திய சட்டசபை மெம்பர்கள் மசோதாக்கள் கொண்டுவரும் வழக்கமே கிடையாது. ஆனால், சுப்பிரமணி ஐயர் சட்டசபைக்கு வந்ததும் மசோதா ஒன்று கொண்டுவந்தார். இதுகாறும் சட்டசபையில் எதிர்ப்பாராத அதிசயச் சம்பவமென்று ஒவ்வொரு மெம்பர்களும் ஆச்சரியத்துடன் கண்ணைக்கொட்டாமல் பார்த்திருந்தார்கள். சட்ட சபை ஸ்தாபித்தநாள் தொடங்கி, முதல் முதல் சட்டசபையில் மசோதா கொண்டுவந்த தீரபுருஷர் இவரே. மலையாளப் பிராந்தியத்தில் பயிரிடுங்குடிகள் குடிவாரத்தில் அடையும் நிலங்களை விர்த்திசெய்வதற்குரிய தொகைப்பணம் நிலச்சுவான்தார்களே கொடுக்கவேண்டுமென்னும் மசோதா ஒன்றை இவர் கொண்டுவந்தார். கொண்டுவந்த இம்மசோதா 1886-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாயிற்று. இம்மசோதா கொண்டுவந்த காலத்தில் சில ஜமீன்தார்கள் எதிர்த்தார்கள். ஆனால் அவர்கள் சுப்பிரமணி ஐயரின் வாதத்திற்கு எதிர்நிற்க முடியவில்லை. இம்மசோதா ஜமீன்தார்களைச் சற்று பாதிப்பதினாலும், இவர்களுடைய நிலங்களைப் பயிரிடுங் குடித்தனக்காரர்களுக்கு நில விருத்திக்காகத் திரவியம் கொடுக்க வேண்டியிருந்ததினாலுமே ஜமீன்தார்கள் பலர் இம்மசோதாவைக் கண்டனஞ் செய்தார்கள்—என்ன பிரயோஜனம்—புலிக்குமுன் பூனை என்ன செய்யும்? சுப்பிரமணி ஐயர் பயிரிடுங் குடிகளுக்குச் செய்யவேண்டிய உபகாரங்களைத் தன்னாலியன்றளவு செய்து வந்தார். 1885-ம் வருடத்தில் சென்னை சர்வகலா சங்கத்தினர் சுப்பிரமணி ஐயரை ஒரு

அங்கத்தினராக நியமித்தனர். வித்தியா விற்பன்னரும், கல்வியின் அபிவிர்த்திக்குப் பாடு படுபவருமே இச் சர்வகலா சங்கத்திற்கு யோக்கியதை யுள்ளவர். மணி ஐயர் இச் சங்கத்தில் இருபத்திரண்டு வருடகாலம் மெம்பரா யிருந்து கல்வியபிவிர்த்திக்கு உழைத்து வந்தார். மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் படிப்பின் திட்டங்கள் நாளுக்கு நாள் அதிகக் கடினமாயும், அளவுக்கு மேற்பட்டதாயு மிருப்பதால் இளம்பிராயத்தினர்களின் புத்தி தடுமாற்ற மடையுமென்றும், இதைத் தடுப்பதற்குப் படிப்பின் திட்டங்களைக் குறைக்கவேண்டு மென்றும் சுப்பிரமணி ஐயர் சர்வகலா சங்கத்தில் அடிக்கடி எச்சரித்திருக்கிறார். பத்து வருடத்திற்கு முன் சென்னை மாகாணத்தில் சர்வகலா சங்கத்தினரால் நடத்தப்பட்ட பிரவேச பரீட்சை யென்னும், மெட்ரிகுலேஷன் பரீட்சைக்குப் பதிலாக ஸ்கூல் பைனல் (School Final) பரீட்சையை ஏற்படுத்துவதற்கு இவர் பூரண சம்மதமுங் கொடுத்தார். ஸ்கூல் பைனல் என்னும் பிரவேச பரீட்சை இவ்வளவு ஆபாசமாக யிருக்குமென்பதைப் பிரதமத்தில் இவர் அறியவில்லை. ஏழைப் பிள்ளைகள் அநேகருக்குச் சுலபமாக யாதாமொரு மானஜீவனஞ் செய்வதற்குச் சாதகமா யிருக்குமென்னும் நோக்கத்தைக் கொண்டே இப் புதிய ஏற்பாடு கொண்டுவரப்பட்டது. பின்னர், இது "பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததெனக்" கூறிக் கொண்டிருந்தார். இவர் சர்வகலா சங்கத்தில் சாலவும் உழைத்ததினால் இவருக்குச் சர்வகலா சங்க உதவி அத்யட்சகராக (Vice-chancellor) நியமிக்கப் பட்டார். அத்யட்சகராக யிருப்பவர் சென்னை கவர்னர். உதவி அத்யட்சகர் ஸ்தானத்தை வகித்த முதல் இந்தியர் இவரே. இவருக்கு அந்த ஸ்தானத்தைக் கொடுத்ததைப் பற்றி அநேக ஐரோப்பியர்கள் சம்மதிக்கவில்லை. என்றாலும் இவருடைய உழைப்பும் சாமர்த்தியமு

மன்றோ முன் திர்கிறது. உதவி அக்யட்சகர் ஸ்தானத்தை இவருக்குப் பின்னர் இருபர் ஒருவர் வகிப்பதுமவர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயரே. டாக்டர் ஆப் லாஸ் (Doctor of Laws) என்னும் ஆங்கில நாமத்தால் விளங்கும் சட்ட நிபுணர் பட்டமொன்று 1908-ம் வருடத்தில் சுப்பிரமணி ஐயருக்குக் கொடுக்கப்பட்டது. இதற்குமுன், முதல் முதல் இப் பட்டம் பெற்றவர் சென்னை கிறிஸ்துவ கலாசாலையின் பிரதம ஆசிரியரான உல்லியம் மில்லர் என்பவரே. வருடந்தோறும் பி.எ. பரீட்சை முதலான பட்டப் பரீட்சைகள் தோறும் மாணவர்களுக்கு வித்யா பட்டங் கொடுப்பதற்கு வித்வத் சபை யொன்று கூடும். சிறந்த மேதாவிகளை இவ்வித்யா சபைக்கு நாயகராக நியமிப்பது வழக்கம். 1896-ம் வருடத்தில் நடந்த வித்யா பரிஷத் (சபை) துக்கு நாயகராக சுப்பிரமணி ஐயரை நியமித்தார்கள். இவ்வித்யா பரிஷத்துக்கு வந்த மாணவர்களுக்குச் சிறந்த பிரசங்க மொன்று கொடுத்து அப் பட்டதாரிகளைக் கல்விக்காக உழைத்து வரும்படி கூறினர். படித்தவர்கள் கைத்தொழில்களை உல்லங்கனம் செய்து சதா புஸ்தகமுங் கையுமாக யிருப்பதினால், அதனால் பார்த்த படிப்பெல்லாம் 'ஆற்றிற் கரைத்த புளிபோலாகும்' என உரைத்து அவர்களைக் கைத்தொழில்களில் ஊடாடும்படி இவர் வற்புறுத்தினர். சம்ஸ்கிருத பாஷை அபிவிர்த்தி யடையவேண்டு மென்றும் அவா இவருக்கு எப்பொழுதும் இருந்து கொண்டே யிருந்தது. தேச பாஷையின் ஏற்றமே நாட்டின் விர்த்திக்கு அறிகுறி யென்பதை இவர் அடிக்கடி கூறுவதுண்டு. ஆங்கில வித்யாபட்டம் பெற்றவர்களுக்குச் சுய பாஷா ஞானம் விர்த்தியாகாம லிருப்பதைக் கண்டு, இவர் அடிக்கடி வருந்துப்படுவார். சுய பாஷையின் மூலமாகவே பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பிக்கவேண்டு மென்னும் அபிப்பிராயத்தைக் கொண்டவர்களில் இவரும்

ஒருவரே. இதுடன் வித்யார்த்திகள் அடிக்கடி தேசாந்தரம் போகவேண்டு மென்றும், இங்ஙனம் போவதினால் நாட்டின் நிலைமைகள் சரிவர தெரிவதுடன் தங்களுக் குண்டாயிருக்கும் குற்றங் குறைகளையும் களையறுக்கப் போதுமான முகாந்தரம் ஏற்படுகிற தென்றும் இவர் சொல்லி வந்தார். தேசாபி மானமும் தேச சேவையுங் கொள்ள வித்யார்த்திகள் தங்கள் வாழ் நாட்களைச் சிறப்பாகச் செய்யவேண்டு மென்று இவர், தான் காணும் ஒவ்வொரு வாலிபர்களுக்குஞ் சொல்லிவந்தார். சம்ஸ் கிருத பண்டிதர்களுக்கும் செந்தமிழ்ப் புலவர்களுக்கும் வருடந்தோறும் பட்ட மளிக்க வேண்டு மென்று சர்வகலா சங்கத்தாரைத் தூண்டி, கொடுக்கும்படி இவர் செய்தார்.

---

4. நடுவு நிலைமையே பெருஞ் செல்வம்.

உயர்தர நியாயஸ்தலங்களில் இந்திய நியாயாதிபதிகளை நியமிப்பதென்னும் அனுஷ்டானம் பம்பாயிலும் வங்காளத்திலும் ஏற்பட்ட வெகுகாலத்திற் கப்புறம் சென்னையில் 1877-ம் வருடத்தில் முதல் முதல் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது. சென்னை இராஜதானியில் இதுகாறும் வந்த கவர்னருக்குள் உத்தமனும் தைரியசாலியுமான பக்கிங்காம் பிரபுவே காலஞ்சென்ற ஸர் டி. முத்துஸ்வாமி ஐயரை நியாயாதிபதியாக நியமனஞ் செய்தார். இவரை நியமித்த வுடனே இந்தியாவிலுள்ள அநேக ஆங்கில உத்தியோகஸ்தர்களும் ஐரோப்பிய பாரிஸ்டர்களும் கவர்னரைத் தூஷித்து இந்நியமனத்தைக் கண்டனஞ் செய்தார்கள். இந்தியனுக்கா இவ்வளவு பெரிய ஸ்தானத்தைக் கொடுப்பது—இந்தியர்களுக்கு நியாயத் தீர்ப்புசெய்யும் சக்தியும் வந்துவிட்டதா வென்னும் கேள்விகள் மூலைக்கு மூலை பிறந்தன. சீமைக்குத் தந்திமேல் தந்தியாகப் பறந்தன. நியமனம் ஆய்விட்டது. ஸர் டி. முத்துஸ்வாமி ஐயர் தர்மதேவதைபோல் பிரகாசிக்கத் தொடங்கினார். இவரைத் தூஷித்த ஆங்கிலேயர்கள் இவரை அக்கினி எனக் கொண்டார்கள். இவர்கள் இந்தியரின் சக்தியை யன்றோ கண்டார்கள். இந்தியர்களின் கம்பீரத்தையும் நிதானத்தையும் பார்த்தார்கள். இந்தியர்களிடத்தில் மதிப்பு வைக்கலானார்கள். இத்தகைய புருஷ சிரேஷ்டர் கொண்ட ஸ்தானத்தையே சுப்பிரமணிய ஐயர் 1895-ம் வருடம் ஜனவரி மாதம் வகித்தார்.

இதற்கு முன்னர் மூன்று தடவைகளில் முத்துஸ்வாமி ஐயருக்குப் பதிலாக நியாயாதிபதியாக யிருந்து வந்தார். எற்கனவே, ஆங்கிலேயர்கள் முத்துஸ்வாமி ஐயர் விஷயத்தில் பார்த்த பிறகு சுப்பிரமணி ஐயரைச் சொல்ல நாவெழவில்லை. அக்காலத்தில் நியாயாதிபதி ஸ்தானம் சாமானிய மான தல்ல. கவர்ன்மெண்டையும், ஆங்கிலேயர்களையும், இந்தியர்களையும், உத்தியோகஸ்தர்கள் உத்தியோகஸ்தர்க ளல்லாதவர்கள் ஆகிய சகலரையும் ஒருமிக்கத் திருப்தி செய்ய வேண்டும். முத்துஸ்வாமி ஐயருக்கும் சுப்பிரமணி ஐயருக்கு முள்ள வித்தியாசம்—இவர் வக்கிலாயிருந்து நேரே நியாயாதிபதி ஸ்தானத்திற்கு வந்தவர். அவர் கீழ்தர நியாயாதிபதியா யிருந்தே உயர்தர நியாயஸ்தலத்திற்கு வந்தவர். சுப்பிரமணி ஐயர் ஜனசமூகத்தினின்று நேராக வந்தவர். முத்துஸ்வாமி ஐயர் சர்க்கார் உத்தியோகத்தினின்றும் வந்தவர். ஆகவே, சுப்பிரமணி ஐயருக்கு ஜன சமூகத்தையும்—சர்க்கார் சமூகத்தையும் கவனிக்கவேண்டிய பெரும் பாரம் உண்டாயிற்று. இத்தகைய விசாலமான பொறுப்பை வகிக்கவேண்டு மென்று சுப்பிரமணி ஐயர் அதி சாக்கிரதையாயிருந்து வந்தார். இவருக்கு உயர்தர நியாயஸ்தலத்தில் நியாயாதிபதி ஸ்தானம் நியமன மானவுடனே ஜனங்களின் உரிமைகளைப் பற்றிப் பலகாலும் போராடி வரும் இந்துப் பத்திரிகை பின்வருமாறு எழுதிற்று:—

> "ஸர். டி. முத்துஸ்வாமி ஐயரின் அகால மரணத்தினால் சென்னை உயர்தர நியாயஸ்தலத்தில் காலியான ஸ்தானத்திற்குப் பொது ஜனங்கள் எண்ணினபடியே திவான் பகதூர் கனம் எஸ். சுப்பிரமணி ஐயர், ஸி. ஐ. ஈ. அவர்களைக் கவர்னராயிருந்த லார்ட் வென்லக் துரையவர்கள் நியமித்த விஷயமாக நாங்கள் மிகவும் உற்சாகப் படுகின்றோம். இந்

நியமனம் சொற்பகாலத்திற்காக ஏற்பட்டிருந்தபோதிலும் விக்டோரியா மகாராஜனியார் இந் நியமனத்தை அங்கீகரிப்பா ரென்பதற்கு ஐயமேயில்லை. நீண்ட அநுபோகமும் திரண்ட ஞாபகசக்தியும், அகன்ற காருண்யமுங் கொண்ட சுப்பிரமணி ஐயர், வக்கீல் சமூகத்திலுள்ள இன்னொருவர் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவுக்குமேல் நியாயத் தீர்ப்பு செய்யுஞ் சக்தியைக் கொண்டிருக்கிறார். இவரைப்போல் சட்டத்தில் சாமர்த்தியம் பெற்ற மற்றொருவக்கீல் கனம் வீ. பாஷியமய்யங்காருக்குக் கொடுத்திருக்கலா மென்று நாங்கள் சம்மதித்தாலும் குணத்திலும் நலத்திலும் ஒருவர்க்கொருவர் குறைந்தவர்க ளென்று சொல்வது அசாத்தியமே. ஆயினும் யோசிக்குமிடத்து சுப்பிரமணி ஐயரே இதற்கு முன் இரண்டு மூன்று தடவைகளில் அந்த ஸ்தானத்தை வகித்திருக்கிறார். உயர்தர நியாய ஸ்தலத்தில் நியாயாதிபதி ஸ்தானமென்பது பொது ஜனங்களால் மிக்க மதிப்பு பெறப்பட்டது. பொது ஜனங்கள் நினைத்தபடியே முடிந்த இவ் விஷயமானது பொது ஜனங்களுக்கும், கவர்ன்மெண்டுக்கும் அதிக திருப்தியைக் கொடுத்தது. ஐரோப்பிய நியாயாதிபதியை விட இந்திய நியாயாதிபதி யொருவருக்குப் பொறுப்பு அதிகமுண்டு. இந்த சட்டமும்—இந்த ஆசாரங்களும் அதிக சிக்கலாய் வேறுபாடுள்ளவைகளா யிருப்பதினால் இதையறிய இந்திய நியாயாதிபதியே ஏற்றவராதலால், ஐரோப்பிய நியாயாதிபதியை விட இந்திய நியாயாதிபதி அதிக பொறுப்

பாளியாக யிருக்கிறார். இந்த சமூகத்திலுள்ள வைதிகர்கள், லௌகிகர்கள், நவீன ஆசார சீர்திருத்தக்காரர்களாகிய சகலருடைய கோட்பாடுகளின் இலட்சியம் பழுதுறாவண்ணம் பார்க்கும் பொறுப்பும் இந்திய நியாயாதிபதிகளைச் சேர்ந்தது. ஒவ்வொரு காலங்களிலும், மனச்சாட்சிக்கு விரோதமின்றி, தைரியத்துடனும், ஞானத்துடனும் நியாயத் தீர்ப்பு செய்யவேண்டும். 'சமன் செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற் கோடாமை சான்றோர்க் கணி' என்னும் பெரியாரின் வாக்கியப்படி வாதிப் பிரதிவாதிகளாலே அறிவிக்கப்பட்டவற்றை முறைப்படியுள்ளபடி அறிந்து, அவ்வுள்ளவற்றை மறைக்காமல் பகைவர், அயலார், நட்பினர் இம்மூவகையோருக்கும் ஒப்பச் சொல்லும் பொறுப்பு இந்திய நியாயாதிபதிகளுடையதே. வாக்கினாலே தர்மத்தின்படியே சொல்லினும் மனது ஒரு பக்கத்திலே சாய்ந்திருக்குமாயின் அச்சொல் நடுவுநிலைமையாகாதென்பதை நியாயாதிபதிகள் ஒவ்வொருவரும் அறியவேண்டும்.

'சொற்கோட்ட மில்லது செப்பமொரு தலையாவுட் கோட்டமின்மைபெறின்' என்பதினாலறிக. சென்னை கவர்ன்மெண்டார் அதிக காருண்யம் காட்டிய இந்திய கனவான்களுக்குள் இவரே சிறந்தவர். ஸர். எம். ஈ. கிராண்டப் முதல் முதல் இவரைச் சட்டசபை மெம்பராக்கினார். இவர் சட்டசபையிலிருக்கையில் கவர்ன்மெண்டாருக்கும் பொதுஜன சமூகத்திற்கும் முறையே தன் கடமையைச் செவ்வனே செலுத்தி வந்தார். இவருடைய நன் முயற்சியையும் ஊக்கத்தையுங் கண்ட கவர்ன்மெண்டார் இவருக்குத் திவான் பகதூர் பட்டமொன்றும் இந்திய இராஜ்பாதிபத்தியத்தின் கௌரவ

தளகர்த்தர் என்று பொருள்படும் கே. ஸி. ஐ. ஈ. பட்டமொன்றும் இவருக்குக் கொடுத்தார். இந்த பத்திரிகை எழுதின நம்பிக்கையினுல் சுப்பிரமணி ஐயர் நியாயாதிபதி ஸ்தானத்திலிருந்து இந்து ஜனுசார சீர்திருத்தங்களைக் கவனிக்கவும், விர்த்திபண்ணவும் நேரிடுமென்பதைப் பலர் எதிர்பார்த்திருந்தார்கள். சிற்சில நவீன ஆசார சீர்திருத்தக்காரர்கள் மேடையில் பிரசங்கமாரி பொழிந்து, பிறகு அநுஷ்டானத்தில் பின்வாங்குவதுபோல் சுப்பிரமணி ஐயர் இல்லை. இவர், எப்பொழுதும் நிதான நோக்கத்தைக் கொண்டவர். திடீரென்று பொங்கி யடங்கும் தன்மையைக் கொண்டவரல்லர். பழைய ஆசாரங்களில் பாதகமா யிருக்கும் சிற்சிலவைகளை விலக்கியும், புதிய ஆசாரங்களில் நன்மையாயிருக்கும் சிற்சிலவைகளை மேற்கொண்டும் இருப்பது வழக்கம். ஆசார சீர்திருத்தக்காரர்களிற் சிலர், ஸ்திரீ தர்மங்களைக் காப்பாற்ற எவ்வளவு கஷ்டப்பட்டு அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தார்களோ அதைவிட சுப்பிரமணி ஐயர் நியாயஸ்தலத்திலிருந்து கொண்டே ஸ்திரீகளின் மிராசுகளைத் தீர்ப்பின் மூலமாக அநுபோகத்திற்குக் கொண்டுவந்தார். வருடந்தோறும் தேசத்தின் நாலு பக்கங்களிற் கூடும் ஆசாரசீர்திருத்தக் கான்பரன்ஸில் பரத்தையர் தங்கள் ஈனத்தொழிலுக்கு உபயோகிக்கச் சிறு பெண்களை ஸ்வீகாரஞ்செய்வதைக் கண்டனஞ் செய்து வந்த ஜனத்தலைவர்கள் செய்ததைவிட சுப்பிரமணி ஐயர் தன் ஸ்தானத்திலிருந்துகொண்டே இது கூடாதெனத் தீர்ப்புசெய்தார். இவருடைய நியாயத் தீர்ப்புகள் இங்கிலாந்திலுள்ள 'ப்ரீவி கவுன்ஸில்' என்னும் ஏகாதிபத்திய நியாயஸ்தலங்களிலுள்ள ஜட்ஜிகளால் சாலவுங் கொண்டாடப்பட்டன. வக்கீல்களுக்கு இவருடைய கோர்ட்டென்றால் வெகு கொண்டாட்டம். நியாயாதிபதியாய் நியமிக்கப்பட்ட வுடனே, பெயின் (Bain's Grammar) துரையால் எழுதப்பட்ட

ஆங்கிலேய இலக்கணத்தை முதலிலிருந்து மறுபடியும் படிக்க வாரம்பித்தார். இது நம் நேயர்களுக்கு ஆச்சர்யத்தைத் தரக்கூடும். வக்கீலாயிருக்கையில் எழுத்துவேலை அதிகமாயில்லாததினால், அதைக் கவனிக்கவில்லை. இப்பொழுதோ எழுத்து வேலைகள் அதிகமாயிருப்பதினாலும், உபயோகப் படுத்தும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அளவு கொண்டதாயுமிருப்பதினால், சொற்களைச் சரிவர அடுக்குவதற்கு இலக்கணம் இன்றியமையாததினால் சுப்பிரமணி ஐயர் மறுபடியும் இலக்கணத்தைப் படிக்க முயன்றார். ஆங்கிலேய பாஷையில் அபூர்வமாய் வழங்கிவரும் சொற்றொடர்களை ஐக்கோர்ட்டிலிருக்கும் ஐரோப்பிய ரிஜிஸ்தரார்களைக் கேட்டு எழுதுவது வழக்க மென்பதை இவர் கூறியிருக்கிறார்—சென்னை உயர்தர நியாயஸ்தலத்தில் பிரதம நியாயாதிபதியாயிருந்த ஸர். ஆர்தர் காலின்ஸ் துரை 1899-ம் வருடத்தில் பென்ஷன் பெற்று வேலையை விட்டு நீங்கினவுடன், காலியாயிருந்த ஸ்தானத்திற்குச் சென்னை கவர்ன்மெண்டார் மற்றொருவரைக் காயமாக நியமிக்கும் வரை சுப்பிரமணி ஐயரைப் பிரதம நியாயாதிபதியாய் நியமித்தார்கள். கவர்ன்மெண்டாருக்கு இவரிடத்தில் உண்டான நம்பிக்கையினாலும் மரியாதையினாலும், இவர் பிரதம ஜட்ஜியாய் நியமிக்கப்பட்ட 1900-ம் வருடப் பிறப்பு தினத்தன்று 'நைட்ஹுட்' என்கிற பிரபு பட்டமும் பெற்றார். இப்பிரபு பட்டம் ஏகாதிபத்யத்தை யாண்டுவரும் சக்கரவர்த்தியால் அளிக்கப்படுவது. இதுவரை சென்னை இராஜதானியில் இப்பட்டம் பெற்றவர்கள் சற்றேறக்குறைய பத்து பேர்களே யாவர். உயர் நிலையினை யடைந்து உத்தமராக வேண்டு மென்று முயலுகின்ற ஒவ்வொருவரும் நடுவுநிலைமையினின்று தவறு தொழுகுதல் வேண்டு மென்பது இவர் துணிபு.

"நடுவு நின்றார்க் கன்றி ஞானமு மில்லை
நடுவு நின்றார்க்கு நரகமு மில்லை
நடுவு நின்றார் நல்ல தேவரு மாவர்
நடுவு நின்றார் வழி நானு நின்றேனே"

(திருமந்திரம்)

நம்மனோருட் பலர் உயர் நிலையினை யடைந்து விளங்க வேண்டு மென்னுங் கருத்துடையவராக இருக்கின்றாரே யன்றி, அதற்குரிய சாதனத்தை மேற்கொண் டொழுகுகின் றாரில்லை. ஒவ்வொருவரும் உயர் நிலையினை யடைந்து விளங் குவதற்குக் காரணம் நடுவு நிலைமையினின் றொழுகுவதா மென்று உணர்வாராயின் நடுவு நிலைமையினின் றொழுகு மொழுக்கத்தைப் பெற முயற்சி செய்வர். சாதனமின்றி யொன்றைச் சாதிப்பதொரு வாற்றானு மின்மையின், நடுவு நிலைமையினின்று ஒழுகுவதாகிய சாதனத்தைப் பெறாதவர் உயர் நிலையினை யடைந்து விளங்குவதாகிய சாத்தியத்தினை பெறுவதே யில்லையாம். நடுவு நிலைமை யென்னும் அற நெறி யிற் சென்று ஒழுகுவோரிடத்து ஏனைய அறங்களெல்லாம் நிலைபெற்றிருப்பனவாம். அறங்களெல்லாம் நம்மிடத்திருக்க வேண்டு மென்று விரும்புகின்றவர் நடுவு நிலைமையென்னும் அறத்தில் தவறா தொழுக முயலுதல் வேண்டும். அறத்தின் வடிவமாவது பொதுவாக மநு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். நடுவு நிலைமையை யுடையவரது செல்வம் அழியாது நின்று அவன் சந்ததியார்க் கும் பயன்படுவதாம் என்று பெறப்படுவதை நம்மனோர் கடைப்பிடித்துத் தமது மக்களது நன்மையைக் கருதியாவது நடுவு நிலைமை யுடையவராக இருத்தல் வேண்டும். நம்ம னோருள் நடுவு நிலைமையினின்றுந் தவறுவோர் பெரும் பான் மையும் நியாய சபையோரும் வணிகருமாவர். நடுவு நிலைமை யினின்றுந் தவறினோருட் பலர் வெளிப்படையாக இம்மையி

லேயே பலவகையனவாகிய அவமானத்தை யடைந்து துக்க
வாழ்வினராயிருந்து துன்புறுவர் என்பதை நடுவு நிலைமையி
னின்றுந் தவறியவர்களின் வரலாற்றா லறியலாம். நடுவு
நிலைமையினின்றுந் தவறாதிருப்பதே பெருஞ் செல்வமாம்.
'நினைத்தலுஞ் செய்தலோ டொக்கும்' என்று பரிமேலழகர்
கூறுகின்றவாறு அவ்வெண்ணமே நடுவு நிலைமையோடு கூடி
வாழ்வதாம். இவ் வெண்ணத்தையாவது பெற நாம் பெரி
தும் முயலல் வேண்டும். நித்திய வாழ்க்கையின் ஒழுக்கத்
திற்கு இன்றியமையாச் சாதனமாகிய நடுவு நிலைமையை நாம்
பெறுமாறு உழைக்கவேண்டும். இவ்வரும் பெருங் குணங்
கொண்ட சுப்பிரமணிய ஐயர் 1903-ம் வருடத்திலும் 1906-ம்
வருடத்திலும் இருமுறை பிரதம நியாயாதிபதி ஸ்தானத்தை
வகித்திருந்தார். 1903-ம் வருடம் அக்டோபர் மாதத்தில்
காலியான பிரதம நியாயாதிபதி ஸ்தானத்தை வகிக்க, அக்கா
லத்தில் சென்னை மாகாணத்தைப் பரிபாலித்து வந்த காருண்ய
கவர்னரான ஆம்ப்தில் பிரபு, சுப்பிரமணிய ஐயரைப் பலவாறு
கேட்டுக் கொண்டும், இவர் தமக்குத் தேகவலிமை முன் போ
லில்லை யென்று கூறி மறுத்து விட்டார். எனினும், ஆம்தில்
பிரபு இவரை விடவில்லை. இவருக்கு அதிக உருக்கமான
கடிதமொன்று எழுதி எப்படியாகிலும் மற்றொருவர் வரும்
வரை அந்தஸ்தானத்தை வகிக்க வேண்டு மென்று மன்
றாடவே, சுப்பிரமணிய ஐயர் ஆம்தில் பிரபுவின் மனதைப் புண்
ணாகச் செய்தல் நலமல்ல வெனக் கொண்டு ஒரு மனத்தின
ராய் அங்கீகரித்தார். இங்ஙனம் மாறிமாறி இவர் பிரதம
ஜட்ஜியாயிருந்து பென்ஷன் பெற்றார். இவர் நியாயாதிபதி
யாய்ப் பன்னிரண்டு வருட காலம் உழைத்து வந்தார்.
இவர், தன் தேக நிலைமையை யுத்தேசித்து இனி இவ்வேலை
யில் முன்போல் உழைக்கச் சக்தி போதாதென்பதைக்
கொண்டு, வேலையைவிட்டு நீங்கினார். இவர், இன்னும் எட்டு

மாத காலம்வரை வேலையிலேயே யிருந்திருப்பாராயின் மாதம் 1-க்கு 1500 ரூபாய் கொண்ட முழு பென்ஷனைப் பெற்றிருப்பார். இச் சொற்பகாலக் குறைவினால், இவர் தற்பொழுது மாதம் 1-க்கு 1100 ரூபாய் பென்ஷனை பெற்று வருகிறார். இநகாறும் சர்க்காருக்கு உழைத்ததினால், சென்னை கவர்ன்மெண்டார், இவர் வேலையை விட்டு நீங்கினதற்காக விசேஷ அறிக்கையொன்று பிரசுரித்தார். பின்வருவது அறிக்கையின் சாராம்சம்.

"கனம் ஜட்ஜி ஸர் எஸ். சுப்பிரமணி ஐயர் கே. ஸி. ஐ. ஈ. திவான்பகதூர் அவர்கள் 1907-ம் வருடம் நவம்பர் மாதம் 13-ந் தேதி முதல் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜி ஸ்தானத்திலிருந்து வேலையை விட்டுப் பென்ஷன் பெற உத்திரவாயிற்று. ஹைகோர்ட்டில் ஜட்ஜியாக இருந்த காலத்தில், ஸர் எஸ். சுப்பிரமணி ஐயர் செய்த பேருழைப்பைச் சபையோடுகூடிய கவர்னரவர்கள் சாலவுங் கொண்டாடுகிறார். பரந்த சட்ட ஞானமும், சுயாதீனத் தன்மையையும், ஆழ்ந்த படிப்புங் கொண்டு உழைத்து வந்த ஸர். எஸ். சுப்பிரமணி ஐயர், இவரது பெயர் பொது ஜனங்களாலும் சர்க்காராலும் என்றும் மதிக்கப்பட்டு அழியாமல் நிற்கும்."

இவர் வேலையை விட்டுப் பென்ஷன் பெற்ற காலத்தில் இவருடைய சாமர்த்தியத்தையும் இராஜ விஸ்வாஸத்தைக்கொண்டு உழைத்ததையும் சென்னை மெயில், டைம்ஸ் பத்திரிகைகள் மிகவும் புகழ்ந்து கூறின.

இவர் கீழ் வக்கீல் வேலைபார்த்து வந்த காலஞ்சென்ற வீ. கிருஷ்ணசாமி ஐயருக்கு முதல் முதல் சர்க்காரிடமிருந்து கௌரவபட்டம் வாங்கிக்கொடுத்து அவரை முன்னுக்குக் கொண்டு வந்தார். இவ்வனம் நீண்டகோர் புகழ்

பெற்ற இவரை வசை கூறாமலிருக்கவு மில்லை. பிரம்மஞான சங்கத்தாருடன் கலந்து, அன்னிபெஸண்ட் அம்மையுடன் சேர்ந்து இவர் தன்னுடைய சுயேச்சையை விட்டுவிட்டு வந்த அம்மாளிடம் அடைக்கலமே புகுந்துவிட்டார் எனப் பலர் கூறினர். இது முற்றிலும் தூற்றமே யாகும். மானிடராய்ப் பிறந்தார் யாரும் ஒருவருக்கோ அல்லது ஒரு சமூகத்திற்கோ கட்டாயமாய்க் கட்டுப்பட்டிருக்கின்றனர். இது இயற்கை. சகல சாம்பிராச்சியங்களையுங் கொண்டு சார்வ பௌமனாயிருப் பவனும் தன் மனைவியிடத்தாகிலும் அல்லது தன் பிறுள்ள அமைச்சனிடத்தாகிலும் கட்டுப்பட்டிருக்கிறான். மதங்களைப் பொழிந்து இழுமாந்திருக்கும் யானைகளும், விஷப் பற்களைக் கொண்டு ஊரும் பாம்பினங்களும், ஆகாயத்தை யளாவிப் பறக்கும் பட்சி சாலங்களும், சர்வகலா ஞானம் பெற்ற கவிஞர் பலரும் கட்டுப் படுதலை யறியோமோ? பிரபஞ்சத்தை நீச துச்ச மெனக் கொண்டு அச்சமற்றிருக்கும் முற்று முணர்ந்த முனிவர்கள் தங்கள் சுயாதீனத்தை ஒவ்வொருவரிடம் அகல விட்டுக் கட்டுப்பட்டிருத்தலை யாம் பன்முறை கேட்டும் படித்து மிருக்கிறோம். மனிதன் சாதாரணமாக, தான் பழகிவரும் சமூகத்திற்கும், உறவாடி வரும் ஜீவன்களுக்கும் கட்டுப்பட்டிருத்தல் சாதாரணம். இவர்கள் கட்டுப் படாமலிருத்தல் முடியாது. ஆகவே, ஸர். எஸ். சுப்பிரமணி ஐயர் அடையாற்றங்கரையிலுள்ள பிரம்ம ஞான சபை (தியஸாபிகல் ஸோஸைடி)க்கும் அச்சபையின், தலைவராகிய அன்னிபெஸண்ட் அம்மைக்கும் கட்டுப்பட்டிருத்தல் சகஜமே. பிரமம ஞான சங்கத்திற்கு எதிராகவோ அல்லது மாறாகவோ எண்ணவும் செய்யவும் எங்ஙனம் இவரை நாம் எதிர்ப்பார்க்க முடியும். அன்னி பெஸண்ட் அம்மாள் யாதாமொரு குற்றஞ் செய்யின் அதைத் தன் குற்றமாகவே பாவித்துப் பொறுத்துக் கொள்வார் இவர். அம்மாள், யாவரும் ஆச்சரியப்படும்படியான காரியங்களைச்

செய்யின் அவைகளைத் தாம் செய்ததாகப் பாவித்தது சந்
தோஷமுற்றிருப்பார். ஆகவே, இவ்விஷயத்தில் டாக்டர்
ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரை யாவது மற்றெந்த பிரம்ம
ஞான சபையின் அங்கத்தினரையாவது குற்றங் கூறுதல்
தகாது. பொது ஜனங்களுக்கு இது திருப்திகரமற்றதா யிருக்
கக்கூடும். பிரபஞ்சத்திலுள்ளவர்கள் இவர்களைத் தூற்றக்
கூடும். ஜனங்களுடைய மனதிற்குப் பிடிக்காத காரியங்களைச்
செய்பவர்களைச் சனங்கள் தூற்றுதல் எந்நாட்டிலுமுள்ளதே.
1912-ம் வருடத்தில் பிரம்ம ஞான சங்கத்தில் இருந்த இரு
சிறுவர்களை அன்னிபெஸண்டம்மை அப் பிள்ளைகளின் தகப்ப
னருக்கு மாறாக சீமைக்கு அழைத்துச் சென்றதைப் பற்றி
ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அன்னிபெஸண்டைத் தாங்கிப்
பேசினரென்பதைக் கேட்ட பலர் இவர்மீது ஒருவாறு அதி
ருப்தி கொண்டவர்களாகவே யிருந்தனர். இவ்வளவு கம்பீர
புருஷருக்கும் குறையில்லாமற் போகவில்லை. குற்றமற்ற
மனிதர்கள் கிடையா. பூலோகத்தைத் தன் குளிர்ந்த கலை
களினால் களிப்பையும் இன்பத்தையும் தருகின்ற சந்திரனுக்
கும் களங்கமில்லாமலில்லை. சகல பாபத்தையும் போக்குந்
தன்மையை யுடையதெனக் கூறும் கங்காநதிக்கும் அதின்
பேனமே குற்றமாகும். உலகத்தில் உயர்ந்தனவும், பெரு
மையனவுமாய வஸ்துக்களுக்குக் குற்றங்கள் இயற்கையாகவே
ஏற்படுதல் பகவத் சிருஷ்டி போலும். சக்தி எதிர்
சக்தி—கட்சிப் பிரதிகட்சி முதலியவைகள் ஏற்படுதல் பிர
பஞ்ச போக்கன்றோ? இப்பிரபஞ்ச போக்கை நாம் எங்ஙனம்
தடுக்க முடியும்? காலமென்னும் பெரிய இரதம் சுழற் காற்று
போல் சுழன்று ஓடுகையில், பிராணிவர்க்கங்கள் என் செய்
யும். அவைகளும் சுழன்று கொண்டுதா னிருக்கவேண்டும்.
நிற்க, நம் டாக்டர். எஸ். சுப்பிரமணிய ஐயர் பிரம்ம ஞான சங்
கத்திற்கு உதவித் தலைவராக யிருந்து வருகிறார். கர்னல் ஆல்

காட் துரையின் ஞாபகார்த்திற்காகத் தீண்டாத் திருமேனியர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு இவர் சாலவும் உதவி புரிந்து வந்தார். சென்னையில் படிக்கும் மாணவர்கள் பலருக்கு மாதந்தோறும் அவர்கள் பள்ளிக்கூட சம்பளத்திற்குச் சகாயஞ் செய்து வந்தார். இவர் கல்லூரி மாணவர்களுக்கு ஏற்ற வசதிகள் ஏற்படுத்தவேண்டுமென்னும் நோக்கத்தினால், காலஞ்சென்ற அரங்கநாத முதலியாரின் ஞாபகார்த்தமாகத் தற்பொழுது இருக்கும் 'விக்டோரியா ஹாஸ்டல்' என்னும் விடுதி ஸ்தாபிக்கப் பெருமுயற்சி செய்தார். கீழ்நாட்டுப் படிப்பும் மேனாட்டுப் படிப்பும் ஒன்றை யொன்று தழுவவேண்டும் என்னும் நோக்கத்தை இவர் பெற்றிருந்தார். இதுகாரணம் பொருட்டே யனரி ஐயரவர்கள் அடிக்கடி தன்னெதிர்ப்படும் சமஸ்கிருத பண்டிதர்களையும், தமிழ் வித்வான்களையும் ஆங்கிலம் கற்கும்படி வற்புறுத்துவார். சாஸ்திர சம்பிரதாயங்களினும் தர்க்க மீமாம்சங்களினும் ஐயந்திரிபுறக்கற்ற வித்வான்கள் பலரை வரவழைத்துக் காலத்தையொட்டிய ஆசார அநுஷ்டானங்களைக் கொள்ளவும் சாத்தியமற்ற புராதன கர்மங்களை விலக்கவும் இவர் தூண்டினர். முக்கியமாக இவருடைய கொள்கையானது கேவலம் பழைய கர்மங்களைப் பற்றிக் கூறிக்கொண்டிருப்பதைக் காட்டிலும் நவீன கர்மங்களைக் கொண்டு நன்கு அநுஷ்டித்தல் நலமென்பதே. சாதாரணமாக நம் நாட்டில் அதிலும் இத்தென்னாட்டில், பிராமணர்களும் இன்னும் இதர வர்ணத்தார்களும் மநுபராசர ஸ்மிருதிகளையே ஆதாரமாகக்கொண்டு எடுத்ததற்கெல்லாம் சாஸ்திர மென்றும், தொடுத்ததற்கெல்லாம் ஸ்மிருதி வாக்கியமென்றுங் கூறி நாகரீகமற்ற நிலைமையில் ஜனங்களைக் கொண்டுவருகிறார்கள். திரேதாயுக துவாபரயுகங்களில் அவலம்பித்து வந்த யஜ்ஞஹோம தவங்கள் யாவும் இக்காலத்தில் நடைபெறுமா வென்பதை நாம் கவனிக்க வேண்டும். பண்டைகாலத்தில் சகல கர்மாக்களையும் சரிவர

அநுஷ்டிக்கும்படி உபகாரஞ்செய்து வந்த மன்னர்களும் தனவந்தர்களும் இக்காலத்திலில்லை. அதுடன் இம் மேற்கூறிய கர்மாக்களை அநுஷ்டிக்கத் தகுந்த கர்த்தாக்களுமில்லை. ஜனங்கள் தினேதினே லோக வியவகாரங்களையே பக்தி பூர்வமாய் அநுஷ்டிக்க ஆசையுமில்லை, நேரமுமில்லை. இதல்லாமல் சமுத்திரந் தாண்டக்கூடாது. பாலிய விதந்துக்களைக் கலியாணஞ் செய்யக்கூடாது. பிரௌடா விவாகம் செய்யக்கூடாது. சமபந்திபோஜனங் கூடாது முதலிய விஷயங்களால் நித்தநித்தம் எண்ணிறைந்த சண்டைகளும் சச்சரவுகளும் மனஸ்தாபங்களுமுண்டாகின்றன. நாட்டின் அபிவிர்த்திக்காக சமுத்திரந் தாண்டிச் செல்லவேண்டியதா யிருக்கும். இதைத் தடுத்தல் முறைமையோ? ஏனெனில் இந்தியாவை யொத்த அநேக நாடுகள் தினேதினே தனத்திலும் கல்வியிலும் சகல வழிகளிலும் முன்னேற்றமடைகின்றன. நம் நாடுமட்டும் பழைய சாஸ்திரமெனக் கூறிக்கொண்டிருக்கின்றது. மின்சாரவண்டிகள் மோட்டார் ரதங்கள், ஆகாய விமானங்கள் முதலிய துரித வாகனங்கள் ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் இரட்டைக்காளைக்கட்டிய ஓலைக்குச்சு வண்டிகளில் ஏறிச் செல்ல யார்தான் மனங்கொள்ளுவார்கள்? நாட்டின் நன்மைக்காகச் சிற்சில பழைய சாஸ்திரங்களை மாற்றவேண்டும். காலம் மணிக்கு மணி விநாடிக்கு விநாடி மாறிக்கொண்டே வருகின்றது. நேற்றைய ஆசாரம் இன்றைக்கில்லை, நேற்று குடிசையாயிருந்த வீடு இன்று உப்பரிகையாயிருக்கின்றது. நாயும் நரியும் ஓடி ஊளையிட்டிருந்த ஊர் இன்று யானையும், பரியும் அம்பாரியிட்டுப் பவனிவரும் நிலைமையிலிருக்கின்றது. முப்பது வருடங்களுக்கு முன் காதிலுங் கேட்டிராத ஜப்பான் இன்றைக்குச் சகல ஐஸ்வரியத்துடனும், வீரத்துடனும், கீர்த்தியுடனும் விளங்குகின்றது. கல்வி கேள்விகளற்றுக் கானகத்தே திரிந்து ஓடின பிலிப்பைனர், பிக்மீராயியர், காபிரிகள் முதலிய நாகரிகமற்ற ஜாதியார்

கள் இந்தியர்களின் நிலைமையைக் கண்டு [illegible] [illegible]றார்கள். பிரபஞ்சமனைத்தும் இங்ஙனமிருக்க, இந்தியாமட்டும் பழைய கதையைக் கொண்டிருத்தல் அழகல்லவென்பதைக் கண்ட சுப்பிரமணி ஐயர் நாட்டை அபிவிர்த்தி செய்வதற்கு வைதிகர்கள் அவசியமென்பதைக் கொண்டுதான், இவர்களைக் காஞ்சிபுரத்தில் 1912-ம் வருடத்தில் வரவழைத்துப் பெரிய பரிஷத் ஒன்று கூட்டினர். இதல்லாமல் தர்மரக்ஷண சபையொன்றும் இவர் ஸ்தாபித்தார். தென்னாட்டில் நிலைபெற்றிருக்கும் பிரபல தேவஸ்தானங்களின் திரவியங்கள் போதுமான கல்விஞானமற்ற சிற்சில தர்மகர்த்தாக்களால் அழிக்கப்படுகின்றன. தொன்றுதொட்டு வெகுகாலமாகவிருக்கும் கோயில் மானியங்களை விலைகூறி விற்கின்றனர். இதைச் சர்க்கார் கவனிப்பதில்லை. ஏனெனில் 1858-ம் வருடத்தில் விக்டோரியா மகாராணியார் மத சம்பந்தமான விஷயங்களில் தலையிட்டுக்கொள்வதில்லை யென்று பட்டயமொன்று அளித்தனராம். ஆகவே, சர்க்காருக்குப் போதுமான செல்வாக்கும், பொறுப்பும் இம் மேற்கூறிய விஷயங்களில் இல்லாமையினால் பொதுஜனங்களே இவ்விஷயங்களைச் செய்யவேண்டியதாயிற்று. பூர்வமிருந்த இந்துமகம்மதிய மன்னர்களும், ஐரோப்பாகண்டத்திலுள்ள பல நாட்டு மன்னர்களும், அவரவர்களுடைய ஆளுகை காலங்களில் குடிகளின் சௌகரியத்திற்குரிய சகல பொறுப்புகளையும் இவர்களே ஏற்றுக்கொண்டிருந்தனர். அந்தந்த மதத்தினர்களை அவரவர்களுக்குரிய கடமைகளைச் செவ்வனே நடத்தும்படி ஆக்ஞாபிப்பது அரசாங்க தர்மம். ராஜாங்கத்தார் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாதிருப்பின் அக்கடமைகளைக் குடிகளே செய்ய நேரிடுகின்றன. குடிகளுக்குரிய கடமைகளைச் செவ்வனேயறிந்து, பொறுப்புகளை மேற்கொண்டு சுப்பிரமணி ஐயர் [illegible]ராயினர். இவர் ஸ்தாபித்த தர்மரக்ஷண சபையினால் காஞ்சி

திருப்பதி, ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் முதலிய ஸ்தலங்களிலுள்ள தேவாலயங்களைச் சரிவர நடத்தும்படியான ஏற்பாடுகளைச் செய்தார். இந் தர்மரக்ஷண சபைக்குத் தலைவர் இவரே. 1872 ம் வருடத்தில் இராமய்யங்கார் கமிட்டியொன்றும், 1878-ம் வருடத்தில் ஸர் உல்லியம் ராபின்ஸன் கமிட்டியொன்றும், 1883-ம் வருடத்தில் கார்மைகல் கமிட்டியொன்றும், 1893-ம் வருடத்தில் முத்துஸ்வாமி ஐயர் கமிட்டியொன்றும், 1896 ம் வருடத்தில் கலியாணசுந்தரமய்யர் கமிட்டியொன்றும் 1903-ம் வருடத்தில் ஜீ. ஸ்ரீநிவாசராவ் கமிட்டியொன்றும் முறையே தேவாலய மேல் பார்வைக்கும், தேவாலயங்களுக்குரிய சாஸனம் முதலிய திரவியங்களுக்கும் சர்க்கார் ஆதீனம் ஒத்துக்கொள்ளவேண்டுமென்று மன்றாடியும் கவர்ன்மெண்டார் நாளது பரியந்தம் கமிட்டிகளின் வார்த்தைகளையாவது, பொதுஜனங்களின் வேண்டுகோளையாவது கேட்கவில்லை. ஆனால், தர்மரக்ஷண சபையார் தேவாலயங்களைச் சற்றேறக்குறைய சீர்திருத்தஞ் செய்தார். சுப்பிரமணிய ஐயர் ஸ்வபாவத்திலேயே மிக்க தெய்வபக்தி யுள்ளவர். உபநிடதங்களிலும், புராணங்களிலும் இவருக்கு அத்தியந்த நம்பிக்கை. இந்துமத இரகஸ்யங்களையும், ஆரியமத உபாக்கியானங்களையும், பாமரர்களும் அறியும்படிச் செய்யவேண்டு மென்கிற ஆசை இவருக்கு வெகுகாலமா யிருந்தது. ஆரியமத விஷயங்களைச் சரிவர அறியாது தூஷிப்பதையே இயற்கையாகக் கொண்டுள்ள கிறிஸ்துவ பாதிரிமார்கள் கிறிஸ்துவ மதமே சர்வ மதங்களிலுஞ் சிறந்ததென உலகத்தாரறியும்பொருட்டு அமெரிக்காவில் சர்வமத பரிஷத் தொன்று ஏற்படுத்தினார்கள். இவ்வாசிய பரிஷத்திற்குப் பற்பல நாடுகளினின்றும், அந்தந்த மதங்களை யெடுத்துக் கூறக் கணக்கற்ற பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இந்து மதத்தையும், பூர்வ ரிஷிகளின் உபாக்கியானங்களையும் ஆங்கு சிறப்பித்துக் கூறுவதற்குக் காலஞ்

சென்ற சுவாமி விவேகாநந்தர் அமெரிக்காவிற்கு விஜயஞ்செய்தது சுப்பிரமணி ஐயரின் முயற்சியினலேயே. முதல் முதல் சுவாமி விவேகாநந்தருக்குப் பேருதவி பண்ணின பரம புருஷரும் இவரே. இவர் தென்னாட்டிலுள்ள கனதனவான்களுக்கெல்லாம், ஸ்வாமியை அறிமுகஞ்செய்துவைத்து அவர்களைப் பல உதவி செய்யும்படி வற்புறுத்தினர். மைசூர் மகாராஜா, இராமநாதபுரம் ஜமீன்தார், திருவாங்கூர் மகாராஜா முதலிய சுதேச மன்னர்கள் ஸ்வாமி விவேகாநந்தரின் திக்குவிஜயத்திற்குப் பேருதவிபண்ணும்படிச் செய்தவரும் இவரேயாவர். கிறிஸ்துவ பாதிரிமார்களால் அலட்சியஞ் செய்யப்பட்ட நம் இந்து மதத்தை ஸ்வாமி விவேகாநந்தர் மூலமாக உத்தாரணஞ் செய்த சுப்பிரமணி ஐயர் இந்நாட்டிற்கு அழியாப் பெயரைக் கொண்டுவைத்தார். இதல்லாமல், சுப்பிரமணி ஐயர் 'சுத்த தர்ம மண்டலம்' என்னும் தியான சமாஜமொன்றை ஸ்தாபித்தார். யோகாப்பியாசத்தில் இவருக்கு வெகு பயித்தியம். இவர் அடிக்கடி கதவைப் பூட்டிக்கொண்டு ஒருவருடனும் வாய் பேசாமல் நாள் முழுவதும் இருப்பது வழக்கம். தான் உண்டு, தன் அறை உண்டு, தன்னுடைய தியானமுண்டு என்றிருப்பார் இவர். சரியான வேளையில் போஜனஞ் செய்யாமலும், நித்திரை கொள்ளாமலும் சதா யோகநிஷ்டையிலேயிருப்பது வழக்கம். இவருக்கு யோகாப்பியாசத்தைப்பற்றியும், வேதாந்த இரகசியங்களைப் பற்றியும் தத்துவ ஆராய்ச்சியைப் பற்றியும் உபதேசித்து வந்தவர் காலஞ்சென்ற டி. சுப்ப ராவ் அவர்களே யாவர். பிரம்ம ஞான சங்கத்தில் அதிக பக்தி பாராட்டி வருவதற்குக் காரணம், அன்னிபெஸண்டினலாவது அல்லது இதர பிரம்ம ஞான உபந்யாசகர்களாலாவது அல்ல; இவருக்குப் பிரம்ம ஞான உணர்ச்சி யுண்டானதற்குக் காரணம் சுப்பராவே. இவர் 1890-ம் வருடத்தில் மாண்டார். இவருடைய அகால மரணத்தைப் பற்றி அடிக்கடி நினைத்துத்

துக்கப்படுவார். சிறந்த மதாபிமானமும் உயர்ந்த தேசாபிமானமுங் கொண்ட நமது ஸ்ரீ மணி ஐயர் நவீனவழியை யநுசரித்து பகவத்கீதை ஆராய்ச்சி செய்தார். சாதாரணமாக நம் நாட்டில் நடமாடிவரும் பகவத்கீதையில் 700 ஸ்லோகங்களே யிருக்கின்றன. அநேக பண்டிதர்களும் கீதைக்கு 700 ஸ்லோகங்கள் தான் என சித்தாந்தப்படுத்தி யிருக்கின்றனர். ஸ்ரீமான் சுப்பிரமணி ஐயர் அநேக முகாந்தரங்களைக் காட்டி, உபமான உபமேயங்களிட்டு, பகவத்கீதை 700 ஸ்லோகங்களுக்கு மேல்பட்ட தென்றும், பிற்காலத்தில் கொஞ்சங் கொஞ்சமாக உபயோகமற்ற அநேக ஸ்லோகங்கள் எடுக்கப்பட்டன வென்றும் கூறி, புதிய பகவத்கீதை யொன்று அச்சிட்டு வெளி விடுத்தார். இக்கீதை வெளிவந்தவுடன் வைதிகர்கள் பலரும்—சமஸ்கிருத மறிந்தவர்கள் சிலரும்—அநேக ஆட்சேபணைகளைக் கொண்டுவந்தார்கள். இக்கீதையைப் பலர் ஒப்புக்கொள்ளவில்லை. இது கேவலம் கல்பனா சக்தியைக் கொண்டது என்றும் தர்ம விருத்த மென்றும் பலர் கூறி இகழ்ச்சி செய்தனர். சுத்த தர்ம மண்டலத்தின் வாயிலாக அநேக சிறு சிறு மத கிரந்தங்கள் இவர் பிரசுரித்தார். பிரணவ வாத மென்னும் புராதன நூலொன்றையும் இவர் பிரசுரித்தார். இப் பிரணவ வாத கிரந்தத்தை ஏற்கனவே காசியிலுள்ள பகவான் தாஸ் என்பவர் பிரசுரித்திருக்கிறார். இங்ஙனம், ஸர். எஸ். சுப்பிரமணி ஐயர் கல்வி வழிகளிலும், மத வழிகளிலும், சீர்திருத்த வழிகளிலும், நாட்டின் அபிவிர்த்திக்குரிய பல வழிகளிலும் போராடி வந்தார். இவர் பிரதமத்தில் இராஜீய விஷயங்களில் சிறிது காலம் காங்கிரஸ் சபை மூலமாகவே போராடி வந்த போதிலும், மத்தியில் வெகுகாலம் வரை இராஜீய விஷயங்களில் இவர் தலையிடவில்லை. ஏனெனில், இவர் சர்க்கார் உத்தியோக அந்தஸ்த்தில் ஊடாடி வந்தார். இராஜீய விஷயங்களில் வெளிப்படையாக

ஊடாடாமலிருந்தாரே யல்லாது, அடியுடன் இராஜீய விஷயங்களை விட்டுவிட வில்லை. இராஜீய விஷயங்களை வெகு ஆத்திரத்துடன் கவனித்து வந்தார். எவ்வளவு காலத்திற்குத்தான் ஒருவன் இராஜீய விஷயங்களை மேற் கொள்ளாமல் கவனிக்க முடியும்? இராஜீய விஷயங்களில் பெரும் பயித்தியங் கொண்ட இவர் எத்தனை காலம் கட்டுப்பட்டவராக் யிருக்க நேரிடும். கொழுந்து விட்டெரியும் அக்கினியின்மேல் எவ்வளவு கனமாகச் சாம்பல் மூடுண்டிருப்பினும் காற்று வருந் தருவாயில் அக்கினி குபீர் என்று கிளம்பித் தன் சுவாலையை வீசுகின்றது. அது போல் இயற்கையிலேயே இராஜீய விஷயங்களிற் போராடுங் குணத்தைக் கொண்ட இவர் இராஜீயப் புரட்சி வந்தவுடன் கிளம்பினர். இராஜீய விஷயங்கள் பலப்பட்டன-தேசிய விஷயங்கள் விர்த்தியாயின-ஜனங்கள் முன்னிலும் பன்மடங் கதிகமாக இவ்விஷயங்களில் ஆத்திரத்தைக் காட்ட முன் வந்தார்கள். காலமும் பரிபக்குவமாயிற்று. 1914-ம் வருடத்தில் காங்கிரஸ் மகா சபை கூடிற்று. கனம் பூபேந்தரநாத வஸு அக்கிராசனம் வகித்தார். டாக்டர் ஸர். எஸ். சுப்பிரமணி ஐயர் வரவேற்பு கமிட்டியின் அக்கிராசனதிபதியா யிருந்தார்.

---

5. ஸ்வராஜ்ய தரிசனம்

இங்ஙனம் இராஜ்ய வாழ்க்கையின் ஜனன சங்கமாகிய காங்கிரஸ் மகா சபை இச் சென்னையில் சிறப்புடன் நடந்து வருங்காலில் ஸர். எஸ். சுப்பிரமணி ஐயர் தேக பலக்குறைவையும் பாராமல் கண் பார்வைக் குறைவையுங் கருதாமல் சதா காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு வேண்டிய சௌகரியங்களைத் தானே முன் நின்று செய்து வந்தார். நாட்டின் நானுபக்கங்களினின்றும் வங்காளிகள், பஞ்சாபியர், மத்திய மாகாணத்தவர்கள், பம்பாயினர், புனே நகரத்தார் முதலிய மாகாணத்தவர்கள் பலர் கூடி ஆர்ப் பரித்த இக் காங்கிரஸ் மகாசபையில் ஸர். எஸ். சுப்பிரமணி ஐயர் சுப்பிர தீபம்போல் எண்டிசையும் விளங்கினர். இவருடைய பிரசங்கம் ஒரு புதிய கிளர்ச்சியை யுண்டாக்கிற்று. சர்க்கார் உத்தியோகத்தில் பல வருடங்கள் இருந்து சர்க்காரிடமே பென்ஷன் பெற்றுவரும் டாக்டர். ஸர். எஸ். சுப்பிரமணி ஐயர் சர்க்கார் வழிகளைக் கண்டனஞ் செய்தது ஆங்கு காணவந்திருக்கும் ஜனங்களின் மனதைக் கவர்ந்தது. இராஜ்ய விஷயங்களில் யௌவனர்களை நன்கு உழைக்கும்படி பலகாலும் தூண்டினர். வியாபார நிலைமை இந்தியாவில் பரிதாப நிலைமையி லிருப்பதற்குக் கவர்ன் மெண்டார் காரணமென்பது ஒருபக்க மிருப்பினும், ஜனத் தலைவர்களின் உற்சாகமின்மையும் உழைப்பின்மையுமே முக்கிய காரணமாகும் என்பதை வெளிப்படையாகவே இவர் கூறினர். 1914-ம் வருடத்தில் இராஜ்ய கிளர்ச்சிக்கு விதை விதைத்தாய் விட்டது. விதை மிகவும் உரங்கொண்டது. விதைத்த விதைக்கு முளை கிளம்பிவிட்டது. இம் முளை பழு

று வண்ணம் நாளுபக்கங்களிலும் காவல் வைப்பதற்குச் சுய ஆட்சிச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. பிறக, 1907-ம் வருடத்தில் பம்பாய் மாகாணத்திலுள்ள சூரத் நகரில் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபையில் மேடா கோகலே யிவர்களை நாயகராகக் கொண்ட மிதவாத கட்சியாருக்கும், திலகர் லஜபதிராய் இவர்களை நாயகர்களாகக் கொண்ட தீவிர கட்சியாருக்கும் இராஜீய விஷயமாக மனஸ்தாப முண்டாகித் தீவிர கட்சியார் காங்கிரஸ் மகா சபையினின்றும் விலகிக் கொண்டார். 1908-ம் வருடத்தில் திலகர் இராஜ நிந்தனைக்காக சிறை வைக்கப்பட்டு 1914-ம் வருடத்தில் விடுதலையடைந்தார். இவர் விடுதலையடைந்தவுடன், சென்னையில் நடந்த காங்கிரஸ் சபைக்குத் தீவிர கட்சியாரை மறுபடியும் வரவழைத்து மிதவாத கட்சியாருக்கும் தீவிர கட்சியாருக்கும் சந்தி ஏற்படவேண்டுமென்று இதை மேற் கொண்டவர் அன்னிபெஸண்ட் அம்மையாரே. அவ்வேற்பாடு சென்னையில் முடியவில்லை. 1915-ம் வருடத்தில் பம்பாயில் நடந்த காங்கிரஸ் சபையிலும் இது முடியவில்லை. 1916-ம் வருடத்தில் லக்ஷெளவில் நடந்த காங்கிரஸ் மகா சபையிலேயே முடிந்தது. இவ்விரு கட்சியாருக்கும் சந்தி உண்டாக்கி வைக்கவேண்டுமென்று அன்னிபெஸண்ட் அம்மையாருடன் முதல்முதல் கூடினவர் சுப்பிரமணி ஐயரேயாம். சுப்பிரமணி ஐயரே இச் சந்திக்கு முகாந்தரமாக யில்லாமற்போயினும் அன்னிபெஸண்ட் அம்மையார் செய்த இவ்விஷயத்தில் இவர் திருப்தி கொண்டிருந்தார். 1915-ம் வருடத்தில் பம்பாயில் நடந்த காங்கிரஸ் மகா சபைக்கு அக்கிராசனதிபதியாக யிருக்கும்படி ஜனத்தலைவர்கள் வற்புறுத்தினார்கள். இவர் தேக நிலைமையை முன்னிட்டு மறுதலித்தார். 1916-ம் வருடத்திலும் இப்படியே ஆயிற்று. 1915-ம் வருடத்தில் அன்னிபெஸண்ட் அம்மையார் ஸ்தா

பிந்த சுய ஆட்சிச் சங்கத்திற்கு கௌரவ அத்யட்சகராக யிருக்க இவர் ஒத்துக்கொண்டார். இவர் தன் ஜீவியகாலம் வரை சுய ஆட்சிச் சங்கத்தில் கலந்திருப்பதாக முன்வந்தார். சுய ஆட்சிச் சங்கம் கவரன்மெண்டுக்கு விரோதமெனச் சிலர் வீண் மயக்கங்கொண்டிருந்தனர். இவ் வீண் எண்ணங்களி ஞல் தன்னிலை தெரியாமல் தடங்கிக்கொண்டிருந்தவர்களைத் தலையெடுக்கச் செய்தவர் இவரே. பிரபஞ்சத்திலுள்ள பிர ஜாமுகங்களின் மத்தியில் நமக்கென்று கடவுளால் தீர்மானிக் கப்பட்டிருக்கும் ஸ்தாபனத்தை நாம் அடையவேண்டுமென் கிற தாபம் ஜனங்களுக்கு உண்டாய்விட்டது. தவிர, நமக்கே உரியதான பயிற்சி, நாகரீகம், மனோராச்சியம் ஆகிய இவ்வுண வுகளைக் கொண்டு பிரபஞ்ச ஜீவாத்மாக்களுக்கு உரிய உரிமை களை நன்ருய் அடையவேண்டும் என்கிற ஆவலும் ஜனங்க ளுக்கு உண்டாய் விட்டது. சுய ஆட்சிச் சங்கம் நாளுக்கு நாள் வளர் மதியம்போல் பிரகாசிக்கத் தொடங்கிற்று. காட்டுத் தீப்போல் நாடெங்கும் பரவிற்று. அதிகார வர்க்கத்தார் கண்டார்கள். இவ்வளவு எழுச்சிக்கும் 'நியூ இந்தியா' பத் திரிகையே காரணம் எனக் கொண்டார்கள். சுய ஆட்சிச் சங்கம் சட்ட விரோதமெனக் கூற அதிகார வர்க்கத்தார்களுக் குச் சாத்தியப்படவில்லை. ஆனாலும் சுய ஆட்சிக் கிளர்ச்சியை அழிக்கவும் வேண்டும். என்ன செய்வது—பார்த்தார்கள் உடனே தீர்மானித்தார்கள்—என்ன—நியூஇந்தியா பத்திரிகை யின்மேல் நடவடிக்கை நடத்த முயன்ருர்கள். 1916-ம் வரு டத்தில் அதிகார வர்க்கத்தார் நியூ இந்தியா பத்திரிகையின் மேல் அச்சுக்கூடச் சட்டத்தைப் பிரயோகஞ் செய்தார்கள். நாடெங்கும் குழப்பமுண்டாயிற்று. விரோதிகள் மனங் களித்தனர். கிளர்ச்சி அதிகமாயிற்று. நியூ இந்தியா பத்தி ரிகை ஒரு வாரம் நின்றது. 'தன்வினைத் தன்னைச்சுடும்' என்

றபடி சுய ஆட்சிக் கிளர்ச்சியை அழிக்க முன்வந்த அதிகார வர்க்கத்தார் இக் கிளர்ச்சி முன்னிலும் பன்மடங்கு அதிகமான வேகத்துடனும், ஆரவாரத்துடனும் கிளம்புவதைக் கண்டார்கள். சுய ஆட்சிக் கிளர்ச்சியை நியூ இந்தியா பத்திரிகையால் அழிக்கலாமென்னும் எண்ணம் அதிகார வர்க்கத்தாருக்கு நீங்கிற்று. இவர்கள் இடிவிழுந்த நாகம்போலாயினர். ஜனங்கள் இதினால் பயப்படுவார்களென அதிகாரிகள் எண்ணியிருந்தார்கள். ஐயோ! இவர்களுடைய மனோ ராச்சியத்திற்கு எதிராகவல்லவோ முடிந்தது. ஸர். எஸ். சுப்பிரமணி ஐயர் அதிகார வர்க்கத்தாரின் நடவடிக்கையைக் கண்டித்தார். பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை ஜனத் தலைவர்கள் மூலமாகத் தெரியப்படுத்தி 'அந்த அபிப்பிராயப்படி இந்த இராஜாங்கத்தை நடத்தும்படி வற்புறுத்தலாமென்றும் அந்த பொதுஜன அபிப்பிராயத்தை இங்கிலாந்திலும் போய் அங்குள்ள ஆங்கிலேய பொதுஜனங்களுக்குத் தெரிவித்து அவர்கள் மூலமாயும் நமக்கு வேண்டிய இராஜாங்க சீர்திருத்தம் செய்துகொள்ளலாமென்றும் நம்பிக்கையினால் ஸ்தாபிக்கப்பட்ட சுய ஆட்சியை அதிகார வர்க்கத்தார் விரோதமாகக் கொள்வது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும், பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளின் நியாய வாதத்திற்கும் குறைவு ஏற்படுமென்றும் சுப்பிரமணி ஐயர் கூறினார். நாம் இன்னமும் நமது இராஜாங்கச் சட்டங்களை விரோதித்து நடந்தோமில்லை; இனிமேலும், நமக்குத் தோன்றுகிறவரையில், அந்த சட்டங்களுக்கு விரோதமாய் நடக்கவேண்டிய காரணங்கள் உண்டாகுமென்பதையும் நம்பவில்லை. இந்த இராஜாங்கமானது எவ்வளவு தூரம் குடிகளது சுதந்தரங்களில் மதிப்பு வைக்கிறதோ அவ்வளவு தூரந்தான் அந்த இராஜ சட்டங்களிலும் நமக்கு மதிப்பிருக்கும். குடிகளுக்குச் சில சுதந்தரங்களிருக்கின்றன. அவை இராஜாங்கத்

காரால் உண்டாக்கப்பட்டதல்ல. இராஜாங்கம் நிலைத்திருப்பதற்கு அவை காரணமாய் நிற்கும். அந்த சுதந்தரங்கள் யாராலும் சிருஷ்டிக்கப்பட்டதல்ல. அவை சுயமாகவே உண்டானவை. அவை ஜகத்காரணரான பகவானால் கொடுக்கப்பட்டன. நமக்குக் கைகால் முதலிய அவயவங்களையும் புத்தி கூர்மையும் கொடுத்திருப்பதுபோல உலக வாழ்க்கையில் நமக்கென்றே சில சுதந்தரங்களும் கொடுத்தனுப்பி யிருக்கிறார். அந்த சுதந்தரங்களின் குணங்கள் பொன்முடி தரித்த பூபாலரிடத்தினின்று வந்ததல்ல. அரசர்க்கரசராய் ஜகத்காரணராய் விளங்கும் பகவானிடத்தினின்றே வந்தவை. ஆகவே நமது குழப்பம் நியாயத்திற்கு அடங்கியதாகவே யிருக்கும். நமது மனமானது கவர்ன்மெண்டினின்றும், இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டிலிருந்தும், டெல்லியிலும், ஸிம்லாவிலும் அமைந்துள்ள இராஜாங்கத்திலிருந்தும் திரும்பிவிட்டது. நமது மனமானது பசியினாலும், வியாதியினாலும் வருத்தமடைந்து வயிற்றுக்குக் கஞ்சியும்,கட்டக் கந்தையுமின்றிப் பலகாலமாய் வருந்தும் 31½ கோடி யடங்கிய நமது இந்திய நண்பர்களிடம் திரும்பிவிட்டது. நமது மனமானது அப்படித் திரும்பி அடையப்போகும் பலனை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காண்கிறோம். அதை இதுவரையிலில்லாமல் நமக்குண்டாயிருக்கிற தேசாபிமானமும் சகோதர வாஞ்சையுமே நன்றாய் எடுத்துக் காட்டுகிறது. ஜனசங்கையில் அதிகரித்திருப்பினும், கஷ்டத்திலாழ்ந்தியும் சோறு கூறைக்குக் கதியின்றி வருந்தும் நமது சகோதர கோடிகளில் இதுவரையில் கண்டிராத ஒருவிதமான நம்பிக்கையையும், பலத்தையும் காண்கிறோம். இப்பொழுது கிளம்பி யிருக்கும் புதிய கிளர்ச்சிக்குக் காரணம் அந்த நம்பிக்கையே. இந்தப் புதிய கிளர்ச்சிக்கு ஆதாரமாய் நிற்பது அந்த நம்பிக்கையேதான். இந்த

நம்பிக்கையை நன்கறிந்ததும், சுப்பிரமணி ஐயர் இதர விஷயங்களில் சிரத்தைகொண்டு ஜன அபிவிர்த்தியை நாட விரதம் பூண்டனர். இவ்வாறு சுய ஆட்சி ஆதரிசம் மேன்மேலும் உண்டாவதைச் சகியாத அதிகார வர்க்கத்தார் அன்னிபெஸண்டை சிறைப்படுத்த எண்ணங்கொண்டார்கள். நடவடிக்கைகளை நடத்த தீர்மானஞ் செய்வதற்கு முன்னர் 1917-ம் வருடம் மே மாதம் 22-ந் தேதியன்று நடந்த சென்னைச் சட்டசபையில் கவர்னர் லார்ட் பெண்ட்லண்ட் வெகு இழிவாய்ப் பேசினார். இவருடைய பேச்சு இந்தியர்களுக்கு நாராசம் காய்ச்சி நடுச்செவியில் ஊற்றினாற்போ லிருந்தது.லார்ட் பெண்ட்லண்ட் பேசியிருப்பதில் காணப்படும் மனப்போக்கு புதியமாதிரியாகயிருந்தது. இந்தியாவின் பிற்கால வாழ்விலும் ஜன சுதந்தரத்திலும் பொதுஜன ஊழியத்திலும் சிரத்தைவாய்ந்த அனைவரும் அப்பிரசங்கத்தை அடிமுதல் நுனி வரையில் கவனமாய்க் கேட்டிருந்தால் இப்பிரசங்கம் ஜன சுதந்தரத்திற்கும், இந்தியர்களின் இலட்சியத்திற்கும் நேர் எதிரிடையாகக் காண்கிறது. இவர் கூறினதில் தீவிரமான இராஜீயக் கிளர்ச்சிக்கு இது காலமல்ல, விவேகமின்றி இராஜீய கிளர்ச்சி செய்வதினால் பிரமாதமான கஷ்டங்கள் ஏற்படும். அவ்விதம் பிரமாதமான கஷ்டங்கள் ஏற்பட்டால் கிளர்ச்சிக்காரரும் அவர்களுக்கு ஆதரவளிப்போரும், அபிமானங் காட்டுவோருமே உத்தரவாதிகளாவார். யுத்தத்திற்குப் பின் பொறுப்பு வாய்ந்த சுய ஆட்சி கிடைத்துவிடு மென்ற எண்ணத்தை அகற்றிவிடுங்கள். கண்மூடித்தனமான கிளர்ச்சியையும் ஆபத்துக்கிடமான முறைகளையும் அடக்க கவரன்மெண்டார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்பொழுது அதற்கு அனைவரும் ஆதரவளிக்கவேண்டும் என்னும் சாராம்சத்தைக்கொண்டிருக்கிறது. இதைக் கேட்டவர்களின் மனம் கொதிப்படையாம லிருக்க

முடியுமா? கவர்னரவர்கள் சட்டசபையில் இவ் வீண் பேச்சுகளையும் மலம் புன்றாகச் செய்யும் மொழிகளையும் பேசுங் காலத்தில், ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட சட்டசபை மெம்பர்களில் ஒருவராவது கவர்னரவர்கள் முன்னிலையில் அவர் பேசியது பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளுக்கழகல்ல வெனக் கூறவில்லை. இவருடைய பேச்சானது நமது ஜாதீய வாழ்க்கையை அவமானப்படுத்தியதுபோலன்றோ? ஜாதீய மரியாதை இழந்த பிறகு சட்டசபை மெம்பர்கள் கூலி என் கூறுமலிருப்பின் என்? இங்ஙனம் கவர்னரவர்கள் பேசிய வார்த்தைகளைத் தைரியமாய் நிர்தாக்ஷண்யமாய் எதிர்த்து அவ்வவருக்கு விடையளித்த வீரபுருஷன் சுப்பிரமணி ஐயரேயாவர். இழந்த மரியாதையை மீண்டும் காப்பாற்றின பரோபகாரியும் இவரே. சட்டசபை மெம்பர்களும் இதர பொதுஜன ஊழியர்களும் கவர்னரவர்களின் பேச்சினுல் பயங்கொண்டு திக்பிரமை யடைந்திருந்ததை அகற்றித் தைரியமும், ஞானத்தெளிவுங்கொடுத்த பரம புருஷரும் இவரே. இவர் சதா தேச பக்தியையே மனங்கருதி யிருப்பர். தேச பக்தி சாமானிய மானதல்ல. இது எல்லோருக்கும் உண்டாகக் கூடியதுமல்ல. எல்லோராலும் சுலபமாய்க் கையாளப்படும் வஸ்துவுமல்ல. இதைக் கையாளுவதற்குத் திட பக்தியும், மனோவலிமையும் வேண்டும். சிரத்தையினுலும், தியானத்தினுலும், மனனத்தினுலு முண்டாகக்கூடிய தேசபக்தி ஆநந்தத்தைத் தரக்கூடியது. தேசபக்தி யென்பது தங்கு தடையற்ற வீர் விசேஷமான தர்மம். விரிந்து பரந்த அகில மானுட வர்க்கத்தின் பால் வைக்கவேண்டிய அன்பே உருக்கொண்டு பிரசன்னமாயிருக்குந் தர்மம். பிரேமா சக்தியின் மூலம். இவர், இத்தகைய மூலதர்மத்தையறிந்து, ஜன ஆதிக்கத்திற்குஉடல் பொருள், ஆவி மூன்றையும் பாரத மாதாவின் திருவோலக்க

த்தில் அர்ப்பணஞ் செய்தார். ஆத்மதத்துவம் தெரிந்து ஸ்வதந்தர பரதந்தர ஸ்வரூபங்களை அறிந்தவருக்கு துக்கமும், பயமும், விருப்பும், வெறுப்பும், இகழ்ச்சியும், புகழ்ச்சியும் எப்பொழுதும் கிடையா. பாரத மாதாவின் சேவைக்குப் பாத்திரமா யிருப்பவர்களுக்கு வஞ்சகமும், வன்மொழியும், பயமும் எப்பொழுது மிரா. ஏனெனில், இவர்கள் சர்வசங்க பரித்தியாகிகள். பக்திவலையிற் படுவோன் ஒருவனுக்கு எதிர்ப்படும் வஸ்துக்கள் யாவும் பிரம்ம மயமாகவே காண்பதுபோல, தேச சேவையில் ஈடுபட்டிருக்குமொருவருக்கு தன் முன் தோன்றும் ஒவ்வொரு பொருளும் தேசபக்தி ரூபமாகவே காணப்படும். ஒருவன் சிறந்த இராஜதந்திரியாயிருக்கக்கூடும். நாட்டின் அபிவிர்த்திக்குரிய மாறுதல்களை யறிந்து, இந்தந்த காலத்திற்கு இன்னின்ன சீர்திருத்தங்கள் வேண்டுமென்பதை நிர்ணயிக்கக்கூடும். ஆனால், தேச நிர்வாகத்தைக் கருதும் இராஜதந்திரிகள் தேசபக்தி வலையிற் படுவோர்களா யிருப்பது அரிது. தேசபக்தர்கள் சதா கனவிலும், நினைவிலும், உட்காருங்காலத்திலும், நடமாடுஞ் சமயத்திலும் தேச நன்மையைக் கருதியே யிருப்பர். இராஜதந்திரிகள், காலம்வந்தபொழுதோ அல்லது சமயம் நேரிடும்பொழுதோ தான், தேச முன்னேற்றத்திற்காகத் தேசத்தை நினைப்பதும், தேசத்தைப் பரிபாலிக்கத் திர்மானிப்பதுமாக யிருப்பது வழக்கம்.

ஒரு நாட்டிற்கு இராஜதந்திரிகளும் தேசபக்தர்களும் இருத்தல் அவசியம். தேசபக்தர்களா யிருப்பவர்களுக்கு இராஜதந்திரம் இல்லாமற்போயின், அவர்கள் குடிகளை நல்வழிப்படுத்த இயலார். தேசபக்தியில்லாத வெறும் இராஜதந்திரமும் குடிகளை நல்வழிப்படுத்தாது. ஆகவே, சிறந்த தேசாபிமானர்கள் எனப்படுவோர்கள் இராஜ தந்திரிகளாக யிருத்தல் இன்றியமையாதனவாம். பூர்வம் இதாலிதேசம்,

ஆஸ்திரியா தேசத்தவர்களுக்குட்பட்டுச் சுதந்தரமின்றி யிருக்கையில், இதாலிதேசத்தில் சிறந்த தேசாபிமானியும் இராஜதந்திரியுமான ஜோஸெப்மாஜினி தோன்றி இதாலியர்களை நல்வழிப்படுத்தினர். இதாலியில், கரிபால்டியும் கேவோரும் இருந்தும் மாஜினியைப்போன்ற தேசாபிமானமும் இராஜதந்திரமும் இவர்களிடம் ஒருங்கே சேர்ந்ததாகக் காணப்படவில்லை. கரிபால்டி சிறந்த யுத்தவீரர். தேசாபிமானமும் கொண்டவர். கேவோர் சிறந்த இராஜதந்திரி. தேசாபிமானமும் பெற்றவர். ஆனல், மாஜினியின் தேசாபிமானத்திற்கு இவர்களுடைய தேசாபிமானம் மிக்கத்தாழ்ந்ததே. மாஜினியிடம் இராஜதந்திரமும் தேசாபிமானமும் ஒன்றையொன்று பற்றிக்கொண்டு உயிரும் உடம்பும் போலிருந்தது. என்றுலும், இதாலி சுதந்தரம் பெறுவதற்கு மாஜினி, கரிபால்டி, கேவோர் ஆகிய இம்மூவர்களும் காரணர்களாயிருந்தார்கள். அது போல், இந்தியாவும் சுதந்தரம் பெறுவதற்குக் காரணர்களாகப் பலரிருக்கிறார்களெனக் கூறினுலும், உண்மை போந்தவிடத்து, வெகுச் சிலரே யிருக்கின்றனர். இச்சிலரில் மணி ஐயர் ஒருவர். இந்திய இராஜ்யசரித்திரம் புதிதாக இனிவரும் சரித்திரக்காரர்களால் எழுதப்படுங்காலத்தில், சுப்பிரமணி ஐயர் தேசநிர்மாண நாயகர்களில் தலைமை ஸ்தானத்தை வகிப்பாரென்பதற்கு ஐயமேயில்லை. திருவாங்கூர் சமஸ்தானத்தை முதல்முதல் ஸ்தாபித்த இராமன் தளவாய்போலவும், மகாராஷ்டிரத்தை நிலைநிறுத்தின லக்கோஜீ யாதவராவ்போலவும், இவர் தேசநிர்மாண விஷயத்தைப் புனர் உத்தாரணஞ்செய்தார். சென்னைமாகாண அதிகாரவர்க்கத்தார் அடுத்தடுத்துச் செய்த அதிக்கிரமச் செயல்களினுல், தேனில் வீழ்ப்போல், வலைபடு கயல்போல், சிறுவர் கைப்பறவை சிக்குதல்போல், கோனிலாப்படைபோல், கொம்பிலாப்படர் கொடியதுபோல்,

கானகத்திருளில் முடவன் ஊர்வதுபோல் கலங்கியே மெலிந்த ஜனங்களுக்குச் சமயசஞ்சீவியாய் நின்றவர் இவர் ஒருவரே. காலைப் பருவங்கொண்டவர்கள் பலர், இனிவரும் ஜாதீய வாழ்க்கையில் தக்கபொறுப்பு வகிப்பதற்குரிய சாதனத்தை சுப்பிரமணி ஐயர் முதல்முதல் ஏற்படுத்தினார். இவர் பய மென்னுங் காடுவெட்டி அவிவேகமென்னும் கரம்புகளைந்து தேச ஊழியமென்னும் பயிரை வளர்க்கலானார். சுய ஆட்சிச் சங்கத்தின் செயல்களை யடக்கவேண்டுமென்று கவரன்மெண் டார் புதியபுதிய முறைகளை யனுஷ்டிக்கும் பொழுதெல்லாம், சுப்பிரமணி ஐயர் முன்னின்று எதிர்க்கலானார். கடந்த இர ண்டு வருடங்களாக இராஜாங்க விவகாரம் ஒரு சதுரங்க ஆட் டம்போலிருந்தது. அதிகார வர்க்கத்தார் எதிர்க்கட்சியில் ஒரு பேதாவை (காலாள்)த்தள்ளிக் குதிரைக்கு இடமுண் டாக்குவதற்கு முன்னர், சுப்பிரமணி ஐயர் தம் சகட்டைத் (ஒட்டகம்) தள்ளி அந்த இடத்திற்குக் குதிரையை வர வொட் டாதபடி செய்துவிடுகிறார். அதிகாரவர்க்கத்தார் ஒவ்வொரு காயைத் தள்ளத்தள்ள சுப்பிரமணி ஐயர் அதைத் தடுத்துக் கொண்டே வந்தார். சுப்பிரமணி ஐயருக்கு மனவலிமையும் பிடிவாதமும் உண்டென்பது அதிகார வர்க்கத்தார்களுக்குத் தெரியாதாகையால் இது ஒரு ஆவி எனவும், சுலபமாய் நீங்கி விடும் என்றும் எண்ணினார்கள். இவருடைய தீரச்செயல் களினால் கல்லூரிமாணவர்கள் ஆதாரமாக நிற்கிறார்களென் பதை உணர்ந்த இராஜாங்கத்தார் 559-ம் சட்டத்தைப் பிர யோகப்படுத்தினார்கள். வாலிபர்கள் இனி இராஜாங்க சம் பந்தமாகச் செய்யும் ருஜுப்பாடுகளிலும் தீர்மானங்களிலும் தலையிடும்பட்சத்தில் தண்டிக்கப்படுவார்களென்று பறையடிக் கப்பட்டது. வயது முதிர்ந்தவர்கள் இத்தகைய வற்புறுத் திச்செய்யும் வழிகளை அனுசரிக்க அநுகூலர்களாயிருக்கிறார்க

ளென்பதையும் கவர்ன்மெண்டார் உணர்ந்தார்கள். சென்னையில் உண்டாகும் கிளர்ச்சிக்கு சுப்பிரமணிய ஐயரே காரணமெனக் கொண்டார்கள். சிறந்த இராஜ பக்திகொண்ட இவர் இப்பொழுது இராஜதுரோகி யெனப்படுவானேன்? இராஜ விஸ்வாஸம் பெருகியிருந்த இவருக்கு இராஜபக்தி குறைவானேன்? காரணமின்றிக் காரியமில்லையென்பது யாவரும் அறிந்தவிஷயம். 1907 ம் வருடத்தில் சிறந்த 'இராஜபக்தி கொண்டவர் எனக்கொண்டாடின மெயில் முதலிய பத்திரிகைகள் 1917-ம் வருடத்தில் பரந்த இராஜ நிந்தனைகொண்டவர் எனக்கூறுவானேன்? இராஜபக்தியும் இராஜநிந்தனையும் எதிரிடைச் சொற்கள். ஆனால், இவ்வார்த்தைகள் ஒன்றுக்கொன்று விரோதமானவை. ஜனங்களுக்கு நன்மையைநாடி உழைத்து, ஜனங்களால் மிக்க மதிக்கப்பட்டு வருபவர்களை அதிகாரவர்க்கத்தார் இராஜ துரோகிகளென்றும் ஜனங்களின் நன்மையை நாடாமலும் அவர்களுடைய குறைகளைக் கேட்காமலும், அதிகார வர்க்கத்தார்களையே நச்சியிருப்பவர்களை அதிகாரவர்க்கத்தார் சிறந்த இராஜபக்தி கொண்டவர்களென்றும் அழைப்பது சகஜமாயிருக்கின்றது. ஜனங்களுக்கு ஊழியஞ் செய்பவர்களெல்லாம் இராஜநிந்தனைக் குரியவர்கள் என ஆங்கிலோ இந்தியர்கள் கூறுவது எள்ளளவும் பொருந்தாது. சர்க்கார் உத்தியோகஸ்தர்களையே சதா கொண்டாடிக்கொண்டு, அன்னவர்களையே அடைக்கலமாகக்கொண்டு ஒழுகுபவர்களைச் சிறந்த இராஜபக்தர்கள் எனக்கூறுவதும் பொருந்தாது. தேசபக்தியோடு தோன்றினவர்கள் தேசத்திற்கு உழைத்துவருவதை யுணர்ந்த கவர்ன்மெண்டார், அவர்கள் இராஜாங்கத்திலும் நன்கு உழைக்கக் கூடுமென்றும் நோக்கத்தைக்கொண்டே, சர்க்கார் உத்தியோகங்களைக் கொடுக்கலானார். சர்க்கார் உத்தியோகங்களைச் சரிவர அனுஷ்டித்து,தன் மேல் உத்

தியோகஸ்தர்கள் மனங் கோணுமற் செய்த சுப்பிரமணி ஐயரை இவ்வாங்கிலேயர்கள் தற்பொழுது இராஜ துரோகி என்று வசையிட்டுக் கூறுகின்றனர். மெயில் பத்திரிகை விடாது சுப்பிரமணி ஐயரைப் பற்பல மாதிரி கூறி பயமுறுத்துகிறது. இதின் இரஹஸ்யம் என்ன? இவர் அதிகாரவர்க்கத்தார்களின் குற்றங்களை இடித்துப் பயமின்றி கூறுவதே காரணமாகும். அக்காலங்களில் பிரிட்டிஷ் ஜனங்களிடத்தில் நம்பகமிருந்தது. நமக்கு மோட்சம் ஆங்கிலேயர்களிடமிருந்து தான் வரவேண்டுமென்கிற அபிப்பிராயம் பூர்ணமாகக் குடிகொண்டிருந்தது. அக்காலங்களில் ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்ததும் உண்மையாகவே நல்வழிப்படுத்தவந்த தெய்வீகத் தூதாகவே சிலர் நம்பியிருந்தார். கல்வியிற்சிறந்த நமது தேசத்தார்களில் அநேகர் உண்மையென்று நம்பினதையே இவரும் நம்பியிருந்தார். 1886-ம் வருடம் முதல் ஆங்கிலேயர்கள் நமது ஜாதிய உரிமைக்கோர் வழிகாட்ட மனச்சாக்ஷியோடும் எச்சரிக்கையோடும் வேலை செய்வார்களென்று பலர் நம்பியிருந்ததுபோலவே, சுப்பிரமணி ஐயரும் நம்பியிருந்தார். பிரபஞ்ச ஜனங்களின் மத்தியில் நமக்குத் தகுந்த பதவியில் நம்மைக் காலக்கிரமேண வைப்பார்களென்றும் இவர் நம்பியிருந்தார். ரிப்பன் பிரபுவினால் ஏற்படுத்தப்பட்ட ஆலோசனை சபையை விர்த்திசெய்து சீர்திருத்தங்கள் உண்டாக்குவார்களென்றும், பிரஜா ஸ்வதந்திரத்திற்குரிய அதிகாரத்தைப் படிப்படியாய் இந்தியர்களுக்குக் கொடுப்பதோடு ஜாதியர்களுக்குரிய குடிப்படையை ஏற்பாடு செய்து கொள்ள நமக்கு உரிமையை அளிப்பார்களென்றும் இவர் மனப்பூர்வமாய் நம்பியிருந்தார். பிரபஞ்சத்திலுள்ள சுயேச்சையோடுகூடிய தேயங்களின் மத்தியில் நாமும் சுயேச்சையுள்ளவர்களாக ஆவதற்குவேண்டிய சாதகங்களையும் சாதனங்களை

யும் நமக்குத் தந்து நம்மை நாளடைவிலே பழக்குவார்களென்றும் ஆங்கிலேயர்களிடத்தில் இவர் பெருத்த நம்பிக்கை வைத்திருந்தார். 1858-ம் வருடத்தில் விக்டோரியா மகாராணியாரால் பட்டயமொன்று அளித்த காலந்தொட்டு, மாண்டேகு-செம்ஸ் போர்ட் பிரேரணைகாலம் வரை நாட்டின் தேசிய விஷயங்களைக் கவனித்து வந்ததினால், பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தாரிடம் இவருக் குண்டான நம்பிக்கை யனைத்தும் அற்றுப்போய் விட்டது. ரிப்பன் காலத்திய சீர் திருத்தம்—மிண்டோ மார்லி காலத்திய சீர்திருத்தம்—பிரிட்டிஷ் இராஜ தந்திரிகள் அப்போதைக்கப்போது வெளியிட்ட பிரேரணைகள்—இந்திய வைஸிராய் கவர்னர் முதலானோர் ஆங்காங்கு கூறின உறுதிமொழிகள் ஆகிய எல்லாம் வெளிமயக்கென்றும், அழுங் குழந்தைக்கு அம்புலி காட்டுவது போலுமாயிற்றென்றுங் கண்ட இவர், ஆங்கிலேய அரசாங்கத்தார்களிடம் வைத்திருந்த நம்பிக்கையைவிட்டுவிட்டுப் பசியினாலும், கொடிய தாபத்தினாலும், வறுமையினாலும் வருந்தி வாழும் குடிகளிடத்தே நம்பிக்கையை வைக்கலானார். இதுவே இவர் செய்த குற்றம். பிறிதொன்றுமில்லை. அதிகாரவர்க்கத்தார் தங்கள் குற்றங்களைக் காண்பதில்லை. பிரிட்டிஷ் அரசாட்சி மென்மேலும் விர்த்தியாகி, இந்தியாவும் இங்கிலாந்தும் சமபாவத்தை யடைந்து, இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற் குட்பட்ட சுய ஆட்சியைக் கொள்ள வேண்டுமென்றும் பரந்த புத்தியினால், இராஜ பக்தி எள்ளளவுங் குறையாமல் இவர் பாடுபட்டு வருகின்றார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குச் சிறிதும் சம்பந்த மற்ற ஸ்வராஜ்யத்தை இந்தியா யடைய வேண்டுமென்னுங் கொள்கையைக் கொண்ட சிலர், தங்கள் உபாக்கியானத்தைப் பகிரங்கப்படுத்தி இராஜ துரோகத்தை பரவச் செய்வார்களென்னும் எண்ணத்தைக் கொண்டே

இவர், 'வெள்ளம் வருமுன் அணையிடுதல்' நலமெனக் கொண்டு சுய ஆட்சிச் சங்கத்தை ஸ்தாபித்து சுதந்தர உணர்ச்சியை நியாய வரம்பு கடக்காமல் பெறுவதற்குரிய கிளர்ச்சிகளைச் செய்து வரலானார். பிரிட்டிஷ் இராஜாங்கத்தில் இவருக்குள்ள நம்பிக்கையினாலும், மன்னர் பெருமானிடத்து இவருக்குள்ள விஸ்வாசத்தினாலும், ஜனங்கள் அதிருப்தியைக் கொள்ளக்கூடாதென்ற எண்ணத்தைக் கொண்டே, இவர் அதிகார வர்க்கத்தார்களின் நியாய வரம்பு கடக்கும் செயல்களைக் கண்டிக்கலானார். இந்தியாவிற்குப் பெரிதும் உழைத்து வந்த அன்னி பெஸண்டையும் அவருடைய சகாக்களையும் சிறைப்படுத்தின அதிகார வர்க்கத்தார்களின் அதிக்கிரமச் செயல்களைக் கண்டு, மனந் தாளாமல், இனி ஆங்கிலேய இராஜ தந்திரிகளையுங் கேட்பது வீணெனக் கொண்டு, பிரபஞ்ச தேயங்களின் ஸ்வதந்தரத்தை நிலை நிறுத்த தர்ம யுத்தஞ் செய்யும் பிரிட்டிஷாருக்குத் துணையாகவும், சிறிய சிறிய இராஜ்யங்களின் மனக் குறைகளையும், குடிகளின் துயரங்களையும் நீக்குவதே தர்ம மெனக் கொண்டு முன் வந்த அமெரிக்கா தேசத்து அத்யட்சகரான டாக்டர் உல்ஸனுக்கு, இந்தியர்களின் குறைகளையும், அதிகாரவர்க்கத்தார்களின் குற்றங்களையும் எடுத்து, விண்ணப்ப மொன்று அனுப்பினார். சென்னையிலிருந்து அமெரிக்காவிற்குப் பிரயாண மாயிருந்த மிஸ்டர் ஹாட்ச்னர் அவருடைய மனைவியாரிருவர் மூலமாக சுப்பிரமணி ஐயர் இவ் விண்ணப்பத்தை டாக்டர் உல்ஸனுக்கு அனுப்பினார். இவ் விண்ணப்பம் அனுப்பினது நியாய விரோதமெனக் கூறினர் பலர். ஆங்கிலேய பத்திரிகைகள் தாறுமாறாய் இழிவு கூறின. வைஸிராயும், மாண்டேகுவும் இவ் விண்ணப்பத்தின் வரலாற்றைக் கேட்டு மனங்கசிந்தனர். ஆனாலும், இவர் தான் அனுப்பினது பிசகாகமாட்டாதென நிச்சய புத்தி

யுடன் கூறினர். இந்தியாவைப் போலவே சகல வழிகளிலும் ஒத்திருக்கும் அயர்லாந்து தேசத்திற்கு சுய ஆட்சி அவசியம் கொடுக்க வேண்டு மென்று கூறின டாக்டர் உல்லனுக்கு இந்தியா தேசம் கண்ணுக்குப் புலப்படாமற் போனது அதிசயமே.

ஜர்மெனி, சிற்றரசு இராஜ்யங்களின் சுதந்தரங்களைக்கெடுத்து அதர்ம யுத்தஞ் செய்தலைக் கண்டிக்க, யுத்தம் புரியும் நேசக்கட்சியார்கள் தங்கள் கீழிருக்கும் குடிகளின் சுதந்தரத்தை முதல் முதல் ஸ்தாபிக்க வேண்டு மென்பதை அறியார்கள் போலும். இந்தியாவுக்கு ஒரு நியாயமும் பிறநாடுகளுக்கு ஒரு நியாயமுமா? நியாயமென்பதும் சுதந்தரமென்பதும் யாவர்க்கும் பொது வல்லவா? இந்தியாவிலுள்ள அதிகார வர்க்கத்தார்கள் செய்யும் செயல்களை இங்கிலாந்திலுள்ள பிரமுகர்கள் கேட்டுக் குடிகளுக்குப் பரிகாரஞ் செய்வதா யிருந்தால், சுப்பிரமணி ஐயர் டாக்டர் உல்ஸனுக்கு ஒருநாளும் கடித மெழுதந்துவரியார். இக்கடித மெழுதினதைப்பற்றி இங்கிலாந்திலுள்ள காமன்ஸ் சபையில் மான்டேகு மானக் கேடான செய்கை யென்று கூறினதும் ஜே. டீ. ரீஸ் தன்நாவில் நரம்பின்றி வசைமொழி கூறினதும், பார்க்குமிடத்து கேவலம் விளையாட்டுத்தனமா யிருக்கிறதே யொழிய, பரந்த ஞானமும் தீர்க்காலோசனையுங்கொண்ட, இராஜ தந்திரிகளுக்குரிய இலட்சணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

'இளவரின் வாழாத மான முடையா
ரொளி தொழு தேத்து முலகு'

என்றபடி, சாமானிய அறிவைக் கொண்டவர்கள் இழிவுபடக் கூறின வார்த்தைகளைக்கேட்ட சுப்பிரமணி ஐயர் மனஞ் சகியாதவராய், தனக்கு அரசராலளிக்கப்பட்டிருந்த பட்டங்களைத்

திருப்பிக் கொடுத்து விட்டார். கவரன்மெண்டாரிடமிருந்து சாமானிய பட்டமொன்றைப்பெற சிற்சில ஜனங்கள் படும் ஆத்திரத்தை நம் நேயர்கள் அறிந்திருப்பார்கள். இந்தியர்களுக்குக் கொடுக்கும்படியான உயர்ந்த பட்டங்களையெல்லாம் பெற்ற இவர், அவை ஜடமென்றும், அநித்திய மென்றும், ஜனசமூகத்திற்கு உழைப்பவ னொருவனுக்கு ஏற்றதல்லவென்றுங் கருதி பட்டங்களை வேண்டாமென்று அனுப்பி விட்டார். பிரபஞ்ச வஸ்துக்கள் யாவையும் துச்சமெனக்கருதித் துறந்தாரொருவருக்குப் பிரபஞ்ச வஸ்துக்களால் எவ்வளவுமட்டும் பிரயோசனத்தை யடையக்கூடுமோ அவ்வளவு பிரயோசனத்தை நம் மணி ஐயரவர்கள் இச்சர்க்கார் பட்டங்களினால் அடையக் கூடும். ஜனங்களால் மதிக்கப்பெற்ற ஒருவருக்கு இப்பட்டங்கள் ஒருநாளும் சாதகத்தைக் கொடுக்காதென்பதாம். ஆனால், 1916-ம் வருடத்தில், வடநாட்டில் நடந்த பாரத தர்ம மகா மண்டலத்தின் வருஷோற்சவத்தில் நம் சுப்பிரமணி ஐயருக்கு 'பாரத பூஷண' ரென்னும் பட்டம் அளிக்கப்பட்டது. இதுவே இனி அழியாப் பட்டமாகும். பாரத மாதாவிற்கு அல்லும் பகலும் இடை விடாது. ஊழியஞ் செய்ய உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்து, சகல சுக போக போக்கியங்களையும் விட்டு, பாரத பக்தனாய், பரம தியாகியாய் எழுந்தருளி யிருக்கும் இச்சுப்பிரமணிய முனீந்திரர் இம்மாநிலத்தில் நீடூழிவாழும் பாக்கியத்தைப் பகவான் அளிப்பாராக!

ஸர். சுப்பிரமணி ஐயரின் கடிதம்.

பட்டம் வேண்டாம்: தன் மதிப்பே விசேஷம்.

பீச் ஹவுஸ் மைலாப்பூர், மதராஸ்.
ஜுன் 20, 1918.

சென்னை கவர்ன்மெண்டின்
சீப் ஸெக்ரிடெரியான
கனம் மிஸ்டர் லயனல் டேவிட்ஸனுக்கு.

ஐயா!

கே. ஸி. ஐ. இ. என்ற பட்டம் அளிக்கப்பட்டபொழுது எனக்குக் கிடைத்த விருதையும் திவான்பகதூர் பதக்கத்தையும் இன்றையதினம் இன்ஷ்யூர் செய்து தபால் மூலம் அனுப்பியிருக்கிறேன். அவைகளைத் தாங்கள் பெற்றுக்கொண்டு, அவ்வாறே பெற்றுக்கொண்டதாக எனக்குத் தகவல் கொடுப்பீர்களாக.

தற்சமய சந்தர்ப்பத்தின்படி, கே. ஸி. ஐ. இ. பட்டத்தையாவது, திவான் பகதூர் பட்டத்தையாவது வகித்திருக்க என்னால் ஆகவில்லையாதலினால், அவைகளைத் திருப்பி யனுப்பியிருக்கிறேன்.

இங்ஙனம் ஐயா,
தங்கள் தாழ்ந்த ஊழியன்,
(ஒப்பம்) எஸ். சுப்பிரமணி ஐயர்.

எனக்கு ஸர் பட்ட மிருக்கிறது பற்றி, மிஸ்டர் ஜாய்ஸன் ஹிக்ஸ் காமன்ஸ் சபையில் கேட்ட கேள்விக்கு மிஸ்டர் மான்டேகு 3-ம் தேதி அவ்விதம் பேசியிருக்கிறாரென்று நான் நினைப்பதால் இந்தப் பட்டங்களை நான் விட்டுவிடுகிறேன், இவ்வளவு அவதூறாக ஒரு பொறுப்பான மந்திரி காமன்ஸ் சபையில் தம்முடைய ஸ்தானத்திலிருந்து பேசியதற்குப் பிறகு, என்னுடைய சுயகௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள அந்தப் பட்டங்களை வைத்துக்கொள்வது எனக்கு சாத்தியமில்லை. ஆகவே, எனக்குள்ள ஸர் பட்டத்தையும், திவான் பகதூர் பட்டத்தையும் விட்டுவிடுகிறேன். இனி ஸர் என்றாவது, திவான்பகதூர் என்றாவது என்னுடைய பெயரின் முன் சேர்த்து எனக்கு அனுப்பும் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுகிற தில்லையென்று நான் தீர்மானம் செய்துவிட்டபடியால், இந்த விஷயத்தை இதன் மூலமாய் எனக்கு எழுதக் கூடியவர்களுக்கு அறிவிக்கிறேன்.

எஸ். சுப்பிரமணி ஐயர்.

டாக்டர் வுல்ஸனுக்கு எழுதிய கடிதத்தின் ஸாராம்ஸம்.

சென்னை, இந்தியா. 24-6-1917.

ஹிஸ். எக்ஸலன்ஸி பிரஸிடெண்ட்
வுல்ஸன் அவர்களுக்கு

கௌரவமுள்ள ஐயா,

சர்வ இந்திய முஸ்லீம் மகாசபையும் பாரத ஜாதீய சங்கமென்னும் நாஷனல் காங்கிரஸ் சபையு மாகிய இவ்விரண்டு பெரியசபைகள் மூலமாக ஐக்கிய இந்தியாவின் இலட்சியத்தை ஒரேமனதுடன் தெரியப்படுத்தும் ஹோம் ரூல் லீக் என்னும் சுயராஜ்யசங்கத்திற்குக் கௌரவ அத்யட்சகர் முறையில் நான் உங்களுக்கு இக்கடிதத்தை எழுதலானேன். முப்பது கோடி ஜனங்களுக்கு மேற்பட்ட ஜாதியார்களின் இராஜ்ய இலட்சியங்களை இன்று உள்ளபடி தெரிவிப்பதும் இம்மேற்கூறிய இவ்விரண்டு ஸ்தாபனங்களே யாம். ஏனெனில், இவ்விரண்டு சங்கங்களும் ஜனங்களால் ஸ்தாபிக்கப்பட்டவைகள்.

இவ்விரண்டு சங்கங்களின் பிரதிநிதிகள் சுமார் ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சென்ற டிசம்பர் மாதம் லக்நௌவில் நடைபெற்ற வருடாந்தரக் கூட்டத்தில் ஒரு மனத்தினராய் ஏகோபித்துச் சில தீர்மானங்களைப் பிரேரேபணை செய்த

துடன், இந்தியா ஸ்வதந்தரியமற்றுக் கீழ்ப்பட்டிருக்கும் நிலைமையிலிருந்து குடியேற்ற நாடுகளைப்போல் ஏகாதிபத்தியத்தின் சமபாக நிலைமையில் இருக்கவேண்டு மென்றும், ஜனாதிக்கியத்திற்கு அனுகுணமான சீர் திருத்தங்களைக் கொடுத்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற் குட்பட்ட சுய ஆட்சியை இந்தியாவிற்குச் சீக்கிரத்தில் அளிப்பதே பிரிட்டிஷ் ஆட்சியின் இலட்சியமென்று பகிரங்கமாக ஓர் அறிக்கையை வெளி யிடும்படி மாட்சிமை தங்கிய சக்கரவர்த்திக்குத் தீர்மான மொன்றையும் அனுப்பி யிருக்கிறார்கள். கௌரவமுள்ள ஐயாவே, இத் தீர்மானங்கள் யாவும் இந்தியாவின் இலட்சியங்களைத் தெரிவித்ததோடு, அவைகள் இந்தியாவின் இராஜபக்தியையும் வெளியிட்டன. ஆனால் பல மாதங்களாயும் பிரிட்டன் தேசம் எங்கள் நாட்டின் உரிமைகளைக்கொடுக்க யாதொரு அறிக்கையும் உத்தியோக வாயிலாக வெளியிட வில்லை. ஒருவேளை, கவரன்மெண்டார் யுத்தப்பொறுப்பில் அதிக கவனஞ் செலுத்தி வருவதா யிருக்கக்கூடும். இந்திய ஜாதீய இயக்கத்தினால் இம்மகாயுத்தத்திற் குண்டாகும் சம்பந்தமே இந்தியாவிற்கு சுய ஆட்சி உடனே கொடுக்கவேண்டு மென்னும் ஆவசியத்தை வற்புறுத்துகிறது. சுய ஆட்சி கொடுப்பதாக வாக்குத்தத்தஞ் செய்தால் இந்தியா முதல் மூன்று மாதங்களுக்குள் ஐம்பது இலட்சம் வீரர்களுக்குக் குறையாமல் போர் முனைக்கு அனுப்புவதுடன் அடுத்த மூன்று மாதங்களுக்குள் மற்றொரு ஐம்பது இலட்சம் வீரர்களையும் அனுப்ப மாட்டும். இவ்வுதவியை இந்தியா செய்ய முடியும். ஏனெனில், இந்தியா 31½ கோடி ஜனத்தொகையைக் கொண்டது—அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலுள்ள ஜனத்தொகையை விட மூன்று மடங்கு அதிகமானது—எல்லா நேசக்கட்சியாரின் ஜனத்தொகைக்குச் சற்றேறக்குறைய சமமானது. ஆகவே, இந்திய ஜனங்கள் இவ்

வுதவியைச் செய்வார்கள். ஏனெனில், அவர்கள் அடிமை நீங்கிப் பிறகு சுதந்தர முள்ளவர்களா யிருப்பார்களென்பதே.

'ஜனங்களின் சுதந்தரங்களையும், சிறிய பெரிய ஜன சமூகங்களின் உரிமைகளையும், ஜனங்கள் நித்திய வாழ்க்கையில் எவ்விடத்தும் தமதம வழிகளை நாடிக் கிரமப்படுத்தும் பொறுப்புகளையும், ஜனாதிபத்தியத்திற்காக இப்பிரபஞ்சத்தைப் பத்திரப்படுத்தி, இராஜீய சுதந்தரத்தின் அஸ்திவாரத்தின் மேல் ஜனநாயகத்திற் குரிய சாந்தியை (அமரிக்கை) நாட்டவேண்டு மென்றும் நியாயத்தால் நீங்கள் போர்போன யுத்த அறிக்கையில் வெளி யிட்டுள்ள இவ்விலட்சியங்களை யடைய எங்கள் ஆசையைப் பகிரங்கமாகத் தெரிவிக்க வொட்டாமல் அன்னிய அரசாங்கத்தாரால் தடுக்கப்பட்டுத் தற்காலம் தளைபட்டுக் கீழ்ப்படிந்த ஜாதிகளாக நாங்கள் இருக்கின்றோம். இந்நிலைமையிலும் இந்தியா தனது இராஜ விஸ்வாசத்தை நேசக்கட்சியாருக்குப் பன்முறை அறிவித்திருக்கின்றது. பிரான்சு, காலிபோலி, மெஸபோடேமியா முதலிய இன்னும் பல விடங்களுக்கு இந்தியா பணத்தையும், ஆள் படையையும் மன ஆயாச மின்றித் தாராளமாய்க் கொடுத்தது. "இந்தியத் துருப்புகள் பிரான்ஸில் இன்றைக்கும் இருக்கின்றன. அவர்களுடைய வீரத்தன்மையும், கஷ்டங்களைச் சகித்துக்கொள்ளுந் தன்மையும், பொறுமையும், விடாமுயற்சியுமாகிய இக்குணங்கள் அவைகள்என்றும் பார்த்திராத புதியவிடங்களிலும் வந்து காண்பித்திருக்கின்றன" என்று இந்தியா மந்திரி மிஸ்டர் ஆஸ்டின் சேம்பர்லேன் கூறினர். "இந்தியத்துருப்புகளுடைய பராக்கிரம ஆவேசங்கள் என் மனதில் பதிந்து கிடக்கின்றன" என்று சேனாதிபதி லார்ட் பிரன்சு கூறினர். "இந்த யுத்தத்தில் ஜனரல் மாட் தளகர்த்தரால் நடத்தப்பட்டு ஜயித்த துருப்புகள் அநேகமாக இந்தியத் துருப்புகளாக யிருக்கின்றன.

துருக்கியர்களுடைய சைந்நிய அணிகளைச் சின்னாபின்னப்படு த்தி, பாக்டாட் வரை, அவைகளை உள்ளூற முறி யடித்தது இந்திய குதிரைப்படைகளே யாகும். இந்திய காலாட் படைகள் தன்னந்தனியே பல மாதகால மிருந்து துருக்கியர்களைப் பிடித்து வசப்படுத்தின. ஏற்கனவே, இந்தியத் துருப்புகள், பிரான்சிலும், காலிபோலியிலும், மெஸபோடேமியாவிலும் வெகு வீரத்துடன் சண்டை யிட்டன." என்று பாக்டாட் நகரத்தைப் பிரிட்டிஷார் பிடித்த போது லண்டன் டைம்ஸ் பத்திரிகை கூறிற்று. இந்தியர்கள் பராதீனர்களா யிருந்தும் நேசக்கட்சியார்களுக்காக இவ்வளவு வீரத்துடன் சண்டை செய்திருக்கும் பொழுது, சுதந்தர முடையவர்களாக அவர்களைச் செய்தால் இன்னும் எவ்வளவு வீரத்தன்மையுடன் சண்டை செய்வார்கள்.

* * * * *

உலகத்து ஜனங்களைச் சுதந்தர முடையவர்களாகச்செய்வது உங்களுடைய யுத்த லட்சியங்களாதலால் அவைகளுக்கு ஒத்தவாறு இங்கிலாந்தையும் திருப்பு வீர்களென்று எங்களுடைய நம்பிக்கை. அப்படிச் செய்வதனால் கோடிக்கணக்கான ஜனங்கள் இந்த யுத்தத்தில் நேசக்கட்சியாருக்கு உதவி செய்ய முடியும்.

* * * * *

அயர்லாந்து வாசியாகிய மிஸஸ். அன்னிபெஸன்ட் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். இதுவும் அவர்களுடைய ஆட்சி இத்தகையது என்பதற்கு ஓர் உதாரண மாகும். இந்த அம்மையார் இந்தியாவுக்குச்செய்த நன்மைகள் அநேக மிருக்கின்றன. பின்வரும் கடிதத்தில் சட்ட சபை அங்கத்தவர்களும், பத்திராதிபர்களும், கல்விமான்களும், வக்கீல்களும் கையெழுத்திட்

டிருக்கின்றார்கள். இதனால் மிஸஸ் பெஸன்ட் நியாய வரம்புக்கு உட்பட்டு அரசியல் வேலை செய்ததால் அவர் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டாரென்பது தெரிய வரும். இன்ன குற்றம் செய்தாரென்று குறிக்கப்படவில்லை; நியாய விசாரணை கிடையாது. அரசர் பெருமானும் இங்கிலீஷ் பார்லிமெண்டாரும் இவ்விஷயங்களைப்பற்றி அறியார்களென்று நம்புகின்றேன். அவர்கள் அறிந்தால் மிஸஸ். பெசன்டை விடுதலை செய்ய உத்தரவு செய்வார்களென்று நம்புகின்றேன்.

மிஸ்டர். ஹாட்சனர் அவர் மனைவி இவர்கள் கையில் இந்த விஷயத்தைப்பற்றி அநேக தஸ்தாவேஜுகளைக்கொண்டிருக்கிறார்கள். இவர் இவைகளை உங்கள் கையில் கொடுப்பார்கள். மெயில்மூலமாக இக்கடிதங்கள் உங்களுக்கு வந்து சேராததால் இவர்கள் மூலமாய் இக்கடிதங்களை அனுப்புகிறேன்.

* * * * *

கனம் பொருந்திய ஐயாவே! உடைந்துபோன மனதையுடைய இந்தியா உங்களண்டை வந்து கதறுகின்றது. உலக அமைப்பில் நீங்கள் ஒரு தெய்வாம்சமென அது நினைத்துக் கொண்டிருக்கிறது.

கனம் பொருந்திய தங்கள்
மிக்க தாழ்ந்த ஊழியன்.
(ஒப்பம்) எஸ். சுப்பிர மணியம்.

[இந்திய இராஜ்யாதிபத்தியத்தின் கௌரவ தளகர்த்தர், டாக்டர் பட்டம் பெற்ற சட்ட நிபுணர், ஸ்வராஜ்ய சங்கத்தின் கௌரவ அத்யட்சகர். 1885-ம் வருடத்தில் இந்திய ஜாதீய காங்கிரஸ் மகா சபையை ஸ்தாபித்தவர்களில் ஒருவர், மாஜி ஜட்ஜி, சென்னை உயிர்தர நியாயஸ்தலத்தில் அடிக்கடி பிரதம நீதிபதியா யிருந்தவர்.]

எனது தேசத்தவர்களுக்கு ஒரு விண்ணப்பம்.

(சென்னை ஐக்கோர்ட்டில் உயர்தர நியாயாதிபதியாக வேலை பார்த்து, உத்தியோகத்திலிருந்து உபகாரச் சம்பளம் பெற்று நீங்கின டாக்டர். ஸர். எஸ். சுப்பிரமணி ஐயர், (கே. ஸி. ஐ. எல். எல். டீ). பின் வருமாறு எழுதுகிறார்):—

சென்னை மாகாண சட்டசபையில் கவர்னரவர்கள் செய்த பிரசங்கத்தை நாம் அனைவரும் படித்திருக்கிறோம். சுய ஆட்சியை உத்தேசித்துச் செய்யப்படும் பிரசார வேலையைத்தடுக்க அடக்கு முறைகள் அநுஷ்டிக்கப்படுமென்று அந்தப் பிரசங்கத்தில் அவர் குறிப்பிட்டிருப்பதுடன் பரம்பரையாலோ அல்லது வேறு காரணத்தாலோ செல்வாக்குள்ள எல்லோரும் அந்த அடக்கு முறைகளை ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். அவ்வாறு அவர் கேட்டிருப்பதற்கு நான் பதில் சொல்லுகிறேன். நான் என்னுடைய பொறுப்பை யறிந்த ஒரு பொது மனிதன்: இராஜாங்க சேவையில் பெரிய நியாயாதிபதி ஸ்தானத்தை வகித்திருக்கிறேன். என்னுடைய யோக்கியதையை யறிந்து கிரீடாதிபதியாலும், சென்னை சர்வ கலா சங்கத்தார்களாலும் கௌரவம் செய்யப்பட்டிருக்கிறேன். வயதானவன் ஒரு விஷயத்தைப்பற்றி ஒரு முடிவுக்கு வருமுன் ஜாக்கிரதையாக யோசனை செய்யும்படி பழக்கப்பட்டவன். ஆகையால் இதில் என்னுடைய நிலைமை இன்னதென்பதைக் கவர்ன்மெண்டுக்கு அறிவிக்க வேண்டியது எனது கடமை யென்று நினைக்கிறேன்.

நீதி உத்தியோகம் எனக்குக் கொடுக்கப்பட்டதற்குமுன்,
நான் காங்கிரஸ் மகாசபையைச் சேர்ந்தவர்களில் ஒருவனாயிருந்
தேன். ஆகையால், சுய ஆட்சி அல்லது 'ஹோம்ரூல்' என்று
சொல்வது எனக்குப் புதிதல்ல. இத்தேசத்தின் க்ஷேமத்
தின் பொருட்டும், இந்த ஏகாதிபத்தியம் நிலை பெற்றிருக்க
வேண்டியதற்கும் சீக்கிரம் சுயஆட்சி இத்தேசத்துக்குக்கிடை
க்கவேண்டு மென்றும், சென்ற வருடத்தில் நடந்த காங்கிரஸ்
மகாசபை சொன்னதுபோல் சுய ஆட்சி பெறுவதற்காக சட்
டத்திற் குட்பட்ட கிளர்ச்சி செய்யவேண்டு மென்றும் நான்
நம்புகிறேன். வெகு காலமாக அதே நம்பிக்கை எனக்கு
இருந்து வந்திருக்கிறது. இவ்வித நம்பிக்கை எனக்குண்டான
தால் ஹோம் ரூல் சபையின் அக்கிராசனாதிபதி என்கிற கௌ
ரவஸ்தானத்தை நான் சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்
டேன். கௌரவஸ்தான மென்று ஏன் சொல்லுகிறேனென்
றால், சிரமப்பட்டு வேலைசெய்ய எனது தேக நிலை இடங்
கொடுக்கவில்லை. நான் இனி முன்வைத்தகாலைப் பின்வைத்
துத் திரும்ப முடியாது. அச்சபை சட்ட சம்மதமான தல்ல
வென்று அறிவித்தாலும் அதின் அக்கிராஸ்தானத்தை நான்
இராஜிநாமா செய்ய முடியாததாகும். என்னுடைய தீர்
மானத்தினால் விளையக்கூடியதை அநுபவிக்க நான் சித்தம்.
ஏனென்றால், எந்தக்கடவுள் ஆஞ்ஞையின் கீழ் இப்பூபாலர்
கள் ஆஞ்ஞை புரிந்து வருகின்றார்களோ, அவனாலேயே மனித
ருக்கு அளிக்கப்பட்டிருக்கும் சுய ஆட்சி பாத்தியத்தைக்
கருதிக் கேட்கத் தகுதியான காலம் இந்தியாவுக்கு வந்து
விட்டதாக நான் நினைக்கிறேன். சுய ஆட்சியைத் தாங்கு
வதை ஒரு மதமாகவும் கடமை யாகவும் நான் கருதுகிற படி
யால், அக்கடமையைச் செய்வேன். எனது தேசத்தவர்க
ளாகிய நீங்களும் உங்கள் கடமையைச் செய்யும்படி கேட்டுக்
கொள்ளுகிறேன்.

ஸர் சுப்பிரமணி ஐயரின் பதில்.

இந்தியா மந்திரியின் கண்டனத்தைப்பற்றி.

[காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஹிக்ஸ் கேட்ட கேள்விக்கு, இந்தியா மந்திரி மிஸ்டர் மாண்டேகு கொடுத்திருக்கும் பதில் விஷயமாய் டாக்டர் ஸர். எஸ். சுப்ரமணி ஐயர் அடியில் வருமாறு எழுதுகிறார் :—]

இந்த மீ 3-ம் தேதி காமன்ஸ் சபையில் நடந்த விஷயங்களைக் குறித்துத் தற்சமயத்திற் கேற்றவாறு காலஹரணம் செய்யாமல் என்னாலியன்ற சமாதானத்தைச் சொல்ல விரும்புகிறேன். முதலில் என்னைக் குறித்ததென்று தோன்றக்கூடும். ஆனால் உண்மையில் அது முக்கியமான பொது விஷயம். என்னால் பிரசிடெண்டு வில்ஸனுக்கு அனுப்பப் பட்ட கடித விஷயமாய் மிஸ்டர் ஹிக்ஸ் கேட்ட கேள்விக்கு இந்தியா மந்திரி அளித்திருக்கும் விடையைப்பற்றி நான் இப் போது குறிப்பிடுகிறேன். இந்த கடிதத்தைப்பற்றி இந்தியாவிலுள்ள பத்திரிகைகளிலும், அதிலும் முக்கியமாய் ஆங்கிலோ இந்திய பத்திரிகைகளிலும், தீவிரமாய் வாதிக்கப்பட் டிருக்கிற படியால், நானே அந்தக்கடிதத்தைப்பற்றி ஒன்றும் சொல்ல வேண்டிய தில்லை யென்று நினைத்தேன். நான் அப் படி சொல்ல நினைத்திருந்தாலும் என்னுடைய தேசமக்களுக்கு நான் அதிகம் சொல்வதற் கிருந்திராது. இதைப்பற்றி சில வாரங்களுக்கு முன் நியூ இந்தியாப்பத்திரிகையில் எல்லா விவ ரங்களும் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. தவிரவும் எல்லோ

ரும் எளிதில் விஷயத்தை அறிந்துகொள்ளுமாறு "வெறுக்கத் தக்க சரி யாலோசனை" என்கிற ஒரு புத்தகமும் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இதுகாறும் நான் மௌனமாயிரு ந்ததுபோல் இனியும் இருக்கத்தகாது. மிஸ்டர் ஹிக்ஸ் கேட்ட கேள்விக்கு இந்தியா மந்திரி கொடுத்த ஆச்சரியகரமான பதிலி னால் நான் அதைப்பற்றி சில விஷயங்கள் சொல்லவேண்டி யிருக்கிறது. அம்மாதிரி செய்வதில், இந்தியா மந்திரியும் ராஜப்பிரதிநிதியும் சென்னைக்கு வந்திருந்தபோது நடை பெற்ற சம்பவங்களையும், அதற்குப் பின்னால் 8-2-18-ல் என க்கு சென்னை கவர்ன்மெண்ட் முக்கிய செக்கிரட்டரியிட மிரு ந்து கிடைத்த கடித விவரத்தையும் சுருக்கமாகவும், சரியாக வும் குறிப்பிடவேண்டியது தவசியமாகிறது.

பேட்டி காலத்தில் நடந்த விஷயம்.

ராஜப்பிரதிநிதியையும், இந்தியா மந்திரியையும் பேட்டி காண நினைத்தவர்களில் நானொருவனென்றும், அவ்விதம் பேட்டி எனக்குக் கிடைத்ததென்றும் உங்களுக்குந் தெரிந் திருக்கலாம். குறிப்பிட்ட காலத்தில் நான் கவர்ன்மெண்ட் ஹவுசில் தயாராயிருந்தேன். நான் ஆசனத்தமர்ந்த பிறகு ராஜப் பிரதிநிதி உஷ்ணமாயும் ஆக்கிரமாயும் என்னிடம் பேச ஆரம்பித்தார். அது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. பிரஸ் தாபத்திலுள்ள கடித விஷயமாய் அந்தக் காலத்தில் அவர் களுக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணைகளை நான் வெளியிடு வதினால் என்னிடம் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கைக்கு விரோதமாக நான் நடந்துகொள்ளவில்லை. அந்த பேட்டி கண்ட விஷயம் எவ்விதத்திலும் இரகசியமாக வைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்கிற அபிப்பிராயமு மில்லை. அப்படி இரகசியமாய் வைத்துக் கொள்ளப்பட வேண்டு மென்று எண்ணப்பட்டிருந்தாலும் கவர்ன்மெண்ட் செக்கிரட்

டரியிடமிருந்து எனக்குக் கிடைத்திருக்கும் கடிதத்தி லிருந்து அவைகள் இரகசியமல்ல வென்று நிதர்சனமாகிறது, மிக உஷ்ணத்துடன் ராஜப்பிரதிநிதி என்னிடம் பேச ஆரம்பித்தது இந்த லெட்டரைப் பற்றித்தான். கிரமமா யில்லாமல் என்னைக் கடுமையாய் நடத்துவதாக என் புத்தியில் பட்டது. ஏனெனில் நான் ராஜீயச் சீர்திருத்தங்களைப் பற்றிப் பேசுவதற்காகப் போனேனேயன்றி, யுனைடெட் ஸ்டேட்ஸ் பிரசிடெண்டுக்கு கடிதம் எழுதியதற்காக சமாதானம் சொல்லப் போகவில்லை. முந்தின யோசனைக்கு இடங்கொடாமல் எதிர் பாரா வண்ணம் இப்படி என்னை சமாதானம் சொல்லும்படி கேட்டிருக்கக்கூடா தென்று நான் நினைத்தேன். ஆகிலும் அதற்கு ஆட்சேபிப்பது உசிதமல்லவென்று கருதி, அந்த சமயத்தில் என்னால் சொல்லக்கூடிய சமாதானத்தைச் சொன்னேன். சுருக்கமாகச் சொல்லில், ராஜப்பிரதிநிதியிடத்தில் இந்தக் கடிதம் எழுதிய காலத்தில் நான் ஒரு அபூர்வமான நிலைமையிலிருந்தேனென்றும் அதை எழுதுவதில் நல்ல மனதுடனும், மாட்சிமை தங்கிய சக்கரவர்த்திக்கு நேசமாயுள்ள பெரிய தேசத்தின் பிரசிடெண்டின் செல்வாக்கு மூலமாய் அந்தச் சமயம் சுய ஆட்சிக்காரர்களுக்கு அவசியமான தாயிருந்த பரிகாரத்தைப் பெறலா மென்ற முழு நம்பிக்கையுடனும் இந்தக் கடிதத்தை எழுதியதாக ராஜப்பிரதிநிதியிடம் சொன்னேன். அத்துடன் " சுய ஆட்சிச் சங்கத்தின் முக்கியஸ்தர்களான மிஸ்ஸஸ் பெஸண்டு (பிரசிடெண்டு), மிஸ்டர் அருண்டேல், மிஸ்டர் வாடியா (கஜான்ஜி) இவர்கள் அந்த வாரத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். நான்காவது உத்தியோகஸ்தரான என்னையும் அதேமாதிரி மாகாண கவர்ன்மெண்டார் எந்த நிமிஷத்திலும் செய்வார்களென்று எதிர் பார்த்திருந்தேன். இந்த விஷயத்தில் சென்னை கவர்ன்

மெண்டார் உத்தரவை ராஜப்பிரதிநிதியும், அப்போது இருந்த இந்தியா மந்திரியும் ஆமோதித்திருக்கிறார்களென்றும் ஜனங்களுள் ஒரு நம்பிக்கை யிருக்கிறது. ஆகவே மிஸ்டர் ஹாட்சனும், மிஸஸ் ஹாட்சனும் அமெரிக்காவுக்குப் போவதாயிருந்த அந்த சந்தர்ப்பத்தை நான் கைக்கொண்டது நியாயந்தான்" என்று இராஜப் பிரதிநிதியிடம் சொன்னேன்.

இந்தியாவினுடையவும், அதன் பிரஜைகளினுடையவும் க்ஷேமத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ளக் கூடியவர்களும், அதிலும் முக்கியமாய் உலகமுழுமையும் அறிந்தவராய் வெகு பேரால் கொண்டாடப்பட்டு வருபவருமான மிஸஸ் பெஸண்டை விடுதலை செய்யும் விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொள்ளக்கூடிய அவர்களுடைய 'நண்பர்கள்' அமெரிக்காவிலிருக்கிறார்களென்று எனக்குத் தெரியுமாதலால் அவர்கள் மூலமாய் நான் அனுப்பினேனென்றும் சொன்னேன். அத்துடன் அவசியமானால் கடிதத்தில் கண்ட ஒவ்வொரு விஷயங்களையும் பற்றி ருஜுப்பிக்க முடியுமென்றும், ராஜப் பிரதிநிதி அதிகமாய்க் கண்டித்துப் பேசிய பாதுகாப்பில் வைக்கப்பட்டவர்களைப்பற்றி அனுமதிப்பார்களானால், என் வசமிருக்கும் கடிதங்களின் நகலைக் கொடுக்கிறேனென்றும் சொன்னேன்.

இதைப்பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. என்னுடைய நடத்தை திருப்தியாயில்லை யென்று ராஜப்பிரதிநிதி இந்தியா மந்திரி முன்பாக, அவருக்காகவும் வெளியிட்டாரென்பதைச் சொன்னால் போதுமானது. பிறகு இந்தியா கவர்ன்மெண்டாருக்கும், சென்னை கவர்ன்மெண்டாருக்கும் இந்தக் கடித விஷயமாய்க் கீழ்கண்ட கடிதம் தவிர வேறு என்ன தகவல்கள் நடைபெற்றனவென்பது எனக்குத் தெரியாது.

போர்ட்டு செயிண்ட் ஜார்ஜ்.

சென்னை, 8-2-18.

அன்பார்ந்த ஐயா,

யுனைடெட் ஸ்டேட்ஸ் பிரசிடெண்டுக்குத் தங்களால் அனுப்பப்பட்டிருப்பதாய்ச் சொல்லப்படும் கடிதத்தின் அச்சுப் பிரதி ஆலோசனை சபையுடன் கூடிய கனம் கவர்னர் வசம் வந்திருக்கிறது. அந்த லெட்டர் 1917-ம் வருஷம் ஜூன் மாதம் 24-ம் தேதி யிட்டு எழுதப்பட்டிருக்கிறது. மெயில் மூலமாய் அனுப்பினால் போய்ச்சேரா தென்பதற்காக மிஸ்டர் ஹாட்சனுடையவும், மிஸஸ் ஹாட்சனுடையவும் மூலமாய் அனுப்பப்பட்டிருப்பதாக அதில் கண்டிருக்கிறது. இதுவிஷயத்தில் தங்களை ராஜப் பிரதிநிதியும், இந்தியா மந்திரியும் நேரில் கேட்டு, தங்களுடைய நடத்தையைப்பற்றிக் கண்டனம் செய்ததாக ஆலோசனை சபையுடன் கூடிய கவர்னருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இக்காரணங்கள் பற்றி அந்தக் கடிதத்தைப்பற்றி மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை யென்று ஆலோசனை சபையுடன் கூடிய கவர்னர் தீர்மானம் செய்திருக்கிறார்.

தங்கள்,

(ஒப்பம்) லயோனல் டேவிட்சன்,

ஆக்டிங் சீப் செக்ரிடரி.

இக் கடிதத்தைக் கொண்டு இவ்விஷயமானது முடிவடைந்து விட்டதென்று நினைக்கக்கூடாது. இவ்வளவோடல்லாமல், ஏகாதிபத்தியத்தின் க்ஷேமத்திற்கு, அதிலும் இந்தியாவைப் பொறுத்தமட்டில் யுத்த மந்திராலோசனை சபையின் அறியாத்தனத்தினால் கெடுதல்கள் உண்டாகும்போலிரு

க்கிறது. மேலும், இன்னும் இந்தியா மந்திரியானவர் அவ ரது எண்ணம் எப்படி யிருந்தபோதிலும், இந்தியாவிற்கு வந்தபிறகு இங்கிருக்கும் அதிகார வர்க்கத்தினர், ஆங்கிலோ இந்தியர்கள், வைடன்ஹாம் வகையறுக்கள் முதலியவர்களின் வலையில் சிக்குண்டு, காலத்திற்குத் தகுந்தபடி தமது ஜவாப் தாரித்வத்தையும், பெருமையையும் காப்பாற்றிக்கொள்ள முடியாமல், நழுவ விட்டுவிட்டு, மேற்கூறியவர்களால் சொல் லப்பட்டு வந்த வார்த்தைகளையே கேட்டுக்கொண்டு, மந்திரி சபை ஸ்தானத்திற்கும் போய்ச் சேர்ந்துவிட்டார். ஜூன் மாதம் 3-ம் தேதி நடைபெற்ற சம்பவத்தின் காரணம் இது தான்.

இந்தியா மந்திரிக்குத் தெரியும்.

நான் ராஜப்பிரதிநிதியோடு பேசிக்கொண்டிருக்கையில், ராஜப்பிரதிநிதியானவர் தம்மிடத்தில், நான் பிரஸிடெண்டு வில்ஸனுக்கு எழுதின கடிதமானது யுத்த மந்திராலோசனை சபையாரால் கொஞ்ச நாளுக்குமுன்பாக அனுப்பப்பட்டதாக வும் ஒப்புக்கொண்டிருக்கிறார். இவ்வாறு நடந்திருக்கும் விஷ யமானது, இந்தியா மந்திரிக்குத் தெரிந்திராமலிராது. முத லில் அவருக்குத் தெரிந்திருக்காமலிருந்த போதிலும், என க்கு சிப் செக்ரிடெரியினிடமிருந்து வந்த கடிதத்திலிருந்து, அவருக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்றே நான் சொல் வேன். அவ்விஷயமாய் சிப்செகிரிடெரியினிடமிருந்து வந்த கடிதத்தினால் ராஜப்பிரதிநிதிக்கும், இந்தியா மந்திரிக்கும் அச்சமாசாரம் தெரிந்துதான் அவர்களின் அனுமதியின் பேரில் அக்கடிதம் எனக்கு வந்திருக்க வேண்டுமென்று நிச் சயமாய் நான் சொல்வேன். அது எப்படியிருந்த போதிலும் ஜூன் மாதம் 3-ந் தேதி யன்று இந்தியா மந்திரி பார்லி

மெண்டில் என் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போவதாகச் சொல்லியதிலிருந்து அவ்விஷயத்தை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் தயாராயில்லை.

தேச சேவையே பெரிது.

இனிமேல் என்ன நடந்தாலும் நடக்கட்டும். அதனால் எனக்கு வரும் கேடுகளை நான் பொறுத்துக் கொள்வதல்லாமல் எனது ஜன்ம பூமிக்கு ஊழியம் செய்வதையே ஒரு கடமை யாக நினைத்துப் பாடுபடுவேன். நான் செய்த காரியமானது எனக்காக அல்ல. இந்த தேசத்திற்காகவே நான் இவ்வித வேலையைச் செய்தேன்; இந்த ஒரு காரியத்திற்காக என்னு டைய பெயர் சுதந்தரம், இன்னும் இதரப் பொருள் முதலிய வற்றை இழக்கும்படியாயிருக்கும். ஆனால் அவைகளை யெல் லாம் இழக்கத் தயாராயிருக்கிறேன். தேசப் பாதுகாப்பில் வைப்பது, தேசப் பிரஷ்டம் செய்வது இன்னும் இவ்வித நட வடிக்கைகளை எடுத்துக் கொண்டாலும் நான் பயப்படமாட் டேன். எனக்கு உலகத்தில் ஆகவேண்டிய காரியம் ஒன்று மில்லை. ஆனால் இந்தியாவிற்கு சுய ஆட்சி கிடைக்கவேண்டிய விஷயத்தில் எவ்வித கஷ்டங்கள் வருவதாயிருந்தாலும் அதை அனுபவிப்பதே எனக்குப் பெருமை.

தற்கால நிலைமையிலிருந்து நான் தெரிந்து கொண்டது இது தான். மனிதனுடைய கண்ணுக்குப் புலப்படாத மஹான் களின் சங்கல்பத்தினால் தான் சென்ற வருஷம் ஜூன் மாதத் தில் மிஸஸ் பெஸண்டு முதலியவர்கள் பந்தோபஸ்தில் வைக் கப்பட்டனர். அவர்கள் தான் இந்தியா முன்னேற்றமடைய வேண்டு மென்றும், ஏகாதிபத்தியமானது, அதிகாரவர்க்கத் தினரின் நீதி முறையினால சீர் கெட்டுப் போகாமல் தடுக்க வேண்டுமென்று நினைக்கிறவர்களாவார்கள். அப்படிச் செய்த

தானது கொஞ்சம் நலமாகவே யிருந்தது. அதனால் தேசத்து ஜனங்கள் தத்தம் கடமைகளைச் செய்ய வாரம்பித்தனர். ஆகையினால் நமக்குக் கெடுதல் விளைவிக்கும் காரியங்களுக்கெல்லாம் நாம் இடங்கொடாமல் கிளர்ச்சி செய்யவேண்டும். என்மேல் நடவடிக்கை நடத்தப்படுமானால், அவ்விதக் கிளர்ச்சியை உண்டாக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கும்.

ஆகையினால் இந்த சமயத்தை நழுவவிடாமல், இந்தியாவிலுள்ள எல்லா பிரஜைகளும் இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைக்கவேண்டு மென்கிற கொள்கையையே மனதில் வைத்துக் கொண்டு நமது சுதந்திரம் கிடைக்கும் வரையில் கிளர்ச்சி செய்து காரிய சித்தி யடையவேண்டும். இந்த சமயத்தில் கெடுதல்களையே நினைத்துக் கொண்டிருப்பவர்களின் வார்த்தைகளைக் கேட்காமலிருக்க வேண்டு மென்று நான் வேண்டிக் கொள்ளுகிறேன்.

இந்தியா மந்திரியானவர் மிஸ்டர் ஹிக்ஸ் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த பொழுது அவர் என்னை எவ்வளவு கேவலமாய் இகழ்ந்து கூறினாரோ, அவ்விதமாய் நான் பதிலுரைப்பது எனக்குக் கௌரவமல்ல. அவர், இந்த தேசத்தில் வந்து என்னைக் கேட்ட கேள்விகளை யெல்லாம், காமன்ஸ் சபை மெம்பர்களுக்குத் தெரிவித்திருந்தால் தான் அவர் தமது கடமையைச் சரிவர செய்தா ரென்று சொல்லலாம்.

பிரஸிடெண்டு வில்ஸனுக்கு நான் கடிதம் எழுதின விஷயமாய் என்னைப் பலபேர் இகழ்ந்து பேசின போதிலும், அவர்களை நான் அவ்வப்பொழுது கண்டிப்பதில் பின்வாங்கவே மாட்டேன். என் விஷயமாய் இந்தியா மந்திரியானவர் என்ன எண்ணங் கொண்டிருக்கிறார் என்பதை அங்கிருந்து வந்த தந்தி சமாசாரத்திலிருந்து, நான் அறிய முடியவில்லை. எனக்குக் கிடைத்திருக்கும் 'ஸர்' பட்டத்தை உத்தேசித்து அவர்

பேசியிருந்தால், ஒரு தேசத்தின் ஆட்சி முறையைப் பற்றி குறை கூறுவதானது பிசகென்று அவர் நினைப்பது போல், ஒருவரும் நினைக்கமாட்டார்களென்றே நான் நம்புகிறேன். பெரும்பாலும் இத்தேசத்தில், ஜனங்கள் அநுமதியில்லாமல் பட்டங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் எவ்வளவு இஷ்டப்படா விட்டாலும், மரியாதையை உத்தேசித்து, அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டே ஆகவேண்டியதாயிருக்கிறது. ஆனால் நான் எனது பிரஜா உரிமையை மாத்திரம் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் நான் ஆட்சி முறையிலுள்ள ஊழல்களை எடுத்துக் காட்டி அவைகளைச் சீர்திருத்த வேண்டியதே எனது கடமையாகும். இது தான் எனக்குப் பெருமையாகும்.

எனக்கு 'ஸர்' பட்டம் கிடைத்த விருத்தாந்தம் எனது சத்துருக்களுக்காவது, பெரும்பாலரான நண்பர்களுக்கும், பிறருக்கும் இதுவரையில் தெரிந்திராதென்றே நினைக்கிறேன். பணத்தை வாரிச் செலவிட்டுப் பலரைப்போல் நான் பட்டம் பெற்றுக் கொள்ள வில்லையென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அவ்வளவு பணம் நான் அதற்கென்று வைத்திருந்தது மில்லை. நான் செய்த பெரிய வேலையைப் பாராட்டி கவர்ன்மெண்டார் அப்பட்டத்தை எனக்குக் கொடுத்தார்களென்றும் நான் நம்பவில்லை. ஏதோ அகஸ்மாத்தாய்க் கிடைத்ததென்றே சொல்ல வேண்டும். சுமார் ஒன்றரை மாதகாலம் போல் நான் சீப் ஜஸ்டிஸ் வேலை பார்த்தேன். சாதாரண இந்திய ஜட்ஜிகள் சிறிதுகாலம் சீப் ஜஸ்டிஸ் வேலை பார்த்தால் அவர்களுக்கு 'ஸர்' பட்டம் கொடுத்து விட்டுக் காயம் சீப் ஜட்ஜியாய்ச் செய்யாமலிருந்து விடுவது கவர்ன்மெண்டின் சம்பிரதாயம். இது நிற்க, 'ஸர்' பட்டச் சின்னங்கள் கிடைத்த கதையையும் சொல்ல வேண்டுகிறேன். சீப் ஜஸ்டிஸ் உத்தி

யோகம் பார்த்து விட்டு நான் சிலகாலம் பழனி மலையில் தாமதித்துக்கொண்டிருந்தேன். எந்த சமயத்தில், எப்பொழுது எந்த விதமாக, கே. ஸி. ஐ. ஈ. பட்டத்தை நான் பெற்றுக் கொள்ளத் தயார் என்று என்னை அச்சமயம் கேட்டனுப்பினார்கள். தபால் மூலமாய்க் கிடைத்தால் அதுவே போதுமென்று பதில் அனுப்பினேன். ஒருநாள் திடீரென்று அங்கிருந்த ஆக்டிங் கலெக்டர் ஒரு டப்பியில் பட்டச்சின்னங்களை வைத்துக்கொடுத்துவிட்டுப் போய் விட்டார். இப்போதோ அந்தகைய பட்டம் பெறுவோர் தர்பார்களுக்குச் சென்று பகிரங்கமாய்ப் பட்டங்கள் வழங்கப்படுகிறார்கள். இது தான் ஐயா, எனக்குப் பட்டங் கிடைத்த விருத்தாந்தம். இத்தகைய பட்டங்களைப் பிடுங்கிவிடத்தான் மெயில் பத்திரிகையின் ஆசிரியர் சிபார்சு செய்கிறார். அதன் மூலமாய் என்னை அவமானப்படுத்தி அவர் மனங்களிக்கப் பிரயத்தனப் படுகிறார். 'மெயில்' ஆசிரியரிடத்தில் கிறிஸ்தவ தர்மமும் மரியாதையும், பழிக்குப்பழிவாங்கக் கூடாதென்ற நியதியும் கொஞ்சங்கூடக் கிடையாது. அவர் எழுதப்போகிற அடுத்த வியாஸத்தில் என்னுடைய பட்டங்களைப் பிடுங்கக் கவர்ன்மெண்டார் அனுசரிக்கவேண்டிய முறையை 'மெயில்' ஆசிரியர் எடுத்துக் காண்பிப்பார் போல் தெரிகிறது. அதற்கும் ஒரு தர்பார் நடக்கவேண்டும். அக்கிராசனாதிபதி அச்சமயம் கறுப்புச்சட்டை போட்டுக்கொண்டு அவ்விசனகரமான செய்தியைச் சபை முன் அறிவிக்க வேண்டும் போலும்! பட்டம் பெற்றவர்கள் ஒரு முழம் உயர்ந்து விடுகிறாப்போல் அறிவிலிகள் நினைத்து வருகிறார்கள். இதைப்பற்றி ஸ்வீடன் தேசத்துக் கதை யொன்று கூட இருக்கிறது. ஒருவனுடைய பிரஜா உரிமைகளைக் காத்துக்கொள்ள விரும்பும் எந்த கண்ணியப்பட்ட மனிதனும் சர்க்கார் பட்டங்களை ஏற்றுக்கொள்ளமாட்டான்.

பேன்ஷன் பேறுதல்.

எனக்குக்கிடைக்கும் பென்ஷனைக்குறித்து ஒரு வார்த்தை. பென்ஷனானது எனது ஜன்மதேசத்தின் வரிப்பணத்திலிருந்து கொடுக்கப்படுகிறதே யொழிய, அன்னிய நாடுகளின் பணத்திலிருந்து கொடுக்கப்பட வில்லை. தவிரவும், தனிமனிதர், அல்லது ஒரு நிர்வாக சபையினர் இவர்களின் அபிமானத்தையும் இஷ்டத்தையும் அனுசரித்து எனக்குப் பென்ஷன் கொடுக்கப்பட வில்லை. ஆனால், பார்லிமெண்ட் மகாசபையினால் செய்யப்பட்ட சட்டத்தைக் கொண்டே எனக்கு பென்ஷன் கொடுக்கப்படுகிறது. ஆதலின் அப்பார்லிமெண்டில் மீளவும் ஒரு சட்ட மேற்படுத்தின லல்லாமல், என்னுடையபென்ஷனை யாரும் நிறுத்திவிட முடியாது.

முழுப்பென்ஷனும் பெற்றுக்கொண்டு நான் என் பதவியை விட்டு விலகவில்லை. என்னுடைய சுயநலத்தை மட்டும் நான் கவனித்து இன்னும் 8-மாத காலம் உத்தியோகத்தில் இருந்திருப்பேனேயானால் இப்பொழுது எனக்குக் கிடைப்பதைவிட வருஷம் 1-க்கு இன்னும் 5 ஆயிரம் ரூபாய் வருஷமொன்றுக்கு அதிகப்பென்ஷன் கிடைத்திருக்கும். அந்த எட்டுமாத காலமும் உத்தியோகத்தில் இருந்து விடும்படி அக்காலத்திலே இந்தியா மந்திரியாய் இருந்தவர் சொன்னபோதிலும், தள்ளாத வயதில் ஜட்ஜியாய் இருந்தால் நீதி பரிபாலனத் திறமைக் குறைவாய் விடுமோவென்று கருதியே அந்த எட்டு மாதகாலம் உத்தியோகம் வகிக்க இஷ்டப்படாமல் என் உத்தியோகத்தை நான் ராஜிநாமாசெய்தேன்.

பிரஜாபாத்தியமே எனக்கு விசேஷமானது.

நான் பென்ஷன் பெறுவது காரணமாக எனக்குள்ள பிரஜாபத்திய உரிமைகள் போவதா யிருப்பின், என்னுடைய

பென்ஷனை இழந்துவிட நான் தயார். பென்ஷன் பெறுகிறேன் பென்ஷன் பெறுகிறேன் என்று இலேசாய்ப்பேசும் ஆங்கிலோ இந்தியப் பத்திராசிரியர்களுக்கு ஒரு வார்த்தை சொல்லுகிறேன். அதாவது ஜட்ஜியாயிருந்து என் கடமையைச் சரிவர நடத்தி வந்ததற்காகக் கிரமமாய் எனக்குக் கிடைத்து வரும் பென்ஷனைப் பறித்துவிட ஆங்கிலோ இந்தியர்களால் முடியுமானால் அதைக்குறித்து எனக்கு எள்ளளவும் கவலை யிராது. எனக்கு ஜீவனார்த்தமாக ராஜாங்கத்தி லிருந்து கிடைக்கும் பென்ஷன் போய்விடுமானால் நான் சேர்ந்துள்ள ஒரு சன்னியாசி சங்கத்திலிருந்து எனக்கு உணவும் உடையும் கிடைக்க உரிமை யுண்டு. அது பிரம்மஞான சங்கமல்லவென்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

முடிவுரை.

தள்ளாத வயதி லிருந்து புத்திதடுமாற்றத்தினால் எழுதப்பட்ட கடிதமென ஸர். ஜான் ரீஸ் சொல்லியிருக்கிறார். எனது வயதுக்கிரமத்தைக் கவனிக்கும் பொழுது, புத்தி தடுமாறி எழுதி விட்டேனே என்று சிலர் நினைக்கக்கூடுமானாலும், அவ்விதம் நினைப்பது முற்றிலும் பொய்யாகும். இப்பொழுது எனது புத்தி,கூர்மையாகவும் தெளிவாகவும் இருப்பதுபோல், எப்பொழுதும் இருந்ததில்லை யென, நான் நிச்சயமாய்ச்சொல்வேன். ஸர் ஜான் ரீஸ் என்பவருக்கு வரவர நல்ல புத்தியும் தெளிவும் ஏற்பட்டு வருகின்றன வென்று யாரேனும் சொன்னால் அது எவ்வளவு பிழை யாகுமோ அவ்வாறே எனக்கு புத்தி தடுமாற்றம் வந்து விட்ட தென்பதும் பிழை யாகும்.

சிறைபட்ட இரு முகம்மதியர்கள்.

நமது முகம்மதிய சகோதரர்களும் தேச பக்தர்களுமாகிய முகம்மது அலி, ஷெவ்கட் அலி ஆகிய இருவரின் விடுதலையை வேண்டி சென்னை கோகலே மண்டபத்தில் என்றும் எதிர்பாராத பொதுஜன மகாநாடு கூடியது. அதில் டாக்டர் ஸர். சுப்பிரமணி ஐயர் பின் வருமாறு பேசுகிறார் :—

கனவான்களே !

நமது முகம்மதிய சகோதரர்களாகிய முகம்மது அலி, ஷெவ்கட் அலி ஆகிய இருவரும் இன்னும் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கிறார்களே யென்று ஆட்சேபிக்க நாம் இன்றுமாலை இங்கே கூடியிருக்கிறோம். அவ்வாறு கூடுவதற்கு நமக்கு மனமில்லை என்றாலும், மிக்க வருத்தத்துடனேயே கூடும்படி நேர்ந்தது. மிஸ்டர் மாண்டேகு இங்கே தங்கியிருக்குங்காலத்தில் அமைதியான ராஜீய நிலைமை வேண்டுமென்று ராஜப் பிரதிநிதி சொல்லி யிருக்கையில், வேறு விதமான நோக்கத்துடன் நாம் இங்கே கூடி யிருந்திருக்க வேண்டு மென்பது நமது பிரார்த்தனை. மிஸ்டர் மாண்டேகு இந்தியாவுக்கு வந்திருக்கிறார். சமீபத்தில் தான் அவர் இங்கே வந்துளார். மனமார்ந்த சந்தோஷத்துடனும் நன்றி யறிவுடனும் நாம் அவருக்கு உபசாரம் சொல்லுவோம். தவிர இம்மாதிரி மகாநாடு கூட்டாமலிருந்திருக்க வேண்டு மென்பதே நமது கருத்தெனவும் நாம் அவருக்கு உறுதி கூறுவோம். ஆயினும் என்ன செய்யலாம்? நமது தேசத்தினிடமும் நமது

முகம்மதிய சகோதரர்களிடமும் நமக்குள்ள கடமையைப் பூர்த்தி செய்யவே நாம் இங்கே கூடியிருக்கிறோமென்பது உங்களுக்குத் தெரியும். அக்கடமையை நாம் பூர்த்தி செய்யாமலிருக்க முடியாது.

கொள்கைக்கு ஏற்றதா யில்லையே.

இந்தியா கவர்ன்மெண்டின் உள் நாட்டு மெம்பரான ஸர் வில்லியம் வின்ஸெண்ட் ஸெப்டம்பர் மாதம் 5-ந் தேதி யன்று பிரசுரப்படுத்திய கொள்கையைப் பார்க்குமளவில், நமது முகம்மதிய சகோதரர்களை இன்னும் பந்தோபஸ்தில் வைத்திருப்பதானது அக் கொள்கைக்கு ஏற்றதாயில்லை. இரு சகோதரர்களின் விஷயம் ஆலோசனையி லிருக்கிற தென்று அச்சமயம் அவர் சொன்னார். அதற்கப்பால், தேசாபிமானம் வாய்ந்த நமது கனம் மாமூதபாத் ராஜா அவ் விருவரையும் நேரில் பார்க்கப் போனார். அதற்கு முன்னமேயே ரகஸ்யப் போலீஸ் அதிகாரி யொருவர் அவ்விருவரையும் பார்க்கப் போனாரென்பது யாவருக்கும் தெரியும். அவ்விருவரையும் நேரில் பார்த்துப் பேசிவிட்டு, கனம் மாமூதபாத் ராஜா சொல்லியிருப்பதைப் பார்க்கும் பொழுதுதான், அவ்விருவரின் உண்மையான விஷயமும் நிலைமையும் இன்னவென்று நமக்கு நன்கு தெரிந்திருக்கிறது. ஆயினும் கனவான்களே! கவர்ன்மெண்டாரின் மனம் மாறியதற்கும், நேசபாவமுள்ள தன்மைக்குப் பதிலாக நேசபாவமற்ற தன்மையைக் கவர்ன்மெண்டார் கொண்டிருப்பதற்கும் காரணமென்ன? இவ்விஷயத்தில் நமக்கு திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. எல்லாம் மூடு மந்திரமாகவே இருக்கின்றன. இது நமக்குப் பேராச்சரியமாகும்.

அவ நம்பிக்கையும் சந்தேகமும்.

நேசபாவமற்ற தன்மையைக் கவர்ன்மெண்டார் மேற்கொண்டிருப்பதனால், ஜனசமூகத்தினருக்கு ஓரளவு அவ நம்பிக்கையும் சந்தேகமும் தோன்றி யிருக்கின்றன. ஆதலின், நமக்குள்ள அவ நம்பிக்கையையும் சந்தேகத்தையும் கவர்ன்மெண்டார் போக்கவேண்டுமென்பதற்குச் சமயம் ஏற்பட்டுளது. முதன் முதல் கவர்ன்மெண்டாருக்கு நாம் சொல்வதென்ன? நமது அபிப்பிராயத்தை நாம் வெளியிட்டு அவ்விருவரையும் விடுதலை செய்யவேண்டு மெனக் கண்டிப்பாய்க் கேட்டிகிறோம். அவ்வாறு விடுதலை செய்ய முடியாது போனால் கவர்ன்மெண்டாருக்கு நாம் சொல்வது யாது? அவ்விருவரின் விஷயங்களையும் விசாரித்துப் பார்ப்பதற்காகக் கமிட்டியை நியமியுங்கள்; தக்க சட்ட ஞானமும் சுயேச்சையான அபிப்பிராயமும் உடைய இந்தியர் அக்கமிட்டியில் இருக்க வேண்டும். வார்த்தையிலும் நோக்கத்திலும் நமக்கெல்லாம் நம்பிக்கை யுண்டுபண்ணக் கூடியவர்களான இந்தியரே மெம்பராய் இருக்கவேண்டும். அவ்விருவரின் விஷயமாய் ரகஸியப் போலீஸாரும் இதரரும் சொல்லும் சாட்சியமானது அந்தரங்கமா யிருப்பினும் சரி, பகிரங்கமா யிருப்பினும் சரி, அச்சாட்சியங்களை யெல்லாம் அக் கமிட்டியார் சீர்தூக்கிப்பார்க்கட்டும்; பின்பு, அவ்விருவரையும் அக்கமிட்டியார் நேரில்கண்டுபேசட்டும். இரு சகோதரர்களும் எவ்வாறு வாக்குறுதிகொடுக்க இஷ்டப்படுகிறார்களென்பதை அக்கமிட்டியார் கண்டுகொள்ளட்டும். அதனம்மல் அக்கமிட்டியார் தங்களது ஆலோசனையையும் அபிப்பிராயத்தையும் கவர்ன்மெண்டுக்குச் சொல்லட்டும். அவ்விருவரின் விஷயமாய் இச்சமயம் கவர்ன்மெண்டாருக்குள்ள நோக்கத்தை உறுதிப்படுத்தியே அக்கமிட்டியார் ஆலோசனையும் அபிப்பிராயமும் கொடுப்பார்களாயின்,

அப்பொழுது இந்தியருக்கு அவ்விஷயத்தில் திருப்தி ஏற்படக்கூடும்.

கிரமமல்லாத ஒன்றை நாம் கேட்கவில்லை.

கிரமமல்லாத ஒன்றை நாம் கேட்கவில்லை. கிரேட்பிரிட்டனிலே ராஜாங்கப் பாதுகாப்புச்சட்டம் அமுலில் இருக்கிறது. நாம் சொல்லும் யோசனையைப்போலவே அங்கே அச்சட்ட விஷயமாய், அனுஷ்டானம் இருக்கிறது. பொதுஜன சாவதானத்துக்கும் ராஜாங்கப் பாது காப்புக்கும், அனுகுணமான விதிகளைச் செய்ய மந்திராலோசனை சபையுடன் கூடிய அரசருக்கு அச்சட்டப்படி அதிகாரம் உண்டு. அச்சட்டத்தின்படி அங்கே விதி யொன்று ஏற்பட்டிருக்கிறது. விரோதிகளின் சந்ததியிலோ கால் வழியிலோ வந்த எவரையும் பொதுஜன சாவதானத்தையும், ராஜாங்கப் பாதுகாப்பையும் அனுசரித்துப் பந்தோபஸ்தில் வைத்துவிட உள்நாட்டு மந்திரிக்கு அவ்விதியின் வண்ணம் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய ஒவ்வொரு நபரின் விஷயத்தையும் ஆலோசனைக் கமிட்டியார் யோசித்துப் பார்க்கவேண்டும். அந்த ஆலோசனைக் கமிட்டியிலே ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் இருவரும் பார்லிமெண்டு சபை மெம்பர்களில் நால்வரும் அங்கத்தினராவர். ஆயினும் முடிவான அதிகாரமோ உள்நாட்டு மந்திரியின் கையில் அடங்கியுளது.

பாதுகாப்பிருந்தும் அங்கே மிக்க ஆட்சேபம்.

மேற்கண்டவாறெல்லாம் கிரேட் பிரிட்டனிலே பாதுகாப்பிருந்தும், அந்த விதியும் அதிகாரமும் சரியல்லவென பார்லிமெண்டு சபையிலும், கோர்ட்டுகளிலும், பத்திரிகைகளிலும் ஆட்சேபங்கள் ஏற்படலாயின. அங்கே பிரசுரமாகும் நியூ ஸ்டேட்ஸ்மான் என்னும் பத்திரிகையில் மிஸ்டர்

ஹெர்பர்ட் ஸாமுவேல் எழுதியிருக்கும் வண்ணம் அந்த ஆட்சேபங்கள் என்னவென்றால், நியாய ஸ்தலங்களிலே கிரமமான விசாரணை நடந்தாமல் பிரிட்டிஷ் பிரஜையின் சுதந்திரத்தைப் பறித்து விடக்கூடாது. மிகவும் அசாதாரணமான சந்தர்ப்பத்திலே ஒருவரை விசாரணையின்றி பந்தோபஸ்துக்குட்படுத்துவதாயின் பந்தோபஸ்துக்குட்படுத்தும் அதிகாரமானது நிர்வாக அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமானால் பார்லிமெண்டு சபையின் மூலமாய்ச் சட்டஞ் செய்தே அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும்.

ஜனங்களின் கோரிக்கை.

கிரேட் பிரிட்டனிலே அவ்வாறெல்லாம் பலவாறான ஆட்சேபங்கள் ஏற்படுமாயின், இந்தியாவைப்பற்றி நாம் என்னென்று சொல்வது. நாம் கேட்பதென்ன! பந்தோபஸ்து நபரின் விஷயத்தை ஆலோசித்துப் பார்ப்பதற்காக ஆலோசனைக் கமிட்டியொன்று வேண்டுமென்றே நாம் கேட்கிறோம். அவ்விதமான கமிட்டியின் விசாரணையும் நியாய ஸ்தலங்களின் விசாரணையுமின்றி நமது தேச மக்களிலே சுமார் 1500 பேர் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் பிழை செய்யக்கூடு மென்பதும். பிழை செய்திருக்கிறார்களென்பதும், நமக்குத் தெரியும். யாதொரு விதமான நிபந்தனையுமின்றி மிஸ்ஸஸ் பெஸண்டு முதலியோர் விடுவிக்கப்பட்டிருப்பதைப் பார்ப்போமாயின், மாகாண கவர்ன்மெண்டாரின் நடவடிக்கை தப்பாகவே இருந்ததென்று நன்கு புலப்படுகிறது. அவர்களை விடுவித்து விட வேண்டு மென்று ஜன சமூகத்தினர் கிளர்ச்சி செய்யவே, மிஸ்ஸஸ் பெஸண்டு முதலியோர் விடுதலை பெற்றனர். மிஸ்ஸஸ் பெஸண்டையும் அவரது ஊழியத்தையும் ஜனங்கள் நன்கு உணர்ந்திருந்ததனாலேயே ஜனங்கள் கிளர்ச்சி செய்தனர்.

பொறுமையைக் கசக்கவேண்டாம்.

பந்தோபஸ்திலுள்ள 1500 பேர்களின் விஷயமாய் ஜனசமூகத்தினர் கிளர்ச்சிசெய்யாம லிருக்கின்றனரே யென்றால், கவர்ன்மெண்டின் வார்த்தையில் ஜனங்கள் நம்பிக்கை வைத்து ராஜபக்தி கொண்டிருப்பதனால்,நான் கிளர்ச்சி செய்யவில்லை யென்பேன். எனவே, அதிகாரிகளை நான் ஒரு விஷயம் கேட்டுக்கொள்ளுகிறேன். ஜனங்களின் பொறுமையும் நம்பிக்கையும் மிகவும் கசந்து போகும்படி நடக்காதேயுங்கள் என்றே அதிகாரிகளுக்கு நான் சொல்வேன். முகம்மது அலி, ஷௌகட் அலி ஆகிய இருவரும் நிரபராதிகள் என்றே ஜனங்கள் கருதி யிருக்கின்றனர். மேலும் இன்னும் அவ்விருவரையும் பந்தோபஸ்தில் வைத்திருப்பதனால், அதிகாரிகளின் போக்கைக்கண்டு, ஜனங்கள் ஆத்திரமும் அடைந்திருக்கின்றனர். அதிகாரிகளின் அத்தகைய போக்கானது அநீதமே யாகும். நாம் சொல்லும் யோசனையின் படி நடக்கக் கவர்ன்மெண்டார் தயாராய் இல்லாதுபோனால், கவர்ன்மெண்டை இன்னும் ஜனங்கள் எவ்வாறு நெடுக நம்பி யிருக்க முடியுமோ அறியேன். இன்னுமொரு விஷயம் உளது. முகம்மது அலி, ஷௌகட் அலி ஆகிய இருவரையும் இன்னும் பந்தோபஸ்தில் வைத்திருப்பதனால், தங்களுடைய ராஜபக்திக்கு அது ஒரு விதத்தில் மாசாகிற தென்று முஸ்லிம் சமூகத்தினர் கருது கின்றனர். நான் ஹிந்து மதத்தவனாயினும், முகம்மதியரின் உணர்ச்சியை அறிவேன். ஆதலின் முகம்மதியருக்குள் அத்தகைய அபிப்பிராயம் வளரும்படி விடுவதனா லுண்டாகும் பலாபலனைக் கவர்ன்மெண்டார் கவனிக்க வேண்டு மென்று நான் சொல்வேன்.

இனி பந்தோபஸ்துத் திரவு சட்டப்படிச் செல்லுமா என்று இங்குள்ள ஹைகோர்ட்டிலும் பிரிவி கௌன்ஸிலிலும்

நாம் பரீட்சை பார்க்க வேண்டு மென்பது அவசியமே. முகம்மது அலி, ஷௌகட் அலி ஆகிய இவர்களின் விஷயத்தில் அவ்விதம் பரீட்சைபார்க்க வேண்டு மென்பதே நமது உத்தேசம்.

பீஹாரில் நடந்த கலகம்.

பீஹாரிலுள்ள ஆரா நகரிலே சமீபத்தில் கலகம் நடந்ததைப்பற்றி நான் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இந்திய சமஸ்தானங்களிலே அம்மாதிரி ஹிந்துக்களுக்கும் முகம்மதியருக்கும் கலகம் நடப்ப தில்லை யென்பது பிரசித்தம். தவிர, ஜாதீய உணர்ச்சி தோன்றிப் பரவுங் காலத்திலே அவ்விதமான கலகம் நேருவதும் விசித்திரமே. வங்காளத்திலே ஜாதீய உணர்ச்சி தோன்றிய காலத்தில் அவ்விதம் கலகம் தோன்றியது. இப்பொழுதும் கலகம் தோன்றியுளது. எப்படியோ அக்கலகம் நேர்ந்தது துரதிர்ஷ்டமேயாகும்.

கலக விஷயமாய் ஹிந்துக்களினிடம் தப்புண்டென முகம்மதிய சமூகத்தினரில் ஒரு பகுதியினர் கருதுவதாகப் பத்திரிகைகளிலிருந்து புலப்படுகிறது. அது சரியா அல்லவா என்று நான் திட்டமாய்ச்சொல்வதற்கில்லை. ஆயினும், எனது மதத்தினரால் முகம்மதிய சகோதரர்களுக்கு நேர்ந்த துன்பங்களுக்காக என் மதத்தினரின் பெயரால் நான் முகம்மதியரையெல்லாம் மனமாற மன்னிப்புக்கேட்டுக் கொள்ளுகிறேன். நான் பிரம்மஞானி யாதலின், மதவிஷயமாய் எனக்கு வேற்றுமை யில்லை. நான் எவ்வளவு தூரம் ஹிந்துவோ அவ்வளவு தூரம் முகம்மதியனுமாவேன். ஸ்ரீகிருஷ்ணனிடமும் வேதங்களினிடமும் எனக்கு எவ்வளவு பய பக்தி விசுவாசம் உண்டோ, அவ்வளவு பயபக்திவிசுவாசமானது முகம்மதியினிட

மும் குரானிடமும் எனக்குண்டு. நாம் ஹிந்துக்களாயினும், முகம்மதியராயினும் இந்திய மாதாவின் புத்ரர்கள். இந்திய மாதாவின் பெருமைக்கும் க்ஷேமத்திற்குமே நாம் இரவு பகலாகப் பாடுபட்டு வருகிறோம். ஆதலின்எல்லாரும் அற்ப மான சச்சரவுகளை அறவே யொழித்து, தேச சேவகத்தில் ஒற்றுமையுடன் நிற்போமாக!

முகம்மது அலி, ஷௌகட் அலி தாயின் கடிதம்.

தயையும் கிருபையும் ததும்பும் தெய்வம் துணை.

சிண்டவாரா, (மத்திய மாகாணம்)

ஆகஸ்டு 4; 1917—

அன்புள்ள ஸர். சுப்ரமணி அய்யர் அவர்களுக்கு:—

இக்கடிதம் உங்களுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணு மென்று நான் நினைக்கிறேன்; ஏனென்றால், என்னை நீங்கள் அறியவே மாட்டீர்கள் என்பதல்லாமல், நான் ஒரு முஸல்மான் ஸ்திரீ; பழைய கட்டுப்பாடுகளின்படி வளர்க்கப்பட்டவள்; அக்கட்டுப் பாடுகளின்படி ஸ்திரீகள் அன்னியருக்குக் கடிதம் எழுதுவது அரிது; புருஷர்களுக்கு எழுதவே மாட்டார்கள்.

ஆனால் இக்காலம் விநோதமா யிருக்கிறது. ஆகையால் தற்சமயம் எல்லோர் மனதிலும் பதிந்திருக்கிற ஒரு விஷயத்தைப் பற்றி எல்லோராலும் மதிக்கப்படும் தங்களுக்கு ஒரு கடிதத்தை எழுதும் பொருட்டுச் சிறிது பழைய கட்டுப் பாட்டை விலக்கி விட்டு நான் முன் வந்தால், ஒருவரும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

மாறுதல்கள் கிழ ஜனங்களுக்கு—அதிலும் கிழவிகளுக்கு இஷ்டமாயிராது. ஆனால் நான் கிழவியா யிருந்தாலும், இப்பொழுது நம்மைச்சுற்றி உண்டாய்க் கொண்டிருக்கிற மாறு

நல்கலை நான் கண்டு களிப்படைகிறேன். முற்காலத்தில் பெரிய காரியங்களைச் செய்யும்படி ஜனங்களைத் தூண்டி விட்ட பக்தி இப்பொழுது ஜனங்களுக்கு உண்டாய் வருகிறதானது சந்தோஷமாயிருக்கிறது ; முஸல்மான்களாகிய நாங்களும், பரி சுத்தமான பீடமாகிய இஸ்லாத்துக்குத் திரும்பிப் போய்க் கொண் டிருக்கிறோம்.

எங்களுடைய நபிகள் நாயகம் இப்பூவுலகில் வாழ்ந்த கா லத்திலும் (அல்லா அவரை ஆசிர்வதிக்கட்டும்) அல்லாவுக்குத் திருப்தியாக நடந்துகொண்ட ஆதி கலிப்பாக்கள் காலத்திலும் நன்மை செய்யும் படியான சுதந்தரம் நமக்கு இருந்தது ; இஸ் லாம் மார்க்கத்தைச் சேர்ந்த ஸ்திரீகளும் தங்களுடைய பொறுப்பை வகித்துச் சண்டைக்குக்கூடப் போனதுண்டு. ஆனால் தற்காலத்தில் ஒதுங்கினாற்போல் நாங்கள் வாழ்ந்து வந் திருக்கிறோம். ஆயினும் இக்காலமானது எங்களிடத்தில் எதிர்ப் பார்க்கும் கடமைகளைச் செய்ய நாங்கள் பின் தங்க மாட் டோம்.

சாதாரணமாக ஸ்திரீகளுக்கு ஏற்படும் பொறுப்பைவிடப் பெரிய பொறுப்பை நான் வகிக்கும்படி அல்லா கட்டளையிட் டார். என்னுடைய நாயகர் திடீரென்று இறந்து போனதால் 27-வது வயதில் நான் விதவையாய் விட்டேன். அப்பொழுது 6 குழந்தைகள் எனக்கிருந்தன. அவர்களை வளர்த்துக் கல்வி கற்பிக்க வேண்டிய பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. கடை சிக் குழந்தையாகிய முகம்மது அலிக்கு அப்பொழுது இரண்டு வயதுகூட ஆகவில்லை. அவர்களுடைய சொத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டிய வேலையும் எனக்கே ஏற்பட்டது. நல்ல காரியத்தைச் செய்வோருக்கு அல்லா உதவி செய்வாரென்று நம்பிக் கஷ்டப்பட்டேன். நான் பட்டபாடு வீணாகவில்லை.

என்னுடைய பிள்ளைகள் எல்லோரும் தங்களுடைய காரியத்தைத் தாங்கள் பார்த்துக் கொள்ளும்படி யானவர்களாய் விட்டார்கள். இனி என்னுடைய உதவி அவர்களுக்கு அவசியமில்லையாகையால், எங்கள் மார்க்கத்துக்குரிய காரியங்களில் என் கவனத்தைச் செய்வதில் தான் எனக்கு எப்பொழுதும் ஆசை இருந்தது.

ஆனால் என்னுடைய கடைசிக் குழந்தைகளாகிய ஷௌகட் அலியும் முகம்மது அலியும் இரண்டு வருஷங்களுக்குமுன் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டதும் நான் அவர்களுடன் இருக்கவேண்டுமென்று நினைத்து நியாயமில்லாமல் அவர்களுக் கேற்பட்ட கதியை நானும் அநுபவித்து வருகிறேன். கடவுளுடைய காரியத்தைச் செய்கிறதற்காக அவரால் குறிப்பிடப் பட்டவர்கள் தங்களுடைய மார்க்கத்துக்காகவும் தேசத்துக் காகவும் கஷ்டப்படுவதும் உயிரையும் வேண்டுமானால் கொடுப்பதும் பெருமையே யாகும். தேசப் பாதுகாப்புச்சட்டம் செய்யப்பட்டு இரண்டுமாதங்களுக்குள் என்னுடைய இரண்டு குழந்தைகளுமே முதல் முதல் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டதானது எனக்குச் சந்தோஷமாகவே இருக்கிறது. என்னுடைய சொந்த இஷ்டத்தின்மேல், என்னுடைய பிள்ளைகளின் இஷ்டத்துக்கு விரோதமாக அவர்களுக் கேற்பட்டிருக்கிற கஷ்டங்களை யெல்லாம் நானும் அனுபவிக்கிறதென்றும், கிழவியாகிய நான் என்னுடைய தெய்வத்துக்காகவும் தேசத்துக்காகவும் செய்யக்கூடியதைச் செய்கிறதென்றும் துணிந்து விட்டேன்.

ஹோம்ரூல் என்ற சுய ஆட்சிக்காக என்வயதுள்ள ஒரு ஸ்திரீ வேலை செய்து வந்திருப்பது எனக்குப் பெரிய பெருமையாக இருக்கிறது; சென்ற 40 வருஷகாலமாக நான் என்னுடைய வீட்டு ஆட்சியை (ஹோம் என்றால் வீடு) நடத்தி வந்திருக்கிறேன். அதன் பிரயோஜனத்தைப் பார்த்தால், என்

னுடைய ஆட்சி திருப்திகரமாகவே இருந்திருக்கிறது. ஆகையால் நமது தேசத்துக்குச் சுய ஆட்சி கொடுக்கவேண்டுமென்று கேட்க எனக்குப் பாத்தியம் உண்டாயிருக்கிறது; லோக மான்ய திலகர் என்ற திரபுருஷனுல் ஸ்தாபிக்கப்பட்ட ஹோம்ரூல் சபையில் சேரலாமென்று அநேக மாதங்களுக்கு முன் எனக்குத்தெரிந்ததும், நானும் முகம்மதலியின் மனைவியாகிய என்னுடைய நாட்டுப்பெண்ணும், எங்கள் குடும்பத்தில் வயது வந்த எல்லோரும் போய் அச்சபை மெம்பர்களாகச் சேர்ந்து கொண்டோம். இக்காலத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று மாத்திரம் சொல்வது போதாது? அந்த நம்பிக்கையைப் பகிரங்கமாக வெளியிட்டுச் சொல்லி, வீட்டுக் கூரையின்மேல் ஏறி நின்று எல்லோரும் கேட்கும்படி பறைசாற்ற வேண்டும்.

மகா சாமர்த்தியமும் தைர்யமுமுள்ள நமது சகோதரியாகிய அன்னிபெஸண்டம்மாளைப் பார்க்க எனக்கு எப்பொழுதும் ரொம்ப ஆவல் உண்டு. என்னுடைய குழந்தைகள் பந்தோபஸ்தில் வைக்கப்பட்ட பிறகு அவர்களுக்குத் தைரியம் சொல்லி அவர் எழுதின கடிதத்தைப் பார்த்த பிறகு என்னுடைய ஆவல் அதிகரித்து விட்டது. அவர்களிடம் பெஸண்டம்மை மிக்க அன்பும் பிரியமும் காட்டியதோடு, தமது பிரசுரங்களையும் அவர்களுக்கு அனுப்பி வந்தார். ஆகவே, அவரிடம் நாங்கள் மனதார அன்பு பூண்டிருக்கிறோமென்பதை அவருக்குச் சொல்லுங்கள். அவரது ஸகாக்களுக்கும் எங்களது ஆழ்ந்த அன்பை அறிவியுங்கள். அவரை நான் இதுவரையில் நேரில் பார்த்த தில்லை. இது எனது துர்ப்பாக்கியமே. எனது குமாரனுகிய ஷௌகட் அலி முன்னம் காசியிலே அபின் இலாகாவில் பலவருஷம் உத்தியோகமாய் இருந்தான். அப்பொழுது பெஸண்டம்மையை அவன் கண்டிருக்கிறுன்.

அவன் வேலையாய் இருந்த இடங்களிலெல்லாம் நான் அவனு டன் இருந்திருப்பினும், காசியிலே அவன் இருந்த பொழுது, அவனுடன் நான் தங்கி யிருக்க வில்லை. என்றாலும் கடவு ளின் அருளிருக்கு மாகில் பெலண்டம்மையை நான் ஒருநாள் காண முடியும்; அது வரையில் அவருக்காக நான் கடவுளை விடாமல் துதித்து வருவேன். அவர் பந்தோபஸ்தில் இருக் கும் பொழுது, அவரைப் பாராட்டுவதைத் தவிர நான் என்ன செய்ய முடியும்? இந்தியராகிய ஹிந்துக்களும் முகம்மதிய ரும் விருத்தர்களும் பாலர்களும் அவர் விஷயமாய்க் கடவுளைத் துதிக்கின்றனர். சென்ற 27 மாதகாலமாகச் சிலருடைய அற்ப மான நிர்ப்பந்தத்திற்கு நாங்கள் ஆளாயிருப்பது போலவே, அவரும் ஆளா யிருக்கிறார். என்றாலும், ஒற்றுமை யுடன் கூடிய இந்தியர் அனைவரும் துதிப்பதானது அவருக்குள்ள நிர் பந்தத்திற்கு ஒரு வகையில் பரிகார மர்கும். அவருக்காக நான் கடவுளைத் துதிப்பதையும், அவரைப் பாராட்டுவதையும் தவிர அவருக்கு நான் செய்யக்கூடியது யாதுளது? ஆயினும் அவருக்காக ஏற்பட்டிருக்கும் நிதிக்கு எங்களாலானதைக்கொ டுத்து உதவவேண்டு மென்று நான் கருதுகிறேன். நாங்கள் செல்வவான்களாய் ஒருநாளும் இருந்த தில்லை. எனது குமா ரர்கள் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டது முதல் நாங்கள் நிச் சய மாக ஏழைக ளாகி விட்டோம். எனது குமாரர்களிலே ஒருவனாவது தனது வேலையைச் செய்ய முடிய வில்லை. ஒன் றும் சம்பாதிக்க வழியில்லா திருக்கையில், நாங்கள் வாங்கி யுள்ள கடன் தொகைக்கு வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான வட்டி செலுத்தவேண்டி யிருக்கிறது. அவ்வட்டியைச் செலு த்தவும், எங்களது பெரிய குடும்பத்தைக் காப்பாற்றவும், எனது குமாரர்களுக்குக் கிடைக்கும் ஜீவனம்சப் பணம் போத வில்லை யென்பது வெளிப்படை. சிப்பாய்க்கலகம் நடந்தகாலத்

திலே எனது மாமனாரானவர் ராமபுரம் நவாப்பு சேவகத்திலிருந்து பல ஆங்கிலேயரையும் ஆங்கிலேய அதிகாரிகளையும் காப்பாற்றினார். அதற்காக எனது மாமனாருக்கு ஜாகிர் கிடைத்தது. அந்த ஜாகிரின் பெரும்பாகத்தை இப்பொழுது விற்றுவிட்டேன். எனது மக்கள் இளம்பிராயத்தில் இருக்கும் பொழுதும் அவர்களை நான் காப்பாற்ற வேண்டியிருந்த பொழுதும், அந்த ஜாகிரைப் பெருமையாக நான் நினைத்து அதில் ஓர் ஏகர் பூமிகூட எங்களது கையை விட்டுப் போகக்கூடாதென்று நான் சிந்தித்திருந்தேன். ஆயினும் ஜாகிரைப் பெற்றவரின் பேரப் பிள்ளைகள் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டுப் போனதனால், 1857-ம் வருஷத்தில் கிடைத்த ஜாகிரை 1917-ம் வருஷத்தில் விற்கும்படி ஆயிற்று. அதில் பெரும்பாகத்தை விற்றுவிட்டதற்காக நான் சிறிதும் வருத்தப்படவில்லை. பிற்காலத்திலே எனது குமாரர்களும் அவரது மக்களும் ஜீவனோபாயத்திற்கு என்ன செய்வார்களோ என்ற கவலை எனக்கில்லை. ஏனென்றால் "உலகமோ விசாலமானது, நான் நொண்டியல்ல," என்ற அன்றோர் வாக்கியத்தைக் கடைப்பிடித்திருக்கிறேன். இப்படி எல்லாமிருந்தும் எனது சகோதரியாகிய பௌண்டம்மையானவள் எங்களது திரவியத்திற்குப் பாத்தியப்பட்டவளென்பதே எனது எண்ணம். ஆகவே, அவரது ஜீவிக்காக 10-ரூபாய் மணியார்டர் செய்திருக்கிறேன். மாதந்தோறும் அவ்வாறே யனுப்ப நான் உத்தேசித்திருக்கிறேன். அதைத் தாங்கள் அன்புடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்; எனது குடும்பத்தைச் சேர்ந்த குழந்தை குஞ்சுகளும் வேலைக்காரர்களும் தங்களால் ஆனதை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி, அவ்வாறே கொடுத்திருப்பதில் தான் 10-ரூபாய் அனுப்ப முடிந்தது என்பதை நான் தங்களுக்குச் சொல்லுகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு வார்த்தை. எனது குமாரர்கள் இளம் பிராயமுள்ளவர்கள்; தேக திட முள்ளவர்கள்; தேசமெங்கும் அவர்களுக்கு எண்ணிறைந்த நண்பர்களும் சக ஊழியக்காரர்களும் உண்டு. ஆகவே அவர்களுக்கு வேண்டிய உதவியை இத்தேசத்தினர் அனைவரும் செய்வார்கள். எனதன்புள்ள சகோதரியாகிய பெஸண்டம்மையின் மனம் கிலேசமடைவது போலவே, தாயாகிய என்னுடைய மனம் மிக்க கிலேசமடைகிறது; எதற்காகக் கிலேசமடைகிறதென்றால், விசாரணையின்றி நூற்றுக்கணக்கான தீரவாலிபர்கள் தங்களுடைய உற்றாரையும் பெற்றாரையும் நண்பர்களையும் விட்டு, தங்களையும் தங்களைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றுவதற்கு வழியில்லாமல் சுதந்திரமின்றி பந்தோபஸ்தில் வைக்கப்பட்டுப் போனதற்காகத்தான். சென்ற இரண்டேகால் வருஷ காலமாக எனது குமாரர்கள் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருப்பதைக் கவனித்துப் பார்க்குமளவில், அநேகம் அருமைக்குமாரர்கள் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருப்பதையும், அதனால் அவர்களின் வீடு விசனத்தில் மூழ்கி யிருப்பதையும், பற்றி நூற்றுக் கணக்கான வாலிபர்களின் தாய்மார்கள் எவ்வாறு மனக்கிலேச மடைவார்களென்பதை நான் எளிதில் கண்டுகொள்ள முடியும். பந்தோபஸ்தில் இருப்போரும் அவர்களின் பெற்றோரும் எவ்வாறு மன் வருத்தமும் துக்கமும் அடைகிறார்களென்பதைப் பற்றி அப்போதைக் கப்போது மனதைப் புண்ணாக்கும் படியான செய்திகள் வெளிக் கிளம்புகின்றன. அதிலிருந்தே இன்னும் பலர் மௌனமாய் எவ்வாறு துக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிறார்களென்பதை ஒருவாறு யூகித்தறிந்து கொள்ளலாம். சட்ட பூர்வமாய் இன்னவாறு பரிகாரம் தேடிக்கொள்ளலா மென்பதோடு பண வுதவியும் அவர்களுக்கு ஏதேனும் செய்ய முடியாதோ? துரதிருஷ்டமான

அவ்வாலிபர்கள் தங்களது சுதந்திரத்தை இழந்திருப்பினும், அவர்களுடைய குடும்பத்தினர் ஏன் பசியால் வாடவேண்டுமோ அறியேன்? பசியால் வாடும்படி அக்குடும்பத்தினர் என்ன அபராதம் செய்தனர்? ஆதலின் அவர்களுடைய கஷ்டத்தையும் துக்கத்தையும் போக்குவதற்காக உதவி செய்ய வேண்டுமென்ற விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டால், இந்தியாவின் ஒவ்வொரு பாகத்திலுள்ளவர்களும் தங்களாலான உதவியைச் செய்வார்களென்று நான் நிச்சயமாய் நம்பியிருக்கிறேன். தினந்தோறும் ஒருபிடி அரிசியாவதுகொடுத்து உதவுவார்கள். தாராள சிந்தையை யுடையவரும் தன்னயத்தை மறந்தவருமான பெஸண்டம்மையின் பெயரால் நிதி ஏற்பட்டிருப்பது மிகவும் ஏற்றதே யாகும். பெஸண்டம்மை கஷ்டப்படுவது போலவே பந்தோபஸ்திலுள்ள நூற்றுக்கணக்கான வாலிபர்களின் குடும்பத்தினரது கஷ்ட நஷ்டங்களையும் இந்தியர் உணர்ந்துகொண் டிருக்கிறார்களென்று பெஸண்டம்மைக்குத் தெரியு மானல், அதுவே, அவருக்கு ஒரு பெரிய ஆறுதலாகும். அவருடைய வருத்தம் பிரமாதமாகத்தான் இருக்கும். என்றாலும் அவைகளைச் சகித்து விட முடியாதென்பதில்லை. எப்படி யென்றால், 'ஸ்திரீகள் அபலைகளா' யிருப்பினும், ஆண் மக்களைப்போல் காரியத்தை நடத்த முடியாதாயினும், அன்பு பாராட்டுவதற்கும் கஷ்டங்களைச் சகிப்பதற்குமாக ஸ்திரீகளுக்குக் கடவுளின் அருளினால் சக்தி யுண்டு. ஸ்திரீகளாகிய நாங்கள் மிகுந்த அன்புடையவர்களா யிருப்பது போலவே கஷ்டங்களையும் சந்தோஷத்துடனேயே யனுபவிப்போம். இம்மாதிரியான காலம் நீடித்திராது. இதற்கெல்லாம்

முடிவும் உண்டு. கடவுள் கை கொடுப்பார்; ஜெயம் சீக்கிரத்தில் உண்டாகும் என்று எங்கள் வேத புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் மேலான வசனத்தில் எனக்கு மிக்க நம்பிக்கையுண்டு.

இப்படிக்கு,
(ஒப்பம்) அபாதிபேஞே அப்துல் அலி பீகம்.

ஸாத்வீக எதிர்ப்பு அல்லது சத்யாக்கிரஹம்.

ஸர். சுப்பிரமணி ஐயரின் பதில்.

[தற்சமயம் ஸாத்வீக எதிர்ப்பை யனுஷ்டிப்பது உசிதமல்லவென்று கனம் பி. என். சர்மா, கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரி முதலிய சிலர் அறிக்கை யொன்று வெளியிட்டனரல்லவா? அதற்கு டாக்டர் ஸர். எஸ். சுப்பிரமணி ஐயர் பதில் விடுத்திருக்கிறார். அதன் முக்கியமான ஸாராம்சத்தை கீழே காணலாம்.]

சட்ட சம்மதமானது.

சில ஜனத்தலைவர்களால் வெளியிடப்பட்ட பேர்போன அறிக்கையைப் பற்றி நான் எனது அபிப்பிராயத்தை அறி

விக்க வேண்டுமென்று சிலர் என்னைக் கேட்டுக் கொண்டனர். அந்த அறிக்கையானது ஹோம் ரூல் கட்சியினருக்கு ஒரு விதத்தில் நற் செய்தியாகும். அந்த அறிக்கையில் கையெழுத்திட்டவர்கள் நல்ல பதவியும் யோக்கியதையும் பொறுப்பும் வாய்ந்தவர்கள். தவிர, அவர்களில் ஐவர் சட்ட ஞான நிபுணர்கள். ஆகவே, எவ்விதமாகப் பார்த்த போதிலும், ஸாத்வீக எதிர்ப்பானது சட்ட சம்மதமான தென்றும், அந்த எதிர்ப்பை யனுஷ்டிக்க வேண்டிய காலம் வரும்பொழுது அதை யனுஷ்டிப்பதில் தாமதம் வேண்டா மென்றும் அவர்கள் சொல்லியிருப்பது விசேஷமாகும். நமது முறைப்பாடுகள் பரிகார மாவதற்காக அவசியமான போது அந்த எதிர்ப்பை மேற்கொள்ளுதல் கிரமமான மார்க்க மென்று அவர்கள் சொல்லி யிருப்பதனால், ஹோம் ரூல் கட்சியைச் சேர்ந்த அனைவரும் அவர்களுக்கு வந்தனமளிக்க வேண்டும்.

ஸாத்வீக பரிகாரம்.

ஸாத்வீக எதிர்ப்பு என்பதற்குப் பதிலாக ஸாத்விக பரிகாரம் என்று வழங்கலாமென எனக்குத் தோன்றுகிறது. தற்சமயம் ஸாத்வீக பரிகாரம் என்று வழங்குவதே உசிதமாகும். எதிர்ப்பு என்றால், அது பார்த்தமாத்திரத்தில் ஒருவருக்கு எதிரிடையாயுள்ள முயற்சி யெனத் தோன்றக்கூடுமாயினும், அதில் அந்த அர்த்தம் இல்லை. ஸாத்வீக எதிர்ப்பை மேற்கொள்ளுபவன் தனக்குத்தானே எதிரிடையான முயற்சி செய்வானே யல்லது பிறருக்கு எதிரிடையான முயற்சியைச் செய்வதில்லை. ஸாத்வீக எதிர்ப்பை அனுஷ்டித்தவர்களில் சிரேஷ்ட புருஷரான மிஸ்டர் காந்தியோ அந்த எதிர்ப்பை "ஆன்மசக்தி" யென்று சொல்லியிருக்கிறார். ஆகவே, அந்த எதிர்ப்பில் மிருகத்தனமான சரீரசக்தி உபயோகிக்கப் படுவ

தில்லை யென்பதும், ஜீவசக்தியே கையாளப்படுமென்பதும், வெளிப்படை.

சாந்தமான நிலைமையாம்.

இனி; அந்த அறிக்கையிலே ஆட்சேபத்துக்கு இடமான அம்சத்தைக் கவனிப்போம். மிஸ்டர் மாண்டேகு இங்கே வரப்போவதனுல், ராஜ்யநிலைமை சாந்தமாயிருக்க வேண்டுமென்பதும், அதற்காக அதிகாரிகளுடன் ஸமரஸமாய் இருக்கவேண்டுமென்பதும் அவர்களது உத்தேசமென்று தெரியவருகிறது. அப்படியானுல், ஸாத்வீக எதிர்ப்பைப்பற்றி, அவர்கள் விவகரித்திருப்பானேன்? ஸாத்வீக எதிர்ப்பு என்பதைக்கேட்ட மாத்திரத்திலேயே, ஒழுங்கீனமும் கீழ்ப்படியாமையும் நேருமென அதிகாரிகளுக்குச் சிந்தனை யுண்டாகுமல்லவா? அதிகாரிகளை ஸமரஸப்படுத்த வேண்டுமாயின், ஸாத்வீக எதிர்ப்பு என்றுல் என்ன, அது கிரமமானதா, முன்னம் சிலர் அதை யனுஷ்டித்திருக்கின்றனரா. அது கிரமமானது என்பதாக அவர்கள் சொல்லாமலல்லவோ இருந்திருக்கவேண்டும்?

பூரண்டொரு கேள்விகள்.

ஹோம் ரூல் கட்சியினருடைய புகார் யாதெனில், சாந்தமான நிலைமையையும் அதிகாரிகளுடன் ஸமரஸத்தையும் உண்டு பண்ணவேண்டுமென்று அவர்களுக்கு உண்மையில் எண்ணம் இருந்திருக்குமானுல், அறிக்கையை வெளியிட்ட அடுத்த தினம் மாகாண கான்பரன்ஸின் விசேஷக்கூட்டம் கூடியபொழுது, அது வரையில் அவர்கள் காத்திருந்து, விசேஷக் கூட்டத்தின் முன்னிலையில் தங்களது அபிப்பிராயத்தை அறிவித்திருக்கலாமே; அப்படிச் செய்திருந்தால் அவர்களுடைய நல்லெண்ணம் நன்கு புலப்படுமே. மேலும் அந்த அறிக்-

கையை "நியூ இந்தியா," "ஹிந்து" ஆகிய பத்திரிகை களுக்கு அனுப்பியதோடு மில்லாமல், ஹோம் ரூலுக்குப் பரம விரோதமாயிருக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்புவானேன்? பந்தோபஸ்து உத்தரவை ரத்து செய்யுமுன், அதிகாரிகளு டன் சமரஸமாய் இருப்பதும், ஒத்துழைப்பதும் எப்படி சாத் தியமாகுமென்பதைக் கவனிக்கவேண்டும். பந்தோபஸ்தில் உள்ளவர்கள் விடுவிக்கப்படுமுன், அதிகாரிகளுடன் சமரஸம் ஏற்பட வேண்டுமென்று அவர்கள் சொல்வார்களாயின், பந் தோபஸ்து உத்தரவில் அவர்களுக்கு உண்மையில் மனப்புண் இருக்கிறதென்று எப்படி பிறர் கொள்ள முடியும்? பந்தோ பஸ்து உத்தரவைப்பற்றி அவர்கள் தங்களது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது உண்மையே. ஆனால் வார்த்தையின் உண் மையைக் காரியத்திலல்லவோ பார்க்கவேண்டும்? பந்தோ பஸ்தில் இருப்போரின் சரீரகஷ்டம், மனோவியாதி, அவ மானம் ஆகிய இவைகளில் அவர்கள் உபேட்சையாய் இருக் கின்றனரென்றே அறிக்கையின் தொனியிலிருந்து கருத வேண்டி யிருக்கிறது.

தீர்க்கதரிசியின் வார்த்தை.

மாகாண காங்கிரஸின் விசேஷக் கூட்டத்திலே அவர் களில் ஒருவர் பேசியிருப்பதைக் கவனிக்க வேண்டும். ஸாத் வீக எதிர்ப்பை யனுஷ்டிக்கக் கூடாதென்ற யோசனை அங்கீக ரிக்கப்படாது போயின், காரியம் கெட்டுப்போய் விடுமென்று அவர்களில் ஒருவர் சொல்லி யிருப்பதாகத் தெரிய வருகிறது. எதை விட்டுக் கொடுத்தும் சமரஸம் அடைந்துவிட வேண்டு மென்று அவர்களில் ஒருவராகிய தீர்க்கதரிசியும் அவரது ஸகாக்களும் சொல்லுகிறார்கள். கோயமுத்தூரிலே பந்தோ பஸ்தில் இருப்போரைப் பற்றி இரண்டொரு தினங்களாகச்

செய்திவருகின்றதே. அச்செய்தியை அவர்கள் சிறிது காது கொடுத்துக் கேட்பார்களா? அந்தீர்க்கதரிசி சொல்லும் வண்ணம், அந்த சம்பவம் நேரும், இந்த சம்பவம் நேரும், என்று வைத்துக்கொள்வோம்: அதற்குக் கௌரவமுள்ள ஹோமரூலர்கள் அனைவரும் சொல்வதென்னவென்றால்:—"தேசத்தின் கௌரவத்தைவிட்டுக் கொடுத்துப் பலனடைவதிலும் தேசம் அழியட்டும்" என்பதாகும். சுய உத்தேசத்தைக் கருதி நடப்பதும், அடிமைத்தனத்துக்கு உட்பட் டிருப்பதுமான நமது நடத்தையிலுள்ள மாசு நீங்கும் வரையில், நமக்கு நல்ல நிலைமை கிடைக்கு மென்பதற்கில்லை. நமது தலைவர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்றும், அது வரையில் எதையும் விட்டு விடக் கூடாதென்றும், தீவிரமாயிருப்போர் அவர்களிடம் அபிமானம் காட்டமுடியாது. இதற்கு உதாரணமாக, சாத்வீக எதிர்ப்பு தீர்மானத்துக்குச் சாதகமாக 300 பேரும் எதிரிடையாக 22 பேரும் ஓட் கொடுத்திருப்பதைப் பார்க்கலாம்.

கையெழுத்திட்டவர்களும் அதிகாரிகளும்.

இனி அந்த அறிக்கையில் கையெழுத்திட்டவர்களின் உண்மையான நிலைமையைப் பற்றி அதிகாரிகள் எவ்வாறு கருதுவார்கள்? அவர்கள் தங்களது அறிக்கையை வெளியிடாமல், கான்பரன்ஸில் வந்து தங்களது அபிப்பிராயத்தைச் சொல்லி, அங்கே தங்களது அபிப்பிராயம் அங்கீகரிக்கப்படாது போயினபின், ஸாத்வீக எதிர்ப்பை ஆதரிப்பவர்களுடன் தாங்கள் சம்பந்தப்படுவதில்லையென்று பிரசித்தப்படுத்தியிருந்தால், அப்பொழுது அவர்களின் உண்மையான நிலையை அதிகாரிகள் நன்கு கண்டு கொள்ளக்கூடும். அப்படியுமில்லாமல், ஸாத்வீக எதிர்ப்பைப்பற்றி முன்னமேயே எழுதி,

அது கிரமமானதேயாகுமென்றும், அவசியமானபோது உபயோகித்துக் கொள்ளலாமென்றும் சொல்லி யிருப்பதைப் பார்த்தால், "கடவுளை நம்பியிரு, ஆயினும் கத்தியைத் தீட்டி வைத்துக் கொள்" என்ற வசனம் போலல்லவா அவர்களது நிலைமை ஏற்படும்? ஏனென்றால், அதிகாரிகளை நம்புவதாயின் நம்புங்களென்றும், அதோடு ஸாத்வீக எதிர்ப்பைச் சமயம் வாய்த்தபோது உபயோகிக்கத் தயாராய் இருங்களென்றும், அவர்கள் சொல்லி யிருப்பதாகப் புலப்படவில்லையா?

யௌவன இந்தியா.

[1916-ம் வருடத்தில் சென்னையில் நடந்த மாணவர் பரிஷத்தில் அக்கிராசனம் வகித்த டாக்டர் ஸர். எஸ். சுப்பிரமணி ஐயரின் மகோபந்யாசம்.]

என் இளம்பருவமுள்ள ஸ்நேகிதர்களே,

உங்களுடைய முதல் கூட்டத்தின் அக்கிராஸனாதிபதியாக என்னை நீங்கள் வரித்ததற்கு உங்களுக்கு வந்தனம் கூறுகிறேன். ஸமீப காலத்தில் உற்பத்தியாயிருக்கும் இளைஞர்களின் இப்புதிய சங்கத்துடன் சேர்ந்து வேலை செய்வதில் எனக்கதிக சந்தோஷமுண்டாகி யிருக்கிறது. அதினால் எனக்கு இளமை யுண்டாயிருக்கும் உணர்ச்சி வருகிறது. அது வார்த்திகனுக்கு சந்தோஷத்தைத் தருவது அநுபோகமே. நாம் வஸிக்கும் இப்பழைய உலகத்திலுள்ள எல்லாவற்றிற்கும் ஒரு புதிய ஜீவனுண்டாகி அவையெல்லாம் புதிதாய் வருகின்றன; இன்றுண்டாயிருக்கு மந்த உலகத்தின் புது ஜீவப் பிரவர்த்தியினுடைய ஸ்பரிசம் எனக்குண்டாயிருப்பதும் என்னுடைய நற்கருமமென்றே நான் நினைக்கிறேன். உங்கள் மத்தியில் வந்திருந்து ஒரு முதிர்ந்தவன் செய்யவேண்டிய கடமையில் என் பாகத்தை நான் நிறைவேற்ற வந்திருப்பதில் எனக்கு. ஆவேசமும் நம்பிக்கையுமுண்டாயிருப்பது மன்றி, எனக்குள் புது அவாக்களும் உற்பவித்து எழும்புகின்றாற் போல் எனக் குணர்ச்சி யுண்டாகிறது. என்முன் நான் பார்ப்ப

தென்ன? நம் தேசத்தில் ஜனித்துள்ள நூற்றுக்கணக்கான வாலிபச் சிறுவர்கள், வாலிபச் சிறுமிகள் என்றும் சேர்த்துக் கூற எனக்காசை யுண்டாகிறது. ஒரு மெச்சத்தக்க காரியத்திற்காக அவர்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்; அச் சிறுவர்கள் இந்தியாவின் முன் வந்து கொண்டிருக்கும் நகரவாசிகள். அவர்களுள் இந்தியாவுக் கினி யேற்படுத்தப்போகும் மந்திரிகள், ராஜ்ய தந்திரிகள், சேனாதிபர்கள்; கப்பற்படைத்தலைவர்களும் இருக்கிறார்கள். ராஜாங்க பார்லிமெண்டென்ற மகா சபைக்கும் இவ்வுலகிலுள்ள நாகரீக முள்ள ஜாதியாரின் சபைக்கும் அனுப்பப்படவேண்டிய பிரதிநிதிகளு மிருக்கிறார்கள். நம்முடைய பிழ் நாட்டின் மகிமையைப் பாடும் பாடகர்களும், கவிஞர்களும், நம்முடைய புராதன மதங்களின் உண்மைகளை எடுத் துபதேசிக்கும் ஞாதாக்களும், மஹான்களும், அவித்தியா என்ற இருளால் மூடப்பட்டிருக்கும் தாய் தந்தையற்ற மானிடர்களுக்குப் பூர்வ காலத்தில் ஏற்பட்டிருக்கபடி காருண்ய உதவிசெய்ய உற்ப விக்கப்போகும் ஞான திருஷ்ட்டி யுள்ள மஹாத்மாக்களும், நம்மிச் சிறுவர்களுள் இருக்கின்றனர். இது தான் எனக்கு உற்சாகத்தைக் கொடுத்து நம்பிக்கையையு முண்டு பண்ணுகின்றது. நான் விருத்தாப்பியனான படியால் எனக்கிருக்கும் சரீரத்தளர்ச்சியினால் உங்களுடைய பரபரப்பிலும் அவாக்களிலும் நான் சேர்ந் துணர வில்லை யென்று நீங்கள் நினைக்கலாகாது.

புது இந்தியா பெற்ற சுவப்பனத்தை சிந்திப்பதிலும், தன்னுடைய சுவ தர்மத்தை செய்வதற்கும் கனத்துள்ள சங்கல்பத்தை நிறைவேற்றுவதற்கும் ஏற்படப் போகிற சுவதந்திர முடைய ஜாதியாரென்ற தோற்றத்தை அனுபவித்து ஆனந்திப்பதிலும் நாமெல்லாரும் வாலிபர்களே. நீங்கள் மட்டும் அவ்விஷயத்தில் வாலிப முற்றவர்களல்ல, நானுந்தான்.

இச்சிறந்த என் உள்ளபிப்பிராயத்துடன் உங்களுள் நானின்று வந்திருப்பது மன்றி, உங்கள் சபையின் இந்த முதற் கூட்டத்தைக் கூட்டி, வேலை யாரம்பிப்பதற்கு நீங்கள் செய்த முயற்சிகளெல்லாம் கைகூடி பலிதமானதைப்பற்றி நான் உங்களுக்கு சந்தோஷ மொழி கூறுகின்றேன்.

முப்பத்தொன்று வருஷங்களுக்கு முன் உங்களைப்போலிவ்வளவு வாலிபமில்லாதவர்கள், இதிலும் அடக்கமான ஒரு சபையை ஆரம்பித்தார்கள். அது ஏற்கெனவே ஆச்சரியமான அபாரவேலை செய்திருக்கிறது. அவர்களிலும் வாலிபமுற்ற நீங்கள், வரையறுத்த அளவுடன் ஆரம்பம் செய்திருக்கிறீர்கள். அவ்வித வரையறுத்துள்ள தின்னந்தான் தேச அபிவிர்த்திக்கு, நன்குறியா யுள்ளது. காங்கிரஸ் மஹா சபையானது இவ்வித மகிமைக்கை யடைந்திருக்கையில், அடுத்த 30 வருஷங்களில் உங்களுடைய இச்சிறு எல்லையில் நீங்கள் எதைத்தான் சித்தி பெறமாட்டீர்கள்? உங்கள் பெரியோர்களைப்போல் நீங்களும் மிதத்துடனும், பொறுமை யுடனும், பிடிவாதத்துடனும், விடா முயற்சி யுடனும், வேலை செய்து கொண்டே யிருங்கள்; கட்டாயம் உங்களுக்கு ஜெயமே கிடைக்கும்.

அதிலிருந்து சுபாவமாய் உங்களுடைய இச்சையைப்பற்றி பேச விடங் கொடுக்கிறது. அது செய்ய சாத்திய முள்ளவை இன்னவென்று எனக்குப் புலப்படுகிறது. உங்கள் பெரியோர்களைப் போலவே நீங்களும் தக்கபடி நன்றாய் நடந்து கொண்டால், நம்முடைய ஜனங்களுக்கு விஷய ஞானத்தை உண்டு பண்ணிய கருவியாகிய காங்கிரஸ் சபையைப் போல், உங்களுடைய சபையையும் உபயோகமுள்ள நிறைவேறக்கூடிய ஆத்ம போதத்திற்கு நீங்கள் உபயோகித்துக்

கொள்ளலாம். உங்களுடைய உபாத்திமார்களுக்கும் நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கும் தங்களுடைய சிரமங்க ளின்னவை யென்று ஏகோபித்து எடுத்து ரூபிக்க ஒரு கருவியாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம். விருத்தாப்பியனாகிய நான் உங்களுக்குச் சொல்லும் புத்தி மதியைக் கேளுங்கள். ஆரியர்களுக்குரிய முக்கிய குணம் பெரியோர்களுக்குச் சிறுவர் வணங்குதலென்பதை ஞாபகத்தி லிருத்துங்கள். சட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும். உண்மையைப் பாராட்டல் வேண்டும்.

இவ்விதச் சபைகளைக் கூட்டி முயற்சி செய்வதெல்லாம் பழைய வழக்கத்தை யொத்ததே யன்றி புதுமை யல்ல. உங்கள் உபாத்திமார்களும், நிபுணர்களும் இச்சபை கூட்ட உதவி செய்திருப்பது நல்ல சூசகமே. அவர்களையும் என்னுடைய இந்த ஸ்தானத்திலிருந்து புராதன குருக்கள்மார்போல் உங்களுக்கு அறிவைப் புகட்டிச் சேர்க்கையைப் போதிக்க வேண்டுமென்றும் நான் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். சிறு ஆரியர்கள் 1000 வருஷங்களுக்கு முன் வித்தியாப்பியாசம் செய்யும் முன் குருக்களும் சிஷ்யர்களும், ஒன்று சேர்ந்து, சாந்தி ஸ்லோகத்தைச் சொல்லி, "ஓம்சாந்தி, சாந்தி, சாந்தி, ஹரி, ஓம்" என்று முடிப்பது வழக்கம். அதாவது குரு சிஷ்யர்களுக்குள் வேறுபாடுண்டாகு மென்பதை யெதிர்பார்த்தே சமாதானமாய் அவைகள் முடிய வேணு மென்ற கருத்தையே அவர்கள் கைக்கொண் டிருந்ததாகத் தெரிய வருகிறது.

இந்த சந்தோஷ நிலைமை எப்போதும் குடி கொண்டிருக்க வேண்டு மென்பதும், உங்களுடைய கடமைகளை நீங்கள் சரிவரச்செய்து வரவேண்டு மென்பதுமே என்னுடைய சித்தாந்தம். அந்தக் கருமத்தையே என்னுடைய அக்கிரா

ஸன உபந்யாஸத்துக்கு ஆதாரமாய்க்கொண்டு நான் பேசுகிறேன்.

மாணவர் சங்கத்தின்வேலை.

மாணவர்களுக்குள்ள கஷ்டங்களை மரியாதையாயும் சிநேகம் பாராட்டியும் குருக்களிடம் தெரிவித்துக்கொள்ளல் வேண்டும். உங்கள் அதிகாரிகள் செய்வதைக் கண்டித்துப்பேசி அவர்களை தூஷித்து ஆரவாரம் செய்ய இச்சபையை நீங்கள் உபயோகிக்கக் கூடாது. மாணவர்களுக்கும் குருக்களுக்குமிருக்கவேண்டிய பரஸ்பர பற்றுதலும் விசுவாசமும் தற்போது பலமற்றிருப்பதால் அவைகளைப் புலப்படுத்தி நிலைநிறுத்தி இச்சங்கத்தை நற்றாய கருவியாய் உபயோகிக்கலாம். இந்நாளில் அபிப்பிராய வித்தியாஸங்களினால் ஒற்றுமைக் குறைவு அடிக்கடி எங்கும் ஏற்படுவது சாதாரணமாயிருப்பதால், அதை சமரஸப்படுத்த, கான்பரென்ஸுகளும், சபைகளும் வேலைக்காரர் சங்கங்களும், வர்த்தகச் சங்கங்களும் இந்நாளில் ஏற்பட்டு வேலை செய்து வருவதால், இம்மாணவர் சங்கத்தையும் ஜாக்கிரதையாய் நடத்திப் பரிபாலித்து வந்தால், உங்களுக்கும், உங்கள் பள்ளிக் கூடங்கள், கலாசாலைகள், சர்வகலாசாலைகள் இவைகளிலுள்ள பெரியோர்களுக்கும் ஐக்கியத்தையுண்டாக்க அதை ஒரு கருவியாய் உபயோகிக்கலாமென்பது திண்ணம். ராஜ்ய தந்திர விஷயங்களில் முன்னின்று வேலைசெய்யும் உங்கள் பெரியோர்கள் அவர்கள் செய்யும் வேலைகளில் நிதானத்துடனும் கண்டிப்புடனும் சமாதான சட்டத்திற் கடங்கிய வழிகளைக்கொண்டு பரிஹாரங்களைத் தேடிவருகிறார்களல்லவா? அது போலவே உங்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களை நீங்களும் பவ்வியத்துடனும் சாந்தத்துடனும் ஏகோபித்து வெளியிடல் வேண்டும். இது தான்

ஆரியச்சிறுவர்களுடைய உத்கிருஷ்டமான தன்மையானதால், அதையே நீங்களும் கைக்கொள்ளல் வேண்டும். நீங்கள் மரியாதையுடனும் அடக்கத்துடனும் நடந்துகொள்ள வேண்டும். ஊக்கத்துடன் பேசுங்கள்; கெஞ்சாமல் உள்ளதைத் திறந்து பேசுங்கள். ஆனால் வணக்கத்துடனும் மரியாதையுடனும் பேசுங்கள். "எதார்த்தத்தைப் பேசவேண்டும்; ஆனால் சாந்தத்துடன் அதைப்பேசவேண்டும்" என்ற வேத வாக்கியத்தை ஞாபகத்திலிருத்துங்கள்.

இந்தவிதமாய் உங்கள் சங்கத்தை நடத்தி வந்தால், பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும், இந்நாளில் ஏற்படும் மாணவர்களின் பிடிவாத சண்டைகளும், சச்சரவுகளும், வேலை செய்யாமல் நின்றுவிடும் தன்மையும், மற்றுமுள்ள அலங்கதங்களும் இல்லாமல் நிவர்த்திக்கப்படுமென்பதற்கையமில்லை. இந்தச் சங்கத்தைக்கொண்டு உங்களுடைய ஜனனபூமிக்கு நீங்கள் நல்ல ஊழியம் செய்யலாம். நாம் பொதுவாய் நம் தேச புனர்ஜீவ விருத்திக்குச் செய்ய வேண்டிய வேலைக்கு உங்களாலியன்றதை நீங்கள் கட்டாயம் செய்யக்கூடும். வித்தியாசாலைகளுக்குள் ஏற்பட்டுவரும் வேற்றுமைகளையும் சமாதானக்குறைவையும் அசங்கதமான பேட்டா பேட்டியையும் இச்சங்க வேலையால் தடுக்கவும் நிவர்த்தி செய்யவுங் கூடும்.

முன்னாளில் வித்தியாசாலைகளிலும், தேவாலயங்களிலும் பயபக்தி மாணவர்களுக்கிருந்து கொண்டிருந்தது. அதுபோலிப்போதும் ஏற்படவேண்டும். நீங்கள் பற்பல வித்தியாசாலைகளில் கற்றாலும் ஒன்றைச் சேர்ந்தவர்கள். கல்வி விஷயத்தில் பொறாமையாவது, பகைமையாவது பாராட்டல் கூடாது. அவரவர்கள் கற்கும் பள்ளிக்கூடங்களை அவரவர்கள் அபிமானிக்கலாம். ஆனால் மற்றவைகளை இகழ்ந்துரைத்தல்கூடாது.

மேற்சொல்லிய எச்சரிப்புகளை உணர்ந்து இம்மாணவர் சங்கம் நீடூழிகாலம் ஐக்கியத்துடன் வேலை செய்யவேணுமென்று நான் மனதார்ந்து பிரார்த்திக்கிறேன். அப்படிச்செய்வீர்களானால், நீங்கள் ஒற்றுமை யுடனும், சுதேசாபிமானத்துடனும், உங்களுடைய ஜனன பூமிக்குழைத்துப் பிற தேசாசாரங்களால் நிறைந்து இந்த 20 நூற்றாண்டிலுள்ள நம்முடைய புராதன கோட்பாடுகளை இந்தியாவில் புனருற்பத்தி செய்து நிலை நிறுத்தி, பழைய மகிமைகளை யதற் குண்டு பண்ணி, நம் தேசத்தைச் சந்தோஷமுள்ள பிரஜைகளால் நிறைந்ததும் தேவர்களால் அபிமானிக்கப் பட்டதும், தற்போதும் அபிமானித்து வருகின்றதுமான புண்ணிய க்ஷேத்திரமாக மறுபடியு மாக்குவீர்கள்.

உபாத்திமாருக்குப் போதகம்.

உபாத்தி மார்களே! உங்களுக்கும் சில புத்தி மதிகளை எடுத்துச்சொல்ல என் வயதினாலும் அநுபோகத்தினாலும், என்னுடைய குழந்தைகளாக நான் பாவிக்கும் இந்தியச் சிறுவர்களிடம் எனக்குள்ள பட்சத்தினாலும் எனக்குப் பாத்தியமுண்டு. மாணவர்கள் சுயாதீனம் பாராட்டும் தன்மையையும், நகர பரிபாலனம், ராஜ்ய பரிபாலனம் இது சம்பந்தமான விஷயங்களைக் கற்றுக் கொள்ள மாணவர்களுக்குள்ள அவாவையும் உணர்ந்து, உபாத்திமார்கள் அவர்களிடம் நேரிலோ சார்பிலோ குரோதம் பாராட்டுகிற வழக்க மிருப்பதை நான் மனவருத்தத்துடன் காண்கிறேன். இதே விதமாய் பரீக்ஷைகளில் ஏற்படும் ஜயாபஜெயங்களிலும் விகாரமான அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த வேற்றுமைக்கும் அதிலிருந்து உற்பவிக்கும் கடுமையான சம்பவங்களுக்கும் மாணவர்களையே முற்றிலும் குற்றத்துக் குள்ளாக்கு

வது வழக்கமாயிருந்து வருகிறது. இப்படிச் செய்வதால்தான் தாங்கள் கற்பிக்கும் விதங்களையும், தாங்களிருக்கும் பள்ளிக்கூடங்களையுமே கண்டனஞ் செய்து பேசுவதாக விருக்கிறதென்பதை நீங்கள் மறக்கக்கூடாது.

இன்று நீங்கள் போதிக்கும் மாணவர்களே நாளைத் தவறி நடந்தால் அது உங்களுடைய போதனை பேதத்திலிருந்து ஏற்பட்டதாகவே நீங்கள் நினைக்கவேண்டும். நாம் தவறுதல் செய்தாலதை பிறர்பேரில் சாட்டுவது மனித சுபாவமே. தங்கள் குற்றத்தைத் தாங்களே நினைத்துப் பார்த்து நடப்பவர்கள் இவ்வுலகில் வெகு அரிது. உபாத்திமார் தொழிலை மிக்க உயர்ந்ததென்றே நான் நினைக்கிறபடியால் நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுவ தென்ன வென்றால், அசங்கதமான சம்பவங்கள் நேர்ந்தா லதற்கு மாணவர்களைக் குற்றம் சாட்டாமலிருக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவர்களுக்கு உபாத்திமாருடைய தாடஸ்திக மன நிலைமை நாணய மிவைகளிலுள்ள நம்புதலை அவர்களிழந்து விடுவார்கள். இந்திய மாணவர்கள் சுபாவத்தில் கௌரவமுடையவர்கள். அது அவர்களுக்குப் பரம்பரையாயிருக்கும் குணநிசயம். தங்கள் மதத்தில் பிடிப்புள்ளவர்கள், கூர்மையான உணர்ச்சி யுள்ளவர்கள். அவர்களுடைய அவாக்களையும் கோரிக்கைகளையும் உபாத்திமார்கள் தெரிந்துகொள்ள முடியாது. உபாத்திமார்கள் அந்நிய ஜாதியார்களாய் இருந்தால், இந்தத் தோற்றம் அவர்களுக்குண்டாவ தரிது. இந்திய மாணவர் பரோபகார சிந்தையும் சுதேசாபிமானமு முள்ளவர்கள். தங்கள் ஜனன பூமிக்குழைத்தல் அவர்களுடைய முக்கிய குணம்சம். ஆகையால் தங்களுபாத்திமார்களும் இந்த உயர்ந்த கருத்துகளைப் பாராட்டுபவர்களென்றே அவர்கள் முதல் எடுப்பில் நினைக்கின்றனர். ஆனால் அனுபவத்தில், தங்கள் குருக்கள்மாரிடமிந்த

அம்சங்களில்லையென்று அவர்கள் கண்டுபிடித்தால் அவர்களிடம் வைத்திருந்த மரியாதையை இழப்பது மெத்த விசனிக்கத் தக்கதே. இவ்வித ஞானபேதத்துக்கு உபாத்திமாரே ஜவாப்தாரி யென்று நான் நினைக்கிறேன். ஆகையால் தங்களிடத்தில் பக்ஷ முண்டாகி நிலைநிற்கும் வண்ணமாய் முன்னாள் குருக்கள்போல் இன்னாள் உபாத்திமாரும் மாணவர்களைப் பக்ஷம், கருணை, அன்பு முதலியவைகளுடன் நடத்த லவசியம்.

உபாத்திமார்களே! உங்களுடைய உயர்ந்த தொழிலுக்குத் தக்க குணங்கள் உங்களிடத்திலில்லை. ஆகையால் பாரத வர்ஷத்தில் ஆரிய சிறுவர்களுக்கு அவர்கள் குருக்களிட மிருந்த பயபக்தியென்ற நற்குணங்களை இந்நாள் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்க உங்களுக்குப் பாத்தியமில்லை. குருசிட முறைமைகளைப்பற்றி மஹாத்மா மனுவின் தர்ம சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடி நீங்கள் அநுஷ்டித்து வந்தால் மாணவர்களும் அதையே அனுஷ்டித்து உங்களிடத்தில் பயபக்தியுள்ளவர்களாயிருப்பார்கள். முற்கால குருக்கள்போல் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்று நீங்கள் மாணவர்களை நினைத்து அபிமானித்து நடத்திவந்தால் மாணவர்களும், அந்நாள் சிடர்போல், குருவிடத்திலும், குருபத்தினியிடத்திலும் தந்தைதாயென்ற அன்பு பாராட்டி ஊழியஞ்செய்து புத்தியுடன் நடந்து வருவார்கள். ஆகையால் நான் உங்களை மன்றாடிக்கொள்ளுவதென்ன வென்றால், ஆங்கிலேய உபாத்திமார்களில் சிரேஷ்டமானவரும் என்னுடைய ஸ்நேகிதரும் சகோதரருமான ஜார்ஜ் எஸ். அரண்டேல் துரையைப்போல் நீங்களும் உங்கள் மாணவரிடம் அன்புபாராட்டியிருந்துவரவேணுமென்று நானுங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவர் மாணவரிடம் அன்பு பாராட்டி அவர்களைப் பழைய முறை

மைப்படி நடத்தி வருவதால் அவர் காசியிலிருந்தாலும். சென்னையிலிருந்தாலும் கூட்டங் கூட்டமாய் மாணவர் அவரைச் சுற்றிப் பின்தொடர்ந்து பக்தியுடன் நடக்கிறார்கள். அவ்வண்ணம் இந்நாள் உபாத்திமார்களாகிய நீங்களும் நடத்தல் வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியச் சிறுவர்கள் ஆயத்த மாகவேண்டும்.

என் சிறு சிநேகிதர்களே! மாணவர் தயாராக விருந்தால் தக்க குரு தரிசன மாவாரென்ற பழைய வாக்கியப்படி நீங்கள் செய்தல் வேண்டும். நீங்கள் மனிதர்களாகவும் நாளைக்கு வரப்போகிற நகர வாஸிகளாகவும் அநுஷ்டானத்தில் ஆரியர்களாகவு மிருக்க வேண்டியதற்கு அவசியமான சில விஷயங்களை இப்போது உங்களுக்கெடுத் துரைப்பேன். தன்னை மறந்து பிறருக்குபகரிக்கும் குண முங்களிடத்திலிருக்கிறது. உங்கள் ஜனன பூமியைப் போற்றித் தொழ நீங்கள் ஆசைப்படுகிறீர்க ளல்லவா? ஆகையால் சுதேசம் என்ற ஆலயத்திற்கு வெறுங் கையுடனும் வெறும் புத்தியுடனும் வெறும் மனதுடனும் நீங்கள் போகக் கூடாது. சுத்தமான எண்ணங்களென்கிற சுவலிக்கும் நவரத்தினங்களால் நிரம்பிய சுரங்கம்போல் உங்களிருதய மிருத்தல் வேண்டும். வலிமை பெற்ற வயிரங்கள், அன்பு பெற்ற கெம்புகள், ஆழ்ந்த காருண்ணியம் பெற்ற பச்சைகள், இதுகளா லுங்கள் இருதயச் சுரங்கம் நிரம்பி யிருத்தல் வேண்டும். அறிவு, ஞானம், சமஞ்சஸமான தார்கிகம், பக்தி, சுத்தம், தன்னை மறக்குதல் முதலிய தழைகளாலும் உயர்ந்த புஷ்பங்களாலும் நீங்கள் இந்திய மாதாவை அர்ச்சித்தல் வேண்டும். இந்த அம்சங்களெல்லாம் உங்களிடத்தில் ஸ்திரமாய்க் குடி கொண்டிருந்தால், நீங்களாசைப்படும் உயர்பதவிக்கு நீங்கள் தயாராகி விடுவீர்கள்.

ஆகையால் உங்கள் காலத்தை வீணாய்க் கழிக்காதேயுங்கள். இந்தியாவிலுள்ள உங்கள் பிரமுகர்கள் உங்களை சுதேச பராக்கிரம சாலிகளாகவும், வீரர்களாகவும், இந்து தேசாபி மானிகளாகவும் உலகத்தையும் உலகத்தாரையும் நேசிக்கும் கருணாநிதிகளாகவும் முன்வர எதிர்பார்த்திருப்பதால், அதற்குத் தக்கவண்ணம் நீங்கள் பழகிக்கொள்ள இப்போது நான் சொல்லும் சில விஷயங்களை நீங்கள் கவனித்து நடத்தல் வேண்டும்.

பிரம்மசரியம்.

நீங்கள் பிரம்மசரியத்தை அனுஷ்டித்து வரவேண்டும். இது தான் முந்நாளில் சீடர்கள் அனுஷ்டித்துவந்த முக்கிய விரதம். ஆனால் நானிதைப் போதிப்பது உங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்காது. எப்படி நீங்கள் நினைத்தாலும் என்கடமையை நான் நிறைவேற்றல் வேண்டுமல்லவா? நவீன சாஸ்திரங்கள் சொல்லுவதையே நம்முடைய மனுவும் அவர் சாஸ்திரத்தில் எழுதியிருக்கிறார். மாணவருக்குக் கடுமையான பிரம்மசரியமே அவசியமென்றெழுதியிருக்கிறார். தப்பான பழக்கமும் க்ஷீணிக்கும் கோட்பாடுகளும், சிறுவர்களுக்கு வாலிபத்தில் விவாகத்தையும், பெண்களுக்கு சிசு விவாகமென்ற குற்றத்தைச் செய்தலையும், இத்தேசத்தில் பரவச் செய்திருக்கிறது. வெட்கமானதும் நசிக்கச் செய்யும் இந்த குரூர வழக்கங்களைப்பற்றி நான் எவ்வளவு கண்டனஞ்செய்து பேசினாலும் தகும். பிரம்மசரியம் தவறி சிறுவயதிலேயே கிருஹஸ்தாசிரமத்தை அவர்கள் நாடி பயின்று வருவதால், நம் சிறுவர்கள் தேகமும் க்ஷீணித்து, மனதும் புத்தியும் சீக்கிரம் தளர்ச்சியடைந்து பிரயோஜன மற்றுப் போகிறது. இந்தக் கெட்ட வழக்கத்தினால், நம் சிறுவர்கள் அதி வாலிபத்தி

லேயே, குடும்பிகளாகி, குடும்ப ஸம்ரக்ஷிணை செய்ய வழி தேடவேண்டியது அவசியமாகி விடுகிறது. இதினால் விளையும் தீங்கை அளவிட முடியாது. இதற்கு நம்முடைய இந் நாளிலிருக்கும் வித்தியா இலாகா கோட்பாடுகளே ஜவாப்தாரியென சிலர் நினைத்துக் கண்டிப்பது வாஸ்தவமே. இக்கோட்பாடுகளை அடியோடு மாற்றி, புதிதாய் ஒரு கோட்பாட்டை இயற்றவேண்டிய தவசியமாயினும், இது நசிக்கும் தன்மைக்கு, நாமும் காரணமாயிருந்து வருகிறோ மென்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்தல்வேண்டும். நீங்கள் உங்களுடைய பரீக்ஷைகளுக்குப் படித்துக்கொண்டிருக்கும்போது, உங்கள் குழந்தைகளின் அழுகைச் சங்கீதம் உங்கள் காதில்பட நீங்கள் காலக்ஷேபம் செய்யவேண்டியதைப்பற்றியும், அதற்காகப் பரீக்ஷைகளில் தேர்ச்சியடைந்து முன் வரவேண்டியதைப்பற்றியும் சிந்திக்கும்படி நேரிடுகிறது. இந்த அவாவைப் பரிபாலிக்கும் வண்ணமே கவர்ன்மெண்டு வித்தியா இலாகா மாமூலும் ஏற்பட்டிருப்பதால், அதை மட்டும் இகழாமல் நம்முடைய கோட்பாட்டையும் நாம் ரத்து செய்தல் வேண்டும். சிசு விவாகங்களுக்கும் பாலிய விவாகங்களுக்கும் அவைகளிலிருந்து உற்பவிக்கும் துக்ககரமான சம்பவங்களும் உங்கள் தாய்தந்தையரும் பாதுகாப்போரும் சொல்லுவதை நீங்கள் மீறி நடக்க முடியாததினால் இவைகளுண்டாகலாம். ஆனால் மாணவர்களாயிருக்கும் போதே நீங்கள் பிரம்மசரியத்தை திட்டமாய் அனுஷ்டித்து வந்தால், நீங்கள் தேக வலிமையுள்ளவர்களாவீர்களென்பதற்கையமில்லை.

வலிவுள்ள சரீரம்.

இதிலிருந்து சரீர வலிமை யடைவதைப்பற்றிக் கொஞ்சம் பிரஸ்தாபிக்கவேண்டியதா யிருக்கிறது. மனவலிமைக்குத்

தேகவலிமையே ஆதார மாகையால் உங்கள் தேகங்களை நீங்கள் சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டும். பார்வைக்கு சுசிகரமாயிருத்தல் வேண்டும். இந்தியச் சிறுவன் சுபாவத்தில் சுத்த முள்ளவனே. ஆனால் சில சமயங்களில் கவன மின்மையாலும், கெட்ட பழக்கத்தாலும் இதில் தவறிப்போகிறான். ஆகையால், மனுஸ்மிருதியில் சரீரசுத்தம், உடை இவைகளைப்பற்றிச் சொல்லியிருப்பதைப்பற்றி நான் மறுபடியும் உங்களுக்கு ஞாபகப்படுத்திச் சொல்லுவதவசிய மாகிறது. சுசிகரமற்றிருப்பதற்கு நீங்கள் மட்டும் காரணமல்ல. உங்கள் பெரியோர்களும் அதற்கு காரணமே. உங்கள் உடையைப் பற்றிக் கொஞ்சமெடுத்துக் காட்டுகிறேன். நீங்கள் ஐரோப்பிய அரைக் கோட்டுதரித்து அம்மாதிரி உடுத்துவது முற்றிலும் தகாத விஷயம். உள்ளத்தைக் காட்ட உடை யொரு முக்கிய குறி யாதலால் அதை நீங்கள் சாஸ்திரப்படி அனுஷ்டித்தல் வேண்டும். உங்கள் ஜாதி ஆசாரப்படி நீங்கள் உடுத்திக்கொண்டால் தான், நீங்கள் உங்கள் ஜாதியை அபிமானிப்பவர்களாவீர்கள். சுதேசிய தளவாடங்களால் செய்யப்பட்ட வேஷ்டியையும் சொக்காயையும் உடுத்திக்கொண்டால் அது உங்களுக்கு அழகையும் சௌக்கியத்தையும் கொடுக்கும். நம்முடைய இந்தியச் சிறுவர்களுடைய தேகம் நன்றாய் அமைக்கப்பட்டுள்ள அழகிய தேகங்கள் குற்றமுள்ள உடை தரிப்பதால் அது விகாரமாய் தோன்றுகிறது. ஈருருவப் பிறப்புகளைப் போன்றபாதி ஐரோப்பிய, பாதி இந்திய உடைகளை நீங்கள் திக்காரஞ்செய்து உங்கள் சுதேச உடையைத் தரித்தால்தான் நீங்கள் வாஸ்தவ சுதேசாபிமானிகளாவீர்கள். ஆடம்பரமற்ற ஸோமன், சொக்கா, இவைகளை வெண்மையாய் தரித்துப் பாதரட்சைகளைப் போட்டுக்கொண்டு, தலைமயிரை லட்சணமாய்ச் சீவிக்கொண்டு சுசிகரமாய் நீங்களிருந்து வந்தால் உங்களைஎல்லாரும்

பார்த்து மகிழ்ந்து புகழ்வார்கள். உண்மையுள்ள சுதேசிகளா யிருப்பது கஷ்டமல்ல. நீங்கள் அப்படிக் காதக்கூடாதா? எளிதில் ஆகலாம்.

சுதேசிய தேகப்பயிற்சி.

வர வர இந்திய விளையாட்டுகள் இந்திய தேகப்பயிற்சி முறைமைகளையும் மறக்குந் தன்மை அதிகரித்து வருவது துக்கிக்கத் தக்கதே. கிரிக்கட்டு முதலிய ஐரோப்பிய விளையாட்டுகள் மனதையும் தேகத்தையும் பயிற்சிக்கக் கூடியவைக ளானாலும், இந்திய குஸ்தி, தண்டா, நீச்சு முதலியன இத்தேச தேகப்பயிற்சி முறைமைகளாதலாலும் அவைகளை ஆண் பெண் எல்லோரும் அப்பியஸிக்க அவரவர்களும், கவர்ன்மெண்டாரும் சிரத்தையெடுத்து வேலை செய்து வர வேண்டுமாதலால் அவைகளைப்பற்றி நீங்க ளெல்லோரும் கலந்து பேசி இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கும் பொருட்டு இச்சமயம் அவைகளைப் பற்றி நான் எடுத்துரைத்தேன்.

வாலிபச் சாரணர்கள்.

இவ் விஷயத்தையும் இது சம்பந்தமான விதிகளை அனுஷ்டித்து வரும்படிக்கும் நம் சிறுவர்களுக்குப் பழக்க முண்டாக்க நடந்து வரும் முயற்சிகளைப் பற்றி நான் சந்தோஷிக்கிறேன். இம்மாதிரி வாலிப ராணுவத் தூதர்களாகப் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலுமுள்ள மாணவர்களைத் தயார் செய்தல் அவசிய மென்பதை நீங்கள் உங்கள் மூத்தோர்களுக்கு வற்புறுத்தல் வேண்டும். ஆனால் கேட்டாலன்றி ஒரு பலன் நமக்குக் கிடைக்காதாகையால், நீங்களிதைப்பற்றி வற்புறுத்திக் கேட்க வேண்டும். உங்களில் சிலர் வாலண்டியர்களாகப் பழகி வருவதும் எனக்கு உற்சாகத்தைத் தருகிறது. இவ்வித பழக்கங்களால் தேசம் நிமிர்ந்து ஓங்கும். அதனால் உங்கள்

மனதும் நிமிர்ந்து வேலை செய்யு மாதலால் நீங்களிதற்கு முயற்சி செய்தல் வேண்டும். உங்களுடைய காலை மாலை சந்தியா வந்தனானுஷ்டானமும் நம்முடைய மகம்மதிய ஸ்நேகிதர்களுக்குள்ள பிரார்த்தனைகளையும் குறிப்பிட்ட காலங்களில் செய்து வருவது தேகத்தைச்சரியான வழியில் பழக்கி,மனதையும் சரியான வழியில் நிலை நிறுத்துகிறது. பழைய பழக்கங்கள் இவ்விஷயத்தில் புதிதைக்காட்டிலும் அழகாயும் கௌரவமாயுமிருக்க வில்லையா? புராதன நமஸ்காரம், நவீன ஸலாம் செய்வதைக் காட்டிலும் அழகாயும் நன்றாயு மில்லையா? இப்படி சுபாவீகங்களைப் பயிற்சி செய்து நவீனங்களைத் திக்கழித்து வந்தால் உங்கள் தேகப் பயிற்சியும் மனோவலிமையும் சுதேசாபிமானமும் அதிகரிக்கு மென்பதற்குச் சந்தேகமே யில்லை.

நல் லொழுக்கம்.

நல்லொழுக்க மின்மைக்காக மாணவர்களைக் குற்றஞ் சாட்டுவது தகாது. இவ்விஷயத்தில் குற்றம் உபாத்திமார்களது—பெற்றோர்களது—பெரியோர்களது. பெரியோர்களைப் பக்தியுடன் மதிக்கவும், உங்கள் சமத்துவர்களைப் பக்ஷத்துடன் நடத்தவும் அவர்களுக் குதவவும், உங்களுக்கு இளைஞரிடத்தில் தயவாயும் பச்சாதபத்துடன் எல்லாரிடத்திலும் பொறுமை பாராட்டவும் உங்களை, உங்கள் பெரியோர்களும் உபாத்திமார்களும் பழக்குதல் வேண்டும். நீங்களும் பழகிக்கொள்ள வேண்டும். கெட்ட வார்த்தை சொல்லுவதையும் கெட்ட எண்ணங் கொள்ளுவதையும் வெறுத்தல் வேண்டும். அப்படிச் செய்தால் நீங்கள் நிஜ ஆரியராவீர்கள். பிறர் உங்களை வைதாலும் நீங்கள் சகித்திருத்தல் வேண்டும். மற்றவர்கள் சொல்லுவதைக் கவனிக்காமல், நீங்கள் உச்சரிப்பதைக் கோபமின்றி, சாந்தத்துடனும் ஸ்பஷ்டமாயும் எடுத்துரைத்தல் வேண்டும்.

பொறுமை பாராட்டல்.

பிராமணர், அப்பிராமணர், இந்துக்கள் மகமதியர்கள், மதிராஸிகள் தஞ்சாவூர் வாசிகள் செ.நலுங்கு தேசத்தாரென்ற ஜாதி வெருப்பு வித்தியாஸமில்லாமல் சமத்துவம் பாராட்டினால்தான் உங்களுடைய விரோதிகளை நீங்கள் வெல்லக் கூடும். போலிதேசாபிமானத்தினாலேயே இப்போது நடக்கும் குரூர யுத்தம் உண்டாயிற்று. தேசாபிமானத்துடன் சர்வ ஜீவ சகோதரத்துவம் பாராட்டினாலொழிய உங்களுடைய இந்திய மாதாவுக்கும் நீங்கள் உண்மையில் பாடுபவர்களாக மாட்டீர்கள். கியாதி பெற்ற ஜாதிக் காரர்களாகிய பிரான்சுக் காரர், அமெரிக்கர், ஆங்கிலேயர், ஜப்பானியர் இவர்களையும் ஜெர்மனியர்களையும் பார்த்து அவர்களுக்குள்ள நல்ல குணங் களைக்கவருங்கள். க்ஷமை பாராட்டப் பழக்கப்பட்டால் ஞானப் பயிற்சி விசாலித்து இந்த சுய ஆட்சியை அடையவும் அதை அடைந்த பின்னர் அதைத் தக்கபடி நடத்தவும் நீங்கள் அரு கராவீர்கள்.

முடிவுரை.

நான் வெகுநாழி பேசியாயிற்று. இப்போது முடிக்கி றேன். நாம் தேவர்களுடைய ஆண் பெண் நாமங்களை நம் முடைய வர்களுக்கு யிடுவது நற்பழக்கமே. பெயரிடுவதை யொத்து ஸ்ரீராமனுடைய பராக்கிரமத்தையும், ஸ்ரீ கிருஷ்ண னுடைய ஆண்மையையும் அறிவையும், மஹாதேவருடைய பரி த்தியாகத்தையும், ஹனுமானுடைய பரபரப்பையும், ஸ்ரீமன் நாராயணனுடைய கருணையையும், ஸரஸ்வதி, லக்ஷ்மி, ஸீதா பார்வதி இத் தேவிகளுடைய பாதிவிருத் தியத்தையும், ஞான த்தையும், நம்முடைய சிறுவர் சிறுமிகள் பாராட்டி அநுஷ்

டித்து வந்தால், உலகில் எல்லாவற்றிலும் உங்கள் இந்தியா வைச் சிறந்ததாயும், மற்றக் கண்டங் களுக்குபதேசியாயும் செய்து நீங்களும் மாட்சிமை யடைவீரென்பதில் சந்தேகமே யில்லை. ஓம்: சாந்தி!

தேச சமஸ்தானங்களும் ஹோம் ரூலும்.

டாக்டர். ஸர். சுப்பிரமணிய ஐயர் பின்வருமாறு எழுதுகிறார்:—

நமது மாகாணத்திற்கு அடுத்தாற்போலுள்ள தேச சமஸ்தான மொன்றில் ஹோம்ரூல் லீக் சபையொன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன், மேற்படி சபையின் அங்கத்தினரொருவர் தேச சமஸ்தானத்துக்குச் சென்றதாகவும், ஆயினும் அதற்கப்பால் ஒன்றும் நடக்கவில்லை என்பதாகவும், எனக்குத் தெரியவந்தது. அவ்விதம் அதற்கப்பால் ஒன்றும் நடக்காமலிருந்தது சரிதான். ஏனென்றால், பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியேயுள்ள சமஸ்தானங்களில் அச்சபையை ஏற்படுத்தும்படி மேற்படி சபையில் விதியில்லை.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டவர்களுக்கு ஹோம்ரூல் கிடைக்க வேண்டுமென்பதே ஹோம்ரூல் லீக் சபையின் நோக்கமாகும். தேச சமஸ்தானப்பிரஜைகளின் காரியங்களில் நாம் தலையிடின், அது அதிகப்பிரசங்கித்தனமாகுமென்று நான் சொல்லவும் வேண்டுமோ?

தேச சமஸ்தானங்களைப்பற்றிய மேலதிகாரமானது பிரிட்டிஷாருக்கு உட்பட்டிருப்பினும், தேச சமஸ்தானங்களோ பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ளவர்களுக்கு ஒருவகையில் அன்னிய நாடுகள் போலாகும். எப்படி யென்றால், அந்த சமஸ்தானங்களிலே பிரத்தியேகமான சட்டதிட்டங்கள் இருக்கின்றன; அங்குள்ள அதிகாரிகளோ அங்குள்ள பிரஜைகளின் நன்மைக்கேற்றவாறு ஆட்சி நடத்துகின்றனர். ஆகவே, ஹோம்ரூல் லீக் சபையின் அங்கத்தினர் அனைவரும், நமது சபையின் விதிகளுக்கு ஏற்றவாறே ஊழியம் புரிந்து வர வேண்டும்.

இவ்வாறு நான் சொல்லுவதனால், தேச சமஸ்தானங்களின் எல்லைக்குள் வசித்து வரும் நமது நண்பர்கள் நமது சபையின் நோக்கங்களை ஆதரிக்கவும், சித்திபெறச் செய்யவும் ஊழியஞ்செய்யக் கூடாதென்றாவது, ஊழியஞ்செய்ய இடமில்லை யென்றாவது, நான் சொல்லவரவில்லை. உதாரணமாக, பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியேயுள்ள இடங்களில் வசிக்குமொருவர் ஹோம் ரூல் லீக் சபையில் சேர்ந்துழைக்கக் கூடாதென்று சட்டதிட்டங்களால் தடுக்கப்படாதிருக்கும் வரையில், மேற்படி சபையில் அவர் சேர்ந்து உழைப்பதில் தடை கிடையாது. எனவே, தேச சமஸ்தானங்களில் வசித்தோ தேச சமஸ்தானங்களின் பிரஜைகளாகவோ உள்ள பலர் மேற்படி சபையில் அங்கத்தினராய் இருந்து சிரத்தையும் செல்வாக்கும் காட்டி உழைத்து வருகிறார்கள்.

ஜன நாயகம் என்ற உணர்ச்சியானது உலகமெங்கும் பரவி வருகிறது. அவ்வுணர்ச்சி யென்றும் அலேயோ பிரிட்டிஷ் இந்தியா, தேச சமஸ்தானம் ஆக இந்தியா வெங்கும் வீசத்தான் செய்யும். அந்த எழுச்சியிலிருந்து எந்த சமஸ்தானமும் தப்பிவிட முடியாது. இதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. அவ்விஷயமாய் திவான் ரங்காச்சார்லுவைக் குறிப்பிட வேண்டும். எப்படி யென்றால், அவர் தமது தீர்க்காலோசனைக்கு ஏற்றவாறு, 18-வது நூற்றாண்டிலேயே மைசூரில் ஜனாபிமானமுள்ள ஆட்சிக்கு அஸ்திவாரம் போடலானார். அந்த அடிப்படையைக் கொண்டு மேற்படி ஜனாபிமான ஆட்சியென்ற கட்டிடத்தை விசால திருஷ்டியுள்ள மகாராஜாவின் அனுமதி பெற்ற அச் சமஸ்தான முதன் மந்திரியானவர் சலியா உழைப்புடன் பலப்படுத்தி வருகிறார். ஜனாபிமான ஆட்சிக்குரிய சாதனங்களைத் தேச மன்னர்கள் தேடிக் கொடுப்பின், அதைக் கண்டு அவர்களிடம் ஜனங்களுக்கு மிக்க நன்றியறிவு ஏற்பட்டு வளரும். அவ்விதம் சாதனம் செய்து கொடுப்பதாயின், அதிகாரத்தையும் செல்வத்தையும் விட்டுக் கொடுக்க வேண்டு மென்பது ஸகஜமே. சமூகத்தின் விருப்பத்திற்கிணங்க அதிகாரத்தையும் செல்வத்தையும் பரித்தியாகம் செய்து விட்டுக் கொடுக்க இஷ்ட மில்லாது போயின், குடும்பத் தலைவர்களாகட்டும், மன்னர்களாகட்டும், சக்கரவர்த்திகளாகட்டும், சுயேச்சையாகக் கட்டின்றி நடப்பவர்களாவார்கள்.

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குத் தலைமை ஸ்தானத்தை ராஜ சக்கிரவர்த்தியே வகிப்பவராய் இருந்தபோதிலும், ஜனங்களுக்கோர் தக்க உரிமைகளும் சுதந்திரங்களும் இருக்குமாறு ஜவாப்தாரியான ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. ஏறக்குறைய ஏகதேச தன்னரசாட்சிக்குப் பதிலாக அத்தகைய கட்டுக்கடங்கிய ஜவாப்தாரியான ஆட்சியை அமைத்துவைக்க, இந்

திய மன்னர் தயாராய் இருப்பின், தாய் பூமிக்குச் சுதந்தரத்தைக் கொடுக்க அவர்கள் வழி தேடுபவ ராவார். தேசாபிமானத்தைக் காட்டுவதற்கு அதைவிடச் சிறந்த வழி வேறு எதுவு மில்லை. மைசூரில் ஜனப் பிரதிநிதி சபையை ஏற்படுத்தி உண்மையில் அச் சபைக்கு அதிகாரம் கொடுத்து, சுய ஆட்சியில் ஜனங்களைப் பழக்கும்பொழுது, பிரிட்டிஷாரும் தங்களது பிரிட்டிஷ் இந்தியாவில் அவ்விதம் ஆட்சியை ஏற்படுத்தும்படியான அவசியம் உண்டாகிறது.

தேச சமஸ்தானங்களின் பிரசினைகளைப் பற்றி விஞ்ஞாபன ரூபமாக மைசூரில் பிரசுரமாகும் கர்ணடகா என்ற பத்திரிகையில் வெளி வந்துள்ள வியாசங்களை நான் இங்கே சந்தோஷத்துடன் குறிப்பிட வேண்டும். அவ் விஞ்ஞாபன வியாசங்களை எழுதியவர் மிஸ்டர் குண்டப்பா என்பவர். அவ் வியாசங்களைத் திரட்டிச் சிறு நூலாக வெளிப்படுத்துதல் மிகவும் பொருத்தமாகும். ஏனென்றால், இந்தியாவின் ராஜீயத் திருத்த சம்பந்தமாய் அருமையான விஷயங்களை நன்கு சொல்லப்பட்டிருக்கின்றன. 5-வது விஞ்ஞாபன வியாசத்தில் கண்டுள்ள விஷயமொன்றை இங்கே குறிப்பிடவேண்டும்.

அது என்னவென்றால், பிரிட்டிஷ் இந்தியாவைத் தேச சமஸ்தானங்களைப் போலச் சிறுசிறு பாகங்களாகப் பிரித்து வைத்து, ஆட்சியை நடத்த வேண்டுமென்பதாகும். அவ் விதம் பிரிட்டிஷ் இந்தியாவைச் சிறு சிறு பாகங்களாகப் பிரித்துவைத்து ஆட்சியை நடத்திவந்தால், தேச சமஸ்தானங்களிலே தேச மன்னர்களால் ஒருபக்கம் ஆட்சி நடந்து வரும்; மற்றொரு பக்கத்திலோ ஹோம்ரூல் பெற்ற பிரிட்டிஷ் இந்தியாவின் பாகங்களில் ஆட்சி நடந்துவரும். அவ்விதம் இரண்டு விதமான ஆட்சி நடந்து வருகையில், சமஸ்தானத்தின் ஆட்சியைவிடச் சிறப்பான ஆட்சி இருக்கவேண்டு மெ

ன்று பிரிட்டிஷ் பாகங்களிலும், பிரிட்டிஷ் பாகங்களில், நடந்து வரும் ஆட்சியைவிட சிறப்பான ஆட்சி நடக்கவேண்டுமென்று சமஸ்தானங்களிலும், போட்டி யுண்டாகி, இருவகையாட்சியும் சிறந்து வலிமை கொள்ளு மென்பதே குறிப்பிடத் தக்கதாகும்.

அவ்வாறு ஏற்படுமாயின், முடிவில் அந்த ஏற்பாட்டினல் தேச சமஸ்தானப் பிரஜைகளுக்கு அதிக நன்மை ஏற்படும். எப்படி யெனில், தேச சமஸ்தானங்கள் பலவற்றில் ஏகதேச ஆட்சி இச்சமயம் நடந்துவருகையில், அப்பொழுது, ஜனங்களின் விருப்பத்தையும் அங்கிகாரத்தையும் அனுசரித்தே சமஸ்தானங்களில் ஆட்சி ஏற்படும்படி யாகும்.

கடைசியாக தேச சமஸ்தானங்களி லிருக்கும் ஜனங்களுக்கும் "ஹோம்ரூல்" வேண்டு மென்று கிளர்ச்சி செய்ய நமக்குப் பாத்திய மில்லாம லிருந்தபோதிலும், நாம் பாடுபடுவது அவர்களுக்கும் பயன் தராமல் போகாது. தேச ஆட்சியானது ஜனங்களின் நன்மைக்காக ஜனங்களாலேயே நடத்தப்பட வேண்டுமென்பதை ஜனநாயக உணர்ச்சியில் ஈடுபட்டுள்ள எவரும் மதிப்பார். அதுவே இந்திய புத்திரர்களின் லட்சியமாகும். ஆகவே மகா புருஷராகிய தாதாபாய் நௌரோஜி செய்திருக்கும் உபதேசத்தை யாவரும் மறக்கலாகாது. "சுய ஆட்சி அடையும் வரையில் கிளர்ச்சி செய், கிளர்ச்சி செய்" என்றே அவர் உபதேசித்திருக்கிறார்; அவர் மாத்திரமன்று. அகாலத்திலும், அதி சீக்கிரத்திலும் காலஞ் சென்ற மிஸ்டர் குலாம் ஹுஸேனும் தாம் ஆவிதுறக்குந் தருணத்தில், "தீவிரத்துடன் கிளர்ச்சி செய்யுங்கள்; சடுதியில் வெற்றி பெறலாம்" என்று தீர்க்க தரிசியைப் போல் உரைத்திருக்கிறார்.

விசேஷ காங்கிரஸும், சீர்திருத்தப் பிரேரணைகளும்.

ஸர். சுப்பிரமணி அய்யர் பின் வருமாறு பத்திரிகைகளுக்கு எழுதுகிறார்.

இந்தியாவின் ராஜாங்கத் திருத்தத்தைப் பற்றிய பிரேரணைகள் வெளியான பிறகு காங்கிரஸ் மகாசபையின் விசேஷக் கூட்ட மொன்று நடக்க வேண்டு மென்றும், அக் கூட்டமானது அலகாபாத் அல்லது லட்சுமண புரியில் நடக்கவேண்டு மென்றும் எல்லா இந்தியா காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்திருக்கிறது. விசேஷக் கூட்ட மொன்று கூட வேண்டுமா என்பதே பிரேரணைகள் வெளியிடப்படும் காலத்தைப் பொருந்தியிருக்கும்; பிரேரணைகளைத் தேசத்தார் கவனித்துப் பார்த்து ஒரு தீர்மானத்துக்கு வருகிற தற்குப் போதுமான சவகாசம் வேண்டி யிருக்கும். டிஸம்பர் மாதத்தில் காங்கிரஸ் சாதாரணமாகக் கூடுவது வழக்கம்; அதற்குச் சிறிது காலம் முன்னுடியே பிரேரணைகள் வெளியிடப்படுமாயின், அவைகளைப் பற்றி யோசனைசெய்து வழக்கமான காங்கிரஸை நடத்தத் தான் சவகாச மிருக்கும். ஆனால் இப்பொழுது எதிர்பார்க்கப்படுகிறபடி இம்மாதக் கடைசியில் பிரேரணைகள் வெளியிடப்படுமாயின், விசேஷ காங்கிரஸ் கூடவேண்டியது தான். எல்லா இந்தியா காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்த இரண்டிடங்களில் ஒன்றில் தான் கூடவேண்டியிருக்கும். அந்த இரண்டிடங்களில் காங்கிரஸ் கூடாமல் செய்து ஐக்கிய மாகாணத்

துக்கு வெளியில் எங்கேயாவது கூடும்படி செய்ய சிலர் முயற்சி செய்கிறதாக நம்மில் சிலர் நினைக்கிறார்கள்; பிரேரணைகளைப்பற்றி தேசத்தின் கருத்தைத் தைரியமாகவும் பயப்படாமலும் எடுத்துச் சொல்லக்கூடிய மிஸ்டர் திலகர் விசேஷ காங்கிரஸின் அக்கிராசனத்தை வகிக்க முடியாமல் செய்ய வேண்டுமென்பதே அவர்களுடைய உத்தேசமென்று மேற் குறிப்பிட்டபடி நினைக்கிறவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். கவர்ன்மெண்டார் செய்யப்போகிற பிரேரணைகள் எவ்வளவு போதாதவைகளா யிருந்தாலும், அவைகளை ஜனங்கள் ஒப்புக்கொள்வது போல் காட்டிவிட ஒரு சிலர் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதால், மேலே சொன்னபடி அவர்கள் யோசனை செய்கிறதாக நினைக்க வேண்டியிருக்கிறது. இந்தக் கும்பல் ஒன்று இருக்கிறதென்பதும், மௌனமாகவும் ஓயாமலும் இருக்கும் பல வேலை செய்து வருகிற தென்பதும் சென்றஜூன் மாதம் 16-ந் தேதி யன்று மிஸஸ் பெஸண்டு முதலியவர்கள் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டதற்கு முன்பும் பின்பும் நடந்திருக்கிற விஷயங்களிலிருந்து விளங்கும். மிஸ்டர் திலகருடைய ராஜீய மனோபாவம் இந்த கும்பலுக்குப் பிடிக்கிற தில்லை. ஆகையால் தேசத்தின் பிற்கால கதியை நிர்ணயிக்கப் போகிற சீர்திருத்தப் பிரேரணைகளைப் பற்றி யோசிக்கிறதற்காகக் கூடும் கூட்டத்தின் தலைமையை அவர் வகிக்கக் கூடாதென்பது அவர்களுடைய கருத்து. அலகாபாத்திலாவது லட்சுமணபுரியிலாவது காங்கிரஸ் கூடும் பட்சத்தில் சபாநாயகராக மிஸ்டர் திலகர் தான் தெரிந்தெடுக்கப்படுவார் என்பது நிச்சயம். ஆகையினால் ஐக்கிய மாகாணத்தில் காங்கிரஸை நடத்தி வைக்கத் தங்களால் முடியாதென்று அம்மாகாண காங்கிரஸ் கமிட்டி சொல்லும்படியும் செய்து, பம்பாயில் நடத்திவைக்கத் தாங்கள் தயாரென்று அம்மாகாண காங்

கிரஸ் கமிட்டி சொல்லும்படியும் செய்துவிட்டால் காங்கிரஸின் விதிகளின்படி பம்பாய் மாகாண வாசியாகிய மிஸ்டர் திலகர் அம்மாகாணத்தில் கூடும் காங்கிரஸின் தலைமையை வகிப்பது கூடாத காரியமாய்விடும். ஆகையால் உள்ளுக்குள் நடக்கும் வேலைக்கு நாம் தயாராயிருக்கும்படி கல்கத்தா காங்கிரஸின் அக்கிராஸனாதிபதியைத் தெரிந்தெடுத்தபொழுது நான் செய்தது போல் இப்பொழுதும் செய்ய உத்தேசிக்கிறேன். விசேஷ காங்கிரஸ் கூட்டத்தை நடத்தி வைக்கும் பெருமையை ஐக்கிய மாகாணம் இழந்துவிடாமல் அதை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். இந்தியாவிலுள்ள எந்த மாகாணத்துக்கும் அவமானத்தை விளைவிக்கக் கூடிய காரியத்தைச் செய்ய ஐக்கிய மாகாண காங்கிரஸ் கமிட்டி சம்மதிக்குமென்று நான் நினைக்க வில்லை. ஆனால் சில சமயங்களில் எதிர்பாராத காரியங்கள் நடந்து விடுகிறபடியால், எதற்கும் நாம் தயாராயிருக்க வேண்டும்.

பம்பாய் மாகாணவாசிகள், காங்கிரஸ் கூட்டம் பம்பாயில் நடத்தப்பட வேண்டுமென்ற பிரேரணையை மறுதளித்துவிட வேண்டும். அப்படிச் செய்யாமற்போனால், இந்த நெருக்கடியான சமயத்தில் ஒப்பற்ற தலைவர் காங்கிரஸில் தலைமை வகித்து நடத்த இடமேற்படாமற் போய்விடும். பம்பாய்வாசிகள் இதற்கு இடங்கொடுக்க மாட்டார்களென்று நம்பலாம். மத்திய மாகாணங்களிலுள்ளவர்கள், அங்கு காங்கிரஸ் நடத்தப்படுவதைப் பெரிதும் விரும்புவார்களென்பது நிச்சயம். ஏனென்றால் ஜனங்களால் பெரிதும் நன்கு மதிக்கப்பட்ட தலைவர் அக்கிராசனம் வகிக்கப் போகிறார் என்பதனால்தான். இந்தப் பிரச்னையைக் குறித்து நான் இவ்வளவு கவலை எடுத்துக் கொள்வதற்குக் காரணம் என்னவென்றால், நான் இவ்விஷயத்தை முக்கியமானதாய்க் கருதுவதேயாகும். பொது ஜனங்

களின் மனதைப் பாதிக்கும் இன்னொரு விஷயத்தையும் நான் எடுத்துக் கூற விரும்புகின்றேன். அதாவது எதிர்பார்க்கப்படும் சீர்திருத்தப் பிரேரணைகளின் விஷயத்தில் நம்முடைய நோக்கம் எப்படியிருக்க வேண்டு மென்பதையே நான் குறிப்பிட விரும்புகின்றேன். பிரேரணைகள் வெளிவரும் வரையில் அவற்றை நாம் ஏற்பதா கூடாதா என்பதை நிர்ணயித்துக் கூறிவிட முடியாது. பிரேரணைகள் முற்று முடிய அதிகாரிகளால் வெளியிடப்படுகின்றவரையில், அவற்றை அங்கீகரிப்பதா, வேண்டாமா என்பதை எவரும் முற்கூட்டியே நிர்ணயித்தல் கூடாது. சரியான காலம் வருகிற வரையில் ஒவ்வொருவரும் தத்தம் அபிப்பிராயத்தை நிறுத்தி வைத்துக் கொள்வதே நலம். அப்படிக்கில்லாமல், விவாதத்தை இப்பொழுதே விருத்தி செய்வது நமது எதிரிகளுக்கு நன்மையைக் கொடுக்கும். இச்சமயம் நாம் நமக்குள் விவாதத்தைக் கிளப்பாமலிருப்பதால் ஒருவித தீமையும் ஏற்படாது. காங்கிரஸும் முஸ்லீம் லீக்கும் செய்திருக்கும் பிரேரணைக்குக் குறைவாக கவர்ன்மெண்ட் என்ன விதமான சீர்திருத்தங்களைச் செய்தாலும் அவற்றை இந்தியா ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தலைவர்கள் எத்தனையோ முறை வற்புறுத்திக் கூறியிருக்கின்றார்கள். ஒரு ரூபாய்க் கிடைக்க வேண்டிய இடத்தில் ஒரு அணாவாவது கிடைத்தால் அதைக்கொண்டு திருப்தியடையலா மென்று ஒரு சார்பார் வாதிக்கப் புறப்படின் அவர்கள் அப்படியே செய்து கொள்ளட்டும்.

தேசமானது அதனை அங்கீகரிக்காது; எனவே காங்கிரஸ் லீக் பிரேரணைகளின்படி சீர்திருத்தங்கள் ஏற்படாமற்போயின் என்ன செய்வ தென்பதை இப்போதே சொல்லாமல் விடுகின்றேன். உரிய காலத்திற்கு முன்னதாக முற்கூட்டி ஒன்றையும் நிர்ணயித்துக் கூறி விடுவது முடியாத காரியம். ஆனல்

ஒரு காரியம். ராஜ சக்கரவர்த்தியின் ஆக்ஞையின் படி ஏகாதி பத்தியத்தின் ஒரு பாகமாகிய நம் தாய் நாட்டில் ஜெர்மானியர் பிரவேசிக்காமல் தடுக்க நாம் மனமுவந்து கவர்ன்மெண்டுடன் கூட்டுறவு பாராட்டுவதைத் தவிர வேறு அம்சங்களில் மன முவந்து கூட்டுறவு பாராட்ட வாவது, இப்பொழு தாவது எதிர்காலத்திலாவது கிளர்ச்சி செய்வதை நிறுத்திக்கொள்வ தாய் எவரும் உடன்பட மாட்டார்களென்பது நிச்சயம். அதி காரிகள் எவ்வளவு நெருக்கினாலும், எவரும் இப்படிப் பட்ட நிபந்தனைக்குக் கட்டுப்படக் கூடாது. நமக்குள் என்ன வித மான அபிப்பிராய பேதங்களிருப்பினும் இந்த ஒரு அம்சத் தில் எல்லோரும் ஒரு மனப்பட்டிருப்பது கடமை.

இச்சமயத்தில் நாம் தீவிரமாக எதைக் குறித்துக் கிளர்ச்சி செய்யவேண்டுமென்றால் டாக்டர் நாயரை இங்கிலாந்துக்குச் செல்ல வொட்டாமல் திருப்பி யனுப்பிவிட வேண்டு மென்ற விஷயத்தைக் குறித்தேயாகும். இதன்பொருட்டுக் கிளர்ச்சி செய்ய வேண்டியதுதான். தற்போது நாம் செய்ய வேண்டிய முக்கியமான காரியம் டாக்டர் நாயர் ஸைடன்ஹாம் கக்ஷியின் தூதர். சீக்கிரத்தில் சீர்திருத்தப் பிரேரணைகள் வெளிவரப் போகின்றன. ஸைடன் ஹாம் கக்ஷியார் அபவாதமான செய் திகளை நமது கக்ஷிக்கு விரோதமாய் இங்கிலாந்தில் பரப்பி வரு கின்றார்கள். நமது பிரதிநிதிகளோ திருப்பியனுப்பப்பட்டுப் போய் விட்டார்கள். பிரிட்டிஷ் ஜனங்களுக்கு உண்மையை எடுத்துக்கூற வழியில்லாமற் செய்யப்பட்டுப் போயிற்று. எனவே இவ்விஷயமாய்த் தேசமெங்கும் பெருங்கிளர்ச்சி ஏற் பட்டு யுத்த மந்திரி சபை நீதியைச் செய்யும்படி வற்புறுத்தப் பட வேண்டும். மந்திரிசபை நீதியைச் செய்யுமென்றே நினைக்கின்றேன். அப்படிச் செய்தால் தான் பிரிட்டிஷார் நீதி யுள்ளவர்களென்பது நிதர்சனமாகும். அப்படிச் செய்யாமற்

போனால், பிரிட்டிஷ் நீதிக்கு அழியாத மாசு ஏற்பட்டுப் போகும். நியாய வாதத்திற்குச் சிறிதும் ஒவ்வாத இந்த ஒரு விஷயத்திலிருந்தே அதிகாரிகள், நம்முடைய கூட்டுறவைக் கோருவதும், கிளர்ச்சி அடங்கிப் போக விரும்புவதும், எவ்வளவு உள்ளன்பற்ற காரியமென்பது உலகத்தாருக்கு விளங்காமற் போகாதென்பது திண்ணம்.

மாண்டேகு செம்ஸ்போர்ட் அவர்களின் சீர்திருத்தப் பிரேரணைகள்.

டாக்டர் சுப்பிரமணி ஐயரின் அபிப்பிராயம்.

டாக்டர் சுப்பிரமணி ஐயர் பின்வருமாறு எழுதுகிறார்:—

நாம் வெகுநாளாய் எதிர்பார்த்திருந்த திருத்தத்திட்டம் வந்துவிட்டது. நாம் கேட்டிருந்த திருத்தங்களுக்கு மிகக் குறைவான சில திருத்தங்களே கிடைத்திருக்கின்றன. ரூபாய்க்கு ஓரணா வீதங்கூடக் கிடைக்கவில்லை. பிரிட்டிஷ் பார்லிமென்டில் நமது துரதிர்ஷ்டச் [illegible] தருந்தாற்போல் இத்

திட்டம் அங்கிகரிக்கப்படுமானல் இது செய்யக் கிடக்கும் விஷமத்திற்கு எல்லையே இராது. ஒட்டகத்றுக்கு உடம்பெல்லாம் கோணல் என்ற பழமொழி பிரஸ்தாப திட்டத்றுக்கு நன்ருய்ப் பொருந்தும். ஒட்டகமாவது ஒரு விதத்தில் பாதகமில்லை யென்று திர்க்காலோசனையின் பேரில் எனக்குப்பட்டது. மற்ற மிருகங்கள் பிரயோஜனமில்லாத பாலை வனங்களில் ஒட்டகத்தின் உபயோகத்தைச் சொல்லி முடியாது. மிஸ்டர் மாண்டேகுவின் திட்டமோ இதற்கு நேர் எதிரிடையானது. வெளித் தோற்றத்றுக்கு மட்டுமே ஒட்டகம் விகாரமாகக் காணப்படுகிறது. பிரஸ்தாபதிட்டமோ பார்வைக்கு அழகாயும் உள்ளுறப் பல ஊழல்கள் நிறைந்தும் இருக்கிறது. திட்டம் வேறுவிதமாயிருக்க முடியாதென்பதற்கும் காரணங்கள் இருக்கின்றன. உண்மையைப் பட்டவர்த்தனமாய்ச் சொல்லும் என்னைப் போன்றவர்களைக் கடுமையான வார்த்தைகள் பிரயோகிப்பதாகச் சிலர் சொல்லுகிருர்கள். நான் என்ன செய்வது? சந்தர்ப்பம் அம்மாதிரியாயிருக்கிறது. மிஸ்டர் மாண்டேகுவும் லார்ட் செம்ஸ்போர்டும் எப்படிப்பட்ட ஆஸாமிகள் என்பதைக்கவனித்தால் அவர்களுடைய கூட்டுப் பிரேரணைகள் வேறு விதமாயிருக்க முடியாதென்பது புலப்படும். மிஸ்டர் மாண்டேகு இந்தியாவின் பொருளாதாய மூலத்தை வெட்கமில்லாமல தோண்டி யெடுத்துச் செல்லும் வர்க்கத்தைச்சேர்ந்தவர். லார்ட் செம்ஸ்போர்டு கட்டுக்கடங்காமல் சுயேச்சா பத்தியம் செலுத்திவரும் இனத்தைச் சேர்ந்தவர். இவ்விருவரும் சேர்ந்தால் முடிவு எப்படி யிருக்கும் என்பதை நாம் முற்கூட்டி யறிந்து கொள்ளலாம். பிரஸ்தாப திட்டத்தில் இரண்டொரு முக்கியமான அம்சங்களைமட்டும் தற்சமயம் ஆராய்வோம்.

'நியூ இந்தியா' பத்திரிகையில் ஏற்கனவே இத்திட்டத்தை மிகவும் திறமையாய்ப் பதவுரைசெய்து வெளியிட்டிருக்கிறார். மிஸஸ் பெஸண்ட் தமது முடிவுரையில் பிரயோகிக்கும் வார்த்தைகளை நான் அப்படியே ஆமோதிக்கிறேன். ஒவ்வொரு ஹோம்ரூலரும் காங்கிரஸ் அபிமானியும் காரணம் சொல்லாமலே இப்புதிய திட்டத்தை நிராகரித்துத் தள்ள வேண்டியது கடமை. ஆயினும் நான் சம்பந்தப்பட்ட வரையில் இரண்டொரு ஆட்சேபனைகளைச் சொல்லிவிட்டுத் திட்டத்தை நிராகரிக்க விரும்புகிறேன். முதலாவது அந்தந்த தேசத்தின் அரசியலை அதனதன் ஜனங்களே நிர்ணயித்துக் கொள்ள வேண்டு மென்று நேசக்கட்சியார் இடித்துரைத்துவரும் கொள்கையானது ஏகாதிபத்யத்தின் முக்கிய வகுப்பாகிய இந்தியாவுக்கு மட்டும் ஏன் பொருந்தாதோ தெரியவில்லை. இரண்டாவது, காங்கிரஸ் லீக் திட்டத்தை இந்திய மேதாவிகள் தயாரித்திருப்பினும் அவர்கள் அதைப் பிரயோஜனமற்றதென்று ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள். காங்கிரஸ் லீக் திட்டத்தில் நாம் குறிப்பிட்டிருக்கும் சில கொள்கைகளைப் புதிய வாசக நடையில் மாற்றி யெழுதி யிருக்கிறார்கள். இதைக் கண்டு யாவரும் ஏமாந்து போகமாட்டார்கள்.

நேசக் கட்சியாரின் பிரதான யுத்தக் கொள்கையை நிறைவேற்ற, சக்கரவர்த்திக்கு ராஜவிசுவாசமாகவே இஷ்ட முண்டானால், நிஷ்களங்கமான மனது படைத்திருக்க முடியாத இரண்டு உயர்பதவி உத்தியோகஸ்தர்களை அனுப்பி விட்டால் போதுமா? 25 கோடி ஜனங்களுடைய கதியை அவ்விருவர் நிர்ணயிக்கும்படி விடுவது விவேக மாகுமா? அயர்லாந்தில் ஒரு விசாரணைச் சங்கம் நியமித்ததுபோல் இங்கும் நியமித்திருக்கக்கூடாதா? யார் யார் இந்தியாவில் வந்து விசாரிப்பது என்று நம்மிடம் யாராவது கே[illegible]ர? அந்தந்த தேசத்

தில் ஆட்சி முறையை அந்தந்த தேச ஜனங்களே நிர்ணயித்துக் கொள்ளுவதா யிருக்கவில்லை.

இந்த திட்டத்தில் இந்தியர்களிடம் பூராவாக அவநம்பக மிருக்கிற விஷயம் ஒவ்வொரு இடத்திலும் காணப்படுகிறது. இந்த சந்தர்ப்பங்களில் நம்பிக்கை யற்ற ஜனங்களுக்குப் பொறுப்பான ஆட்சி நாளடைவில் உண்டாவதற்காக இந்த திட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிற தென்பதைத் தவிர வேறு என்ன சொல்லக்கூடும்? அவர்கள் சிறிது காலத்திற் குள்ளேயே அலட்சியம் செய்யப்படுவதற்கான மேலான கொள்கைகளை ஆகஸ்டு மாதத்தில் வெளியிடாமல், மந்திராலோசனை சபையார் சுய ஆட்சி கேட்கப்படுவதைக் கொடுக்க முடியா தென்று கண்டித்துச் சொல்லி விடுதல் உசிதமல்லவா? அதிகார வர்க்கத்தினரின் அதிகாரங்களை மாற்ற உத்தேசித்திருக்கும் விஷயங்களைச் சற்று ஆலோசிப்போம். தற்கால நிலைமையுடன் ஒத்திட்டுப் பார்ப்போமானால் அதிகாரவர்க்கத்தினரின் ஏதேச்சாதிகாரத்தைச் சிறிதளவாவது இந்த திட்டத்தில் குறைக்க ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறதா? இல்லவே இல்லை. ஏனெனில் ராஜப்பிரதிநிதியும் கவர்னர்களும் இப்போதிருப்பதைவிட ஏதேச்சாதி காரிகளாய் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு பக்கத்திலும் விரோதமான கொள்கைகளைக் குறிப்பிடுவதும், அனுஷ்டானத்தில் கொண்டுவந்தால் நிர்வாகப் போக்கைப்பற்றி மேல் நாட்டார்கள் நகைப்பதற் கிடமானதாகவுள்ள சீர் திருத்தப் பிரேரணைகளைச் செய்பவர்கள் நிர்வாக அதிகாரிகளை அடக்கியாளும் சுதந்திரம் ஜனங்களுக்கு இருக்க வேண்டு மென்கிற கொள்கையையும், அவர்களிடம் வரவு செலவு அதிகாரங்கள் இருக்க வேண்டு மென்கிற விஷயத்தையும் அங்கீகரிப்பார்களென்று எதிர்பார்ப்பது சுத்த முட்டாள் தனம். ஆகவே மெஸபொடோமியா தகவல் விஷய

மாய் விசேஷமாகப் பேசின மிஸ்டர் மாண்டேகுவின் சம்பந்தம் எங்களுக்கு வேண்டா மென்பதைத் தவிர நம்மில் பலர் வேறொன்றும் சொல்ல முடியாது. அவருடைய உபந்யாஸத்தில் இருந்த சூழ்ச்சிகளை அறியாமல் நாம் அவரை நண்பராகக் கருதி விட்டோம். அந்த உபந்யாஸம் செய்தவுடன் அவரை இந்தியா மந்திரியாக மந்திராலோசனை சபையார் நியமனம் செய்ததும், அவரை இந்த தேசத்திற்கு அனுப்பியதும் எல்லாம் சூழ்ச்சிகள் தான். மந்திராலோசனை சபையார் தங்களுடைய சூழ்ச்சிகள் பலித்துவிட்ட தென்று சந்தோஷப்படலாம். அவர்கள் இந்தத் தேசத்திற்கு அனுப்பப்பட்ட தன் காரணமென்ன? பொறுமைக்கே ஆஸ்தானமான இந்த தேசத்திலேயே பொறுக்க முடியாத அதிகாரிகளின் அடக்கு முறைகளினால் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்குவதற்காகவே யென்பது வெளிப்படை. அப்படிப்பட்ட உபந்யாஸம் செய்தவரால் நன்மை ஏற்படக்கூடு மென்று நம்மில் உண்டான தப்பான நம்பிக்கைகளினால் அவர்களின் முக்கியமான மேற்கண்ட நோக்கம் அநேகமாய்ச் சாதிக்கப்பட்டு விட்டது. அவருடைய தாராள ராஜதந்திர நிபுணத் தன்மையையும் ராஜீய விஷயங்களைக் கிரகிக்கும் சாமர்த்தியமும் இப்போது நன்கு விளங்கி விட்டது. மந்திராலோசனை சபையார் கவனிப்பதற்குக் கூட முடியாமலிருக்கும் சமயத்தில் இந்த யாதாஸ்தைப் பிரசுரம் செய்ததின் நோக்க மென்ன? அதன் விவரங்களைப் பற்றி நாம் வாதித்துக் களைத்துப்போய் எப்படியாவது தொலைந்து போகிற தென்று அலுத்துப்போய் விடும்படியான நிலைமையில் நம்மைச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சூழ்ச்சியாகும். இந்த திட்டத்தில் கண்டபடி மந்திராலோசனை சபையார் சட்டம் செய்யத் தயாராயிருக்க வில்லை யென்பது அவர்கள் அதை அலட்சியம் செய்திருக்கும் விதத்திலிருந்தே நன்கு புலப்

படுகிறது. இந்த திட்டத்தைப் பிரேரணை செய்தவர்களே, முடிவான உத்தரவு செய்ய வேண்டிய அதிகாரிகள் அதை முடிவில் நடத்தி விடுவார்களென்பதை உரைவில்லை யென்று முடிவு செய்து கொள்ளாமலிருக்க முடியவில்லை. யுத்த முடிவு வரையில் நம்மைத் தூங்கச் செய்ய வேண்டிய வேலையைச் செய்து விட்டு, முடிவில் மான்டேகு—செம்ஸ் போர்டு பிரேரணைகள் சுய ஆட்சி விரும்பிய நமக்குச் சரியான சிக்ஷையாய் விட்ட தென்றும், நமக்குப் பொறுப்பான கவர்ன்மெண்டு என்கிற முறையில் மருந்து தேவையில்லை யென்றும், ராஜப் பிரதிநிதி சபை மெம்பர்களும் இந்தியா மந்திரி சபை மெம்பர்களும், மிஸ்டர் மாண்டேகுவுடன் கூட வந்த இரண்டு பிரதிநிதிகளும் அறிந்த அபிப்பிராயந்தான் கொண்டார்களென்றும் சொல்லக்கூடும். இந்த நிலைமையில் நாம் சுய ஆட்சி கிடைக்கும் வரையில் கிளர்ச்சி செய்ய வேண்டியதைத்தவிர வேறு வழியில்லை. அல்லது சுயேச்சை யில்லாதவரையில் நாகரீக முள்ள வர்க்கத்தினராக எந்த ஜனங்களும் இருக்க முடியாதாதலால் நாம் நாகரீகமான வர்க்கத்தினர் என்கிற கொள்கை அறவே ஒழிந்துவிடுமாறு நம்முடைய கோரிக்கைகள் நடேறுகின்ற வரையிலாவது வற்புறுத்திக் கொள்ள வேண்டும்.

முடிவான [illegible] இந்த [illegible] வருவதின் முன் காங்கிரஸ் லீக் திட்ட விஷயமாய் மிஸ்டர் காந்தி அனுசரித்தமுறைகளை நாம் இப்பொழுது அனுஷ்டிக்கவேண்டுமென்று சுய ஆட்சி சங்கத்தினர்களுக்கும் காங்கிரஸ் சபையைச் சேர்ந்தவர்களுக்கும் நான் யோசனை சொல்லுகிறேன். அவர்களின் பிரேரணைகளையும் அவற்றிலுள்ள குறைகளையும் காட்டித் துண்டுப்பத்திரிகைகள் பிரசுரம் செய்து அவைகளில் சாத்தியமான வளவு [illegible] பிரஜைகளின் கையெழுத்தைப்

பெறவேண்டும். பார்லிமெண்டாருக்கு நாம் விஷயங்களைத் தெரிவித்துக் கொள்ள சந்தர்ப்பங்கள் வாய்க்குமாயின் தேச மொத்த நோக்கங்களுக்கு ஆதாரமாய் இவைகளைக்காட்டலாம். தவிரவும் இம்மாதிரி செய்தல் ஜனங்களுக்கு அறிவைப் புகட்டுவதாகும். அதுதான் இப்பொழுது முக்கியம். இதை நாம் முதலில் செய்யவேண்டும். இந்திய ராஜீய விஷயத்தைப் பற்றி மிஸ்டர் பர்னார்டு ஹௌட்டன் சொல்லியிருக்கும் சில வாக்கியங்களைக் குறிப்பிட்டு நான் முடிவு செய்து கொள்ளுகிறேன். அவர் சொல்லியிருப்பதாவது: "இந்தியர்கள் பள்ளிக்கூடத்தி லிருக்கிறார்களென்றால், அது எப்போதுமிருக்கும் பள்ளிக் கூடம்தான்; அங்கே தலை நரைத்தவர்கள்கூட பாலியர்களான அன்னியர்களிடம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்; பாடத்தைகூட ஒரு நாளும் மாற்றுகிறதில்லை."

இம்மாதிரியாக அவர்களை அடக்கி, அவர்களாக சுயமாக எதையும் செய்யும் சுதந்தரத்தைக் கொடுக்காம லிருப்பதனால், அதிகார வர்க்கத்தினர் பெரிய தீங்கிழைக்கிறார்கள்; இதனால் ஒருவகுப்பினர் மற்றொரு வகுப்பினரின் சாபத்திற்காளாவார்கள். பிடிக்கப்பட்ட ஒரு தேசத்தின் ஜனங்களுக்கு ராஜ்ய சுதந்தரம் இல்லாமற் செய்வது பெரிய பிசகு; அதனால் அவர்கள் சுயகௌரவத்திற்குப் பங்கம் ஏற்பட்டு, அவர்கள் பிராணனையே முடித்துவிடும். அவர்களை எந்நாளும் நாம் சொல்லுகிறபடி நடக்கச் செய்து, குழந்தைகளாகப்பாவிப்பது பெரியபிழையாகும்.

இராஜரீக சீர்திருத்தங்களைப் பற்றிய திட்டப் பிரேரணம்.*

அதிகார வர்க்கம்.

தற்காலம் இந்திய இராஜாங்க முறைகள் பல துறைகளிலும் சீர்திருத்தத்திற் குரியன வென்பது பல காரணங்களால் நன்கு புலப்படுகின்றது. ஆனல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு யாதொரு பழுதும் ஏற்படா வண்ணம் வலிமையுடன் மேலோங்கியிருப்பதற்குக் காரணமாயிருக்கும் இராஜரீக சீர்திருத்தங்களையே முதன்மையாகவும், முக்கியமாகவுங் கொண்டு சில திட்டங்களைக் கூறலானேன். அதிகாரவர்க்கத்தார் தங்கள் ஆட்சி முறையினல் தினை தினை ஆளப்படுவோர்களின் பரஸ்பர சம்பந்தத்தை நழுவ விடும் தன்மையை இச் சந்தர்ப்பத்தில் கூறுமலிருக்க முடியவில்லை. பிரிட்டிஷ் அரசாட்சியை இந்தியாவினின்றும் ஒழிக்க வேண்டிய எண்ணத்தையே இந்திய இராஜ தந்திரிகள் கொண்டிருக்கிறார்களெனப் பொதுவாக அநேக ஆங்கிலேயர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். இது கேவலம் முகாந்தர மற்ற கற்பனை. இந்திய இராஜ தந்திரிகள் முக்கியமாகக் கோருவதெல்லாம் இந்திய இராஜரீக முறைகள் சீர்திருந்த முறுவதேயாம். பிரிட்டிஷ் ஸ்தாபனங்கள் குணத்திலும், நடவடிக்கை களிலும் ஸ்வாதந்தரிய

* இது இந்தியா மந்திரி மிஸ்டர் மாண்டேகு சென்னையில் விஜயஞ்செய்த காலத்தில் டாக்டர் எஸ். சுப்பிரமணி ஐயரால் அளிக்கப்பட்டது. இது இ[illegible] சொந்த அபிப்பிராயமாகும்.

உணர்ச்சிக ளுள்ளவைக ளென்பதைச் சரித்திர ஆராய்ச்சியி னால் பலவாறு அறிந்திருக்கும் இந்திய இராஜ தந்திரிகள், இந்தியாவில் தற்பொழுது அதிகாரவர்க்கத்தார்களினால் பிரிட்டிஷ் தன்மைக்கு மாறாகச் செய்யும் முறைகளைக் கண்டு மனந் தாளாமல் அம்முறைகள் மாறும் வண்ணம் போராடு கின்றனர்.

குடிகள் சாதாரணமாக ஆள்பவர்களின் இனத்தையே பற்றி யிருந்தால் நிலைமை ஒரு மாதிரியாக இருக்கும். ஆனால், இந்தியாவிலோ அது வேறுமாதிரியாகவே யிருக்கின்றது. இந்தியாவில் ஆட்சி முறைமைக்குரிய சக்தி அதிகார வர்க்கத்தார் வசம் ஏற்பட்டது முதல் குடிகளும் அதிகாரிகளும் உத்தர தக்ஷண துருவத்தை யொத்திருக்கின்றனர். இந்தியாவில் ஆட்சி முறைமை ஒரு சார்பாகவே யிருக்கின்றது. இதல்லாமல் ஆட்சி முறைமை ஒருவகுப்பை யொட்டிய தாகவுங் காணப்படுகின்றது. தற்பொழுது இந்தியாவில் அரசப் பிரதிநிதிகளாகயிருக்கும் மாகாண கவர்னர்கள், கவர்னர் ஜனரல் முதலியவர்களுக்கு இந்தியாவில் ஆட்சி முறைமை வகிக்குங்காலம் ஐந்து வருட மென்பதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வழக்கம் திடமற்ற கோழை மனத்தினர்களுக்குப் பாதகமாயிருக்கும். ஏனெனில் குடிகளின் இலட்சியத்தை யறியாமல் இவர்கள் தன் மனப்போக்குபடி செய்யும் முறைகளினால், ஜனங்களின் மனம் கசிந்து அநேக புரட்சிகள் சம்பவிக்கும். ஆகவே, இவ்வைந்து வருட நிர்ணயம் முதன் முதலில் எடுக்கப்பட வேண்டும்.

ஸிவில் சர்விஸ் உத்தியோகம்.

இந்தியாவில் அதிகாரவர்க்கத்தார்களின் வரம்பு கடந்த முறைகள் அநேகமாக ஸிவில் சர்விஸ் உத்தியோகங்களினாலேயே உண்டாகின்றன. ஸிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்

கள் பொறுப்பாகத் தாமென்றும் இறுமாப்புடையவர்கள். 'தெய்வப் பிறப்பு உத்தியோகம்' என வழங்கும் இந்த ஸிவில் சர்விஸ் உத்தியோகமே பிரிட்டிஷ் குடியரசு உணர்ச்சியை அழிக்கிறது. இந்திய ஸிவில் சர்விஸ் உத்தியோகம் பிரபஞ்சத்திலுள்ள எனைய இராஜாங்கங்களிலுள்ள உத்தியோக இலாக்காக்களைக் காட்டிலும் மிக்க பணச் செலவு கொண்டது. இந்தகைய உத்தியோகஸ்தர்களே இந்தியாவின் குடிகளைத் தாங்குகின்றன ரென்கிறார்கள். இந்தியாவிலுள்ள படித்த சுதேசிகளின் கையில் அதிகார மிருப்பதை விட ஸிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களிடம் அதி விமர்சையாயிருக்கும்' என அநேக ஆங்கிலேயர்கள் கூறுகின்றனர். இந்திய குடிகளுக்கு ஏற்ற பொறுப்பாளிகள் தாங்களே என வீண் மயக்கங் கொண்டிருக்கிறார்கள். பஞ்சாப் மாகாண கவர்னரான ஸர். மைகல் ஓடையர் வைஸிராய் சபையில், இராஜ பக்தி என்பதைப் பற்றியும் இராஜ பக்தி கொண்டவர்களின் இலட்சணங்களையும் கடமைகளைப்பற்றியுங் கூறினதுடன், இந்திய இராஜ தந்திரிகள் விசேஷமாக மேற்கூறிய கடமைகளைச் செவ்வனே யறியாத அறிவிலிகளா யிருக்கிறார்க ளென்றுங் கூறி யிருப்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம். இதல்லாமல், ரூர்க்கி எஞ்சினியரிங் காலேஜில் இருக்கும் மிஸ்டர் வுட் துரை இந்தியக் குணக் குறைவுகளைப் பற்றிக் கூறினதையும் பலர் அறிந்த விஷயமேயாம். இதுடன், மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு சட்டசபைகளின் நடவடிக்கையும், கலாசாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் உள்ள ஐரோப்பிய உபாத்திமார்களுடைய நடத்தைகளும், நாளுக்கு நாள் ஸிவிலியன்களோடு உண்டாகும் போராட்டங்களுமே இந்தியாவில் இருக்கும் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களின் அமுல்களைக் காட்டும்—யோசிக்குமிடத்து குற்றமானது இந்தியர்களுடைய தல்ல; இது முக்

நியமாக அதிகார வர்க்கத்தார்களுடையதே—கடந்த சில ஆண்டுகளாக அதிகார வர்க்கத்தின் நடைமுறையை நன்கு ஆராயக் கூடும். உதாரணமாக, இராஜ நிந்தனைச் சட்டம் தற்பொழுது ஸிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களின் மனப்படி இழுக்கப்படுகிறது. பிரதமத்தில் ஏற்படுத்தின இச் சட்டத்தின் அர்த்தமும் கருத்துரையும் வேறு; இப்பொழுது இவர் அர்த்தஞ் செய்வது வேறு. இதல்லாமல், கிரிமினல் சட்டம், 1904-ம் வருடத்திய உத்தியோக இரகஸ்ய சட்டம், பத்திரிகை சட்டம், அச்சுக்கூடச் சட்டம், 1913-ம் வருடத்திய சதியாலோசனைச் சட்டம், 1915-ம் வருடத்திய இந்திய பாதுகாப்புச் சட்டங்கள் ஆகிய இவை யனைத்தும் ஸிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களின் மனப்படி உண்டாக்கப் பட்டு அதிகாரவர்க்கத்தார்கள் தங்கள் இஷ்டப்படி பிரயோகப் படுத்துகிறார்கள். இம் மாதிரியான அனுஷ்டானம் எவ்வளவு காலம் நிலைத்திருக்கு மென்பதை நான் கேட்கிறேன். இந்திய குடிகளிருக்கும் நிலைமையில் பிரிட்டிஷ் குடிகள் இருந்தால் அப்பொழுது தான் இவ் வதிகாரவர்க்கத்தின் செயல்கள் தெரிய மாட்டும். எப்படியிருந்தபோதிலும் இனி, இந்தியா சீர்திருத்தமடைவது நிச்சயம். அதிகார வர்க்கத்தார் கூடாதெனச் செய்யலாம். மறுதலிக்கலாம். தங்கள் ஆத்திரத்தையுங் காண்பிக்கலாம். ஆனால், எப்பொழுது ஜனங்கள் ஒரே குரலுடன் சீர்திருத்தங்களைக் கேட்க வாரம்பித்தார்களோ, அப்பொழுதே எவ்வளவு குரூரமான அரசாங்கமும் குடிகளின் இலட்சியத்திற்கு முன் எதிர் நிற்காது. நமது மன்னர் பெருமான் இளவரசராயிருந்த காலத்தில் இந்திய விஷயங்களில் ஆங்கிலேயர் மிகவும் சிரத்தையுடன் கையாள வேண்டு மென்று சொன்ன சொற்கள் இந்தியாவிலுள்ள அதிகாரவர்க்கத்தார்களுக்கு மட்டுங் காது கேட்க வில்லை. இந்திய ஜனத் தலைவர்கள் இவ்வளவு கால

மாகக் கேட்பது தான் என்ன? முக்கியமாக இந்தியன் ஸிவில் சர்விஸ் பரீட்சை இங்கிலாந்தில் நடப்பது போல இந்தியாவில் நடத்தப்பட வேண்டுவது, இராணுவச் செலவின் குறைவு, பலவந்தமாகக் கூலி சேர்ப்பது, நிர்ப்பந்தமாக சரக்குகளை அனுப்புவது, ஹோம் சார்ஜ். செலவைக் குறைத்தல், குடியரசு நாடுகளுக்குப் போகும் இந்தியர்களின் நிலைமை, இந்தியர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுப்பது முதலியவைகளில் சீர்திருத்தங்கள் ஆக வேண்டுமென்பதையே இந்திய ஜனத் தலைவர்கள் கடந்த முப்பது வருட காலமாக மன்றாடிக் கேட்கின்றனர். இதுடன், இன்னும் சட்ட நிரூபணத்தையும் சட்ட நிர்வாகத்தையும் தனித்தனி பிரிக்க வேண்டுமென்பதும் நிலத் தீர்வையின் திருத்தம், விவசாய விர்த்திக்குரிய சாதனம், சர்க்கார் உத்தியோகங்களில் இந்தியர்களின் நியமனம், இலவச கட்டாயப் படிப்பு ஏற்படுத்துதல், வர்த்தக வியாபார படிப்புகளைப் பரவச் செய்தல், ஜனங்களின் வாழ்க்கை நிலைமையைப்பற்றி அடிக்கடி மேல் பார்வை யிடுதல், ஜனங்களின் பிறப்புரிமைகளான தாராளமாகப் பேசுதல், பத்திரிகைகளில் எழுதுதல், முதலியவைகளைத் தங்குதடையின்றி வைத்தல், ஜனங்களின் சுதந்தரத்திற்குரிய இராஜீய சீர்திருத்தங்களைச் செய்தலாகிய இவைகளையே ஜனத் தலைவர்கள் கேட்கின்றனர். இவை யனைத்தையும் ஜனங்கள் பெறுவண்ணம் அதிகார வர்க்கத்தார் தடை செய்தே வருகின்றனர். நாட்டில் அமைதியும் அமரிக்கையும் இருப்பதற்குப் பதிலாகப் புரட்சிகளும், கிளர்ச்சிகளும் உண்டாகின்றன. இவைகளுக்குக் காரணம் அதிகார வர்க்கமே.

ஜனங்களின் பிறப்புரிமைகளைத் தடுக்கின்றனர். இந்திய இராஜாங்கத்திற்குச் சுயமான உறுதிப்பாடுகள் இல்லை என்றும், இந்நாட்டு ஜனங்களின் வற்புறுத்தலின் பேரிலோ அல்

லது ஆங்கில தேசத்துக் குடிகளின் உபதேசத்தின் பேரிலோ சில சீர்திருத்தங்கள் செய்தார்கள் என்று வெளி தேசத்தார் கேள்விப்படுவாராகில் அது இந்திய இராஜாங்கத்திற்குத் தீமையை விளைப்பதாகும் என சில அதிகாரவர்க்கத்தினர் கூறி யிருப்பதுங் காண்க—காரிய நிர்வாகத்தை ஒழுங்கு படுத்துவதும் இராஜாங்கத்தின் முறைமையும், கையெழுத்து வைக்கும் சுதந்திரமும் ஆகிய சர்வாதிகாரமும் எப்போதும் இங்கிலாந்திலிருக்கும் ஆங்கிலேயரது கையிலேயும் அவர்களுடைய பிரதிநிதிகளாய் இந்தியாவில் இருப்போரின் கையிலேயும் இருக்க வேண்டுமே யன்றி வேறொருவருக்கும் சுதந்தர மில்லை எனக் கூறி யுள்ளார். இராஜாங்க முறைமைகளில் இந்திய பொது ஜனங்களின் அபிப்பிராயம் சிறிதளவும் செல்லாதென்று லார்டு மின்டோ வியக்தமாய் எடுத்துரைத்திருக்கிறார். "நாங்கள் எங்களுடைய அதிகாரத்தை லக்ஷத்திலொரு பங்கு கூட தளரவிடமாட்டோம். இந்திய பொதுஜன அபிப்பிராயம் எவ்வளவு மும்மரமாய்க் கிளம்பினும் அது இந்த இராஜாங்கத்தின் நோக்கங்களைச் சிறிதும் மாற்றமுடியாது," என மின்டோ கூறி யிருக்கிறார். ஆகவே, இந்தியாவில் அதிகார வர்க்கத்தார்களின் செயல்கள் எவ்வளவு வேரூன்றி யிருப்பதை அறியுங்கள். அதிகார வர்க்கத்தார்களின் செயல்கள் பல துறைகளில் சகிக்கமுடியாமலிருக்கின்றன. ஆகவே, இந்தியாவிற்கு உண்டாகும் சீர்திருத்தங்கள் அதிகார வர்க்கத்தார்களிடம் வருவதா யிருந்தால், அவைகள் கேவலம் ஒரு தலையாகவே யிருக்கும். பிரிட்டிஷ் மந்திராலோசனை சபையில் இந்தியர்களின் இலட்சியமான சுய ஆட்சியைப்பற்றி அறிக்கை செய்தால் அதுவே சிறந்த பட்டயமாகக் கூடும். இதைத்தான் இந்திய ஜனங்கள் [illegible] -சின்றனர்.

ஜனங்களின் விழிப்பு.

இந்திய ஜனங்கள் நாளுக்கு நாள் இராஜீய தேசிய விஷயங்களில் கண்ணும் கருத்துங்கொண்டு சுதந்தர உணர்ச்சியைக் கொண்டிருக்கின்றனர். ஜனங்கள் அதி தீவிர இராஜீய கிளர்ச்சிகளில் உழைக்க முன்வரலானார்கள். ஆகவே தங்கள் இலட்சியமான சுய ஆட்சி கிட்டும்வரை இவர்கள் போராடிக் கொண்டே வருவார்கள்.

சண்டையுமில்லை சச்சரவுமில்லை.

இந்தியாவில் சுதா கிலச்சுவான்தார்களுக்கும், குடித்தனக்காரர்களுக்கும், மாறாச் சண்டை யுண்டாகிறதென்றும், உயர்தர பதவியிலிருக்கும் பிராமணர்கள் குடித்தனக்காரர்களுக்கு உதவி செய்வதில்லை யென்றும், வெகுவாய் ஆங்கிலோ இந்தியர்கள் கூறுகின்றனர். 1877-ம் வருடமுதல், குடித்தனக்காரர்களுக்குப் பேருதவி செய்யவேண்டுமென்று விரதங் கொண்டவர்கள் பிராமணர்களேயாவர். அக்காலத்தில் சட்ட சபைகளில் குடிகளுக்காக பிராமண மெம்பர்களும், பிராமணர்களல்லாத மெம்பர்களும் ஒருமித்து நன்மை புரிந்து வந்தனர். ஆகவே, சண்டையாவது சச்சரவாவது எந்நாளுங் கிடையாது.

குடியரசு அல்லது ஜன ஆட்சி.

1916-ம் வருடத்தில் காங்கிரஸ் சபையும், முஸ்லீம் சபையும் தயாரித்த திட்டங்களே ஜனங்களின் இலட்சியங்களெனக் கருதப்படும். இதன்றி இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் சமபாகத்தை எங்ஙனம் பெறக்கூடும். இந்தியா சுய ஆட்சி எவ்வளவு காலத்திற்குள் அடையவேண்டுமென்பது பிரிட்டிஷ் பார்லிமெண்டார்களின் பொறுப்பைப் பற்றியது. படிப்படியாகப் பொறுப்புள்ள அரசாங்கம் எக்காலத்தும் குடிகள் - அல்லது குடிகளை ஆள்வோர்

களுக்காவது நலத்தைக் கொடுக்காது. சுய ஆட்சி பெறுவதற்கு அடிப்படையாக அளிக்கப்படும் சீர்திருத்தங்கள் பொதுவாக ஜனப்பிரதிநிதிகளின் சம்மதங்கொண்டே செய்யவேண்டும். சட்டசபைகளில் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களே, சட்டங்களைப் பிறப்பிக்கவும், மாற்றவும், நீக்கவுமான பொறுப்புகள் வகிக்கவேண்டும். இந்திய பொக்கிஷ காரியங்களும், நாட்டில் விளையும் பொருள்களும், இவைகளைப் பெருக்கும் அதிகாரங்களும் ஜனப்பிரதிநிதிகளிடமே யிருக்கவேண்டும். ஜனப்பிரதிநிதிகளால் கொண்டுவரப்படும் சட்டதிட்டங்களைத் தள்ளவோ அங்கீகரிக்கவோ பிரிட்டிஷ் மந்திராலோசனை சபைக்கு அவ்வதிகாரம் இருக்கவேண்டுமேயன்றி இந்தியாவில் எத்தகைய உயர்தர உத்தியோகப் பொறுப்பை வகிக்கும் ஆங்கில உத்தியோகஸ்தர்கள் வசம் இருக்கவே கூடாது. உதாரணமாக, சட்டநிர்வாக சபையினர் யாதாமொரு மசோதாவைப் பிறப்பிக்கக் கொண்டுவந்தால் அதை ஜனப்பிரதிநிதிகள் தள்ளிவிட்டால், பிறகு பிரிட்டிஷ் மந்திராலோசனை சபையினர், அம்மசோதாவைத் தள்ளவும் அங்கீகரிக்கவும் செய்யலாம். நிர்வாக்சபை மெம்பர்களும், ஜனப்பிரதிநிதி மெம்பர்களும் ஒன்றுசேர்ந்து பிறப்பிக்கும் ஒரு மசோதாவிற்குப் பிரிட்டிஷ் மந்திராலோசனை சபையின் அங்கீகாரம் அவசியமில்லை. இவ்விரண்டு வகுப்புகளையும் சரிவர ஸ்தாபிக்காமலும், பொறுப்பு திட்டங்களை ஏற்படுத்தாமலும் இருக்கும் பரியந்தம் நாட்டின் இராஜீய விஷயங்கள் திருப்தியற்றதாகவே யிருக்கும். இந்திய கவர்ன்மெண்டுக்கு வைஸிராயே பிரதம தலைவராக யிருக்கவேண்டும். இராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்களிலொருவரையே இவ் வுத்தியோகத்திற்கு நியமிக்கவேண்டும். இந்திய கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தமான இராஜ்ய காரியங்களில் வைஸிராயிக்கு யாதொரு சம்பந்தமு மிருக்

கக்கூடாது. சுதேச மன்னர்களுடைய சபைக்கும் வைஸி ராயே தலைவரா யிருக்கக்கூடும். இத்தகைய ஏற்பாட்டினுல் சுதேச மன்னர்களும் இந்நிலைமையிலிருந்து ஒரு படி உயர்ந்த வர்களாகின்றனர். ஆகவே, இந்தியா பொறுப்புள்ள அர சாங்கம் பெறுவதற்குரிய துறைகளை ஸ்தாபித்து சர்வ சாதகங் களையுங் கொடுக்கவேண்டும்.

வகுப்புப் பிரதிநிதித்துவம்.

சின்னுளாக என் மாகாணத்தை யொட்டியமட்டில் வகுப் புப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற தாபம் சிற்சில விடங் களில் உண்டாயிருக்கின்றது. இத்தகைய பிரதிநிதித்துவம் நாட்டை நன்மைப்படுத்தாதென்பதே சிறந்த இராஜ தந்திரி களின் அபிப்பிராயமாகும். திராவிட கட்சியைத் தூக்கிப் பிடிப்பவர்களில் முக்கியஸ்தர்களான குரூபம் இராஜா, கொல் லங்கோடு ராஜா, மிஸ்டர் ராமராயன்காரு முதலியவர்களே ஒரு காலத்தில் வகுப்புப் பிரதிநிதித்துவம் கெடுதியைச் செய் யுமெனக் கூறி யிருக்கின்றனர். ஆகவே, இத்தகைய ஏற்பாடு கள் இராஜாங்க அமைப்புகளுக்குப் பலமுள்ளதல்ல வென்ப தைக் காண்பிப்பதுடன், அவை இனி வரும் ஜன ஆட்சி முறைமைக்குத் தடங்கலாகவுமிருக்கும். இவ்விஷயங்களை மாக்மிலன் கம்பெனியாரால் பிரசுரிக்கப்போகும் 'இனி வரும் இந்திய இராஜாங்கம்' என்னும் புத்தகத்தில் பரக்கக் காண லாம்.

முற்றிற்று.

சுதேசமித்திரனாபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

ராஜீய விஷயமான புத்தகங்கள்.

			ரூ.	அ.	பை.
1	காங்கிரஸ் லீக் கோரிக்கைகளும் அதிகார வர்க்கத்தின் தவறும் ...	...	0	12	0
2	இந்தியாவின் கோரிக்கைகள்	...	0	8	0
3	பொதுவிஷய விளக்கம்	...	1	8	0
4	கோகலேயின் ஜீவிய சரித்திரம்	...	0	8	0
5	காந்தி	...	0	1	0
6	ஜீவவாக்கு ...	...	0	2	0
7	தாதாபாய் நௌரோஜி	...	0	3	0
8	ஸ்ரீமதி ஸரோஜினிதேவி	...	0	4	0

பண்டிட் நடேச சாஸ்திரியாரால் இயற்றப்பட்ட இனிய தமிழ் நாவல்கள்.

9	மிருச்சகடி ...	...	0	4	0
10	தானவன் ...	...	0	12	0
11	தலையணை மந்திரோபதேசம்	...	0	8	0
12	குமாரசம்பவம் ...	...	0	12	0
13	தீனதயாளு ...	...	0	6	0
14	ஷேக்ஸ்பியர் கதைகள்	...	0	6	0

அ. மாதவய்யாவால் இயற்றப்பட்ட புத்தகங்கள்.

15	திருமலை சேதுபதி ...	...	0	8	0
16	கல்யாணபாட்டு ...	...	0	2	0
17	இந்தியக்கும்மி ...	...	0	0	6
18	சத்கீத மஞ்சரி ...	...	0	4	0
19	சித்தார்த்தன் ...	...	0	12	0

சிறுவர்களுக்கான கதை புத்தகங்கள்.

20	ஹாஸ்ய மஞ்சரி ...	...	0	6	0
21	ஸலேமிரா ...	...	0	2	0

22	பெற்றமனம் பித்து	...	...	0	2	0
23	காதல் வெற்றி	...	...	0	4	0
24	முத்தின் மோகம்	...	...	0	1	0
25	விளையல் உடன்பாடு	...	...	0	2	0

ராமாயண பாகவத புத்தகங்கள்.

26	பாலராமாயணம்	...	...	0	12	0
27	ராமாயணசாரம்	...	...	1	0	0
28	பாகவதம் முதல் பாகம்		...	0	12	0
29	ஷை இரண்டாம் பாகம்		...	1	0	0

கதை புத்தகங்களும், இனிய தமிழ் நாவல்களும்.

30	குசாவதி ...	...	...	0	12	0
31	ஞான காந்தி	...	...	0	12	0
32	ஜானகிபரிணய நாடகம்		...	0	12	0
33	திருச்சுழியல் வெண்பா		...	0	8	0
34	சுந்தரவல்லி	...	...	0	8	0
35	பாரிசால் கொடுமைகள்		...	0	4	0
36	ஆரியகுமாரி	...	...	0	6	0
37	பீஷ்ம விஜயம்	...	...	0	8	0
38	லலிதா ...	...	...	0	4	0
39	ராஜப்பிரபா	...	...	0	6	0
40	சாதனு ...	...	...	0	6	0
41	பார்வதி கல்யாணம்	...	...	0	4	0
42	காதலி ...	...	...	0	12	0
43	திருமயிலைச் சிறப்பு	...	...	0	2	0
44	கமலாசாகரன்	...	...	0	2	0
45	க்ஷத்திரிய ரமணி	...	...	0	2	0
46	ராமநாதன்	...	...	0	2	0
47	அம்புஜா	...	...	0	2	0
48	அனுமப் பிரபாவம்	...	...	0	8	0
49	கிரிஸெல்டா	...	...	0	3	0
50	தேடாத செல்வம்	...	...	0	3	0
51	பிரபாவதி	...	...	0	4	0
52	மீனா ...	...	...	0	6	0
53	ஷேக்ஸ்பியர் Vol 1.		...	0	6	0

54	லோபி	0	6	0
55	ஜெகஜ்ஜோதி	0	8	0
56	இயற்கை அற்புதங்கள்... ...	0	8	0
57	த்ரௌபதி	0	8	0
58	ராஜம் ஐயர் சரிதை	0	8	0
59	ஹரிமார்ஜனை	0	8	0
60	ஒட்டக் கூத்தர் சரித்திரம் ...	0	8	0
61	ஸர்க்குண சந்திரன்	0	10	0
62	முரளி தரன்	0	10	0
63	ரோஜா	0	10	0
64	செல்வராஜன்	0	12	0
65	வியாசவிதானம்	0	12	0
66	ஔவை	0	6	0
67	காரைக்காலம்மை சரித்திரம் ...	0	1	0
68	சாதிறு கனியின் ஜீவிய சரிதை ...	0	8	0

சங்கீதம்.

ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கீர்த்தனைகள் 4 பாகங்கள் கொண்ட செட் 1-க்கு ... 3 0 0

புத்தகம் வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்,

சுதேசமித்திரன் ஆபீஸ்,

சென்னை.

"சுதேசமித்திரன்" சந்தா விகிதம்.

தினப் பதிப்பு.

	ரூ.	அ.	ப.
வருஷம் 1-க்கு	18	0	0
6-மாதங்களுக்கு	9	8	0
3 „	5	0	0
1-மாதத்திற்கு	1	12	0
உள்ளூருக்கு மாதம் 1-க்கு	1	8	0

ஒரு வருஷ சந்தாவாகக் கட்டினால் சகாயமிருப்பதை கவனிக்கவும். மேல்கண்டபடி தொகை அனுப்பினால் தான் மேல்கண்ட மாதங்களுக்கு வரவு வைத்துக் கொள்ளப்படும்.

பினாங்கு, முதலிய வெளி நாடுகளுக்கு தினப் பதிப்புக்கு வருஷம் 1-க்கு ரூ. 24 வாரம் மும்முறைக்கு ரூபா 18 0 0.

"சுதேசமித்திரன்" சந்தா விகிதம்.

மும்முறை பதிப்பு.

	ரூ.	அ.	ப
வருஷம் 1-க்கு	10	0	0
6-மாதங்களுக்கு	5	8	0
3 „	3	0	0
1-மாதத்திற்கு	1	4	0
உள்ளூருக்கு மாதம் 1-க்கு ...	1	0	0

ஒரு வருஷ சந்தாவாகக் கட்டினால் சகாயமிருப்பதை கவனிக்கவும். மேல்கண்டபடி தொகை அனுப்பினால் தான் மேல்கண்ட மாதங்களுக்கு வரவு வைத்துக் கொள்ளப்படும்.

பினாங்கு, முதலிய வெளி நாடுகளுக்கு தினப் பதிப்புக்கு வருஷம் 1-க்கு ரூபா 24 வாரம் மும்முறைக்கு ரூபா 18 0 0.

The Swadesamitran Power Press Madras.